உ

ஸ்ரீ அபீதகுசாம்பா ஸமேத ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் துணை

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் அருளிய

# சிவபுராணம்

விளக்க நூல்

**"திரவிடாச்சார்யார்"**

**ஸ்ரீ இராமக்கிருஷ்ணன் ஸ்வாமிஜி**

# ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் அருளிய சிவபுராணம்

## விளக்கம் எழுதியவர்

## “திரவிடாச்சார்யார்” ஸ்ரீ இராமக்கிருஷ்ணன் ஸ்வாமிஜி

**பக்கம் : 131**

முதற்பதிப்பு : **2018**

**கிடைக்குமிடம்:**

**Shastra Nethralaya**
No.1 Atma Vigyan Bhavan
Baba Kali Kambli
Ramnagar, Pashulok Post
Rishikesh, Uttarakhand – 249 201
India

**Shastra Nethralaya**
39/9, Shri Acharya Nagar
Teerthamalai Village
Poyyaapatti Panchayat
Harur Taluk
Dharmapuri District
TamilNadu 636 906
India

**Printed By**
**Aridra Printers,**
Bangalore. Ph 080 – 23346025
aridraprinters@gmail.com



அருள்மிகு மாணிக்கவாசகப் பெருமான்

அருளிய

# சிவபுராணம்

# சிவபுராணம்

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் அருளிய சிவபுராணம், திருவாசகம் எனும் எட்டாம் திருமுறையில் மிக முக்கியமான ஒன்றாகச் சான்றோர்களால் ஏற்கப்படுகிறது. 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது ஆன்றோர் வாக்கு. திருவாசகப் பாடல்கள் பல்வேறு காலகட்டங்களில் பாடப்பட்டவையாக இருந்தாலும், சிவபுராணத்தை முதன்மையாகவும் முக்கியமானதாகவும் அச்சிடுவதும் ஓதுவதும் இதன் மேன்மையைக் குறிக்கிறது.

திருவாசகம் முற்றோதல் தினமும் செய்யமுடியாத பலரும் சில குறிப்பிட்ட பாடல்களை மட்டும் தினமும் ஓதும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். அதில் இந்த சிவபுராணம் ஒன்றாக இருக்கிறது. மேலும் இவைகளை குறித்த எந்த ஒரு அறிவும் இல்லாத பொழுதும், பலரும் சிவபுராணத்தின் பால் ஈர்க்கப்பட்டு இதனைத் தினமும் ஓதும் பழக்கத்தை கொண்டுள்ளனர்.

இவ்வளவு பெருமை மிக்க இந்த பாடலுக்கு நல்ல ஒரு விளக்கவுரை காணப்படாதது வருத்தமளிக்கிறது.

தக்ஷிண சைவ சித்தாந்தம் எனும் தெற்கத்திய சைவ சித்தாந்தத்தில் ஏற்கப்படும் அறுபத்து மூவரில் மாணிக்கவாசகர் இல்லாமல் இருந்தாலும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகிய நால்வரில் மிக முக்கிய அந்தஸ்து வகிக்கின்றார்.

இந்த நான்கு பேரில் மாணிக்கவாசகரின் படைப்புகள் அதிக அளவு வேதாந்த அடிப்படையில் இருப்பது மிகவும் தெளிவாக காணப்படுகிறது. இந்த காரணத்தினால்தான் அறுபத்துமூவரில் அவர் இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

## சித்தாந்தம் – வேதாந்தம் – ஒரு குறிப்பு

"சைவ சித்தாந்தம்" சுருக்கமாக "சித்தாந்தம்" என்று கூறப்படுகிறது. சித்தாந்தம் என்றால் **सिद्ध अन्तम् एषाम्** "சித்த அந்தம் ஏஷாம்" என்ற இலக்கண குறிப்பின்படி எது கடைநிலைத் தத்துவமாக ஏற்கப்படுகிறதோ அதுவே ஆகும். அந்த வகையில் சாங்கியருக்கு சாங்கியம் சித்தாந்தம், யோகிகளுக்கு யோகம், நாத்திகருக்கு நாத்திகம், தார்க்கிகளுக்குத் தர்க்கம், வேதாந்திகளுக்கு வேதாந்தம் என ஒவ்வொருவர் ஏற்கும் தீர்மானமான முடிவும் சித்தாந்தமாகும். இப்படி இருந்தாலும் **रूढि अर्थ** "ரூடி அர்த்தம்" என்பதான பொதுவான உலக வழக்கில் சித்தாந்தம் என்பது சைவ நெறியைக் குறிப்பதாகவே உள்ளது.

உதாரணத்திற்குப் பங்கஜம் என்ற சொல்லின் பொருள் **पङ्कात् जातम्** "பங்காத் ஜாதம்" - சேற்றில் தோன்றியது, என்பது ஆகும். ஆனால் சேற்றில் தவளை மீன் முதலியவை தோன்றினாலும் உலக வழக்கில் பங்கஜம் என்ற சொல் தாமரையை குறிக்கிறது. அப்படியே இங்கும் சித்தாந்தம் என்பதை அறிய வேண்டும்.

சித்தாந்தம் அடிப்படையில் இருந்தாலும் ஆகம கிரந்தங்களை அதிகம் சார்ந்ததாகவே ஏற்கின்றனர். பொதுவாக வேதம் மற்றும் ஆகமம் என்பது ஒரு பொருள்படும் பல சொற்களாக கருதப்படுகிறது. அப்படியிருந்தாலும் இங்கு **शिव मुखात् आगतः देवी कर्णे गतः** "சிவ முகாத் ஆகத தேவி கர்னே கத" - சிவன திருவாயிலிருந்து தோன்றியது, தேவி காதுகளில் விழுந்தது, என்ற பொருளில் ஏற்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் வேதாகமம் என்பது பொருந்தாச் சொல் என்பதும் தெளிவு. வேதாந்திகளுக்கு வேதம் மட்டுமே அடிப்படையாக ஏற்கப்படுகிறது. சைவ நெறிப்படி வேதமும் சிவனின் திருவாயிலிருந்து வந்தது என்று ஏற்கப்படுகிறது.

இதற்கு, **तस्य निश्वसितम् एतद् ऋग् वेद** "தஸ்ய நிஷ்வஸிதம் ஏதத் ரிக்வேத" - அவருடைய மூச்சுக் காற்றாக ரிக் வேதம் முதலியவை தோன்றியது; **ऋच सामानि जज्ञिरे** "ரிச சாமானி ஜஞிரே" - ரிக் மற்றும் சாம வேதங்கள் தோன்றியது என்பதான வேதவாக்கியம் பிரமாணமாக காண்பிக்கப்படுகிறது. வேதாந்திகள், வேதம் **अपौरुषेय वाक्यम्** "அபௌருஷேய வாக்கியம்" - யாராலும் எழுதப்படாத வாக்கியம் வேதம் என்று பொதுவாக ஏற்கின்றனர்.

இதற்குக் காரணம், வேதமே நமக்கு ஈஸ்வரனை குறித்தும் அவர் பெருமைகளைக் குறித்தும் கூறுகிறது. இந்த நிலையில், ஈஸ்வரன் இருப்பதற்கு வேதம் பிரமாணம் என்றும், வேதத்தை ஈஸ்வரன் இயற்றினார் என்றும் கூறுவது முரணாக இருக்கும். பிராமணர் முதலிய வர்ணம், மற்றும் பிரம்மச்சாரி முதலிய ஆசிரம தர்மங்களை எழுதியது பிராமணர்களே என்று அறிவிலிகளின் வாதம் போன்றதாக அமையும். ஈஸ்வரனுக்கு வேதம் பிரமாணம், வேதத்திற்கு ஈஸ்வரன் பிரமாணம் என்பது **अन्योन्याश्रय दोषः** அந்நியோன்னியாச்ரய தோஷம் (ஒன்றை மற்றொன்று சார்வது) ஆகும்.

அடுத்து, சைவசித்தாந்தத்தில் ஈஸ்வரனும் ஜீவனும் (பதியும் பசுவும்) வெவ்வேறாக ஏற்கப்படுகின்றன. காஷ்மீர சைவ சித்தாந்தத்தில் ஈஸ்வரனை அன்றி வேறொன்றும் இல்லை என்று ஏற்கின்றனர் என்பது சிறப்பு. வேதாந்திகளுக்கு பிரம்மத்தைத் தவிர வேறொன்றும் இல்லை என்பது முடிவு. ஈஸ்வரனும் ஜீவனும் இந்த பிரம்மத்தில் தோற்றங்களாக மட்டுமே என்று ஏற்கப்படுகிறது.

ஈஸ்வரனை சகுண பிரம்மம் - குணங்கள் கூடிய பிரம்மம் என்றும், சில இடங்களில் நிர்குண பிரம்மத்தையே (அதாவது குணங்களற்ற பிரம்மத்தையே) ஈஸ்வரன் என்றும் குறிப்பது உண்டு. இப்படி ஒரு இடத்தில் பிரம்மம் எனவும் மற்ற இடத்தில் சிவன் எனவும் கூறப்படுதல் மட்டுமே வேற்றுமை கிடையாது. பிரம்மம் குணங்கள் அற்றது, செயல்கள் அற்றது என்பதால்

சிருஷ்டியோ அதனைத் தொடர்ந்து எந்தவொரு ஐந்தொழிலையோ மற்ற (ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், அனுக்ரஹம் மற்றும் நிக்ரஹம் - படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் மற்றும் தடுத்தல்) கர்மத்தையோ செய்வது இயலாது. இதனால், காஷ்மீர சைவ சித்தாந்திகள் சிவன் செயல் உடையவராக ஏற்கின்றனர் (ஸ்பந்தம் - அதிர்வு).

இப்படி படைத்தல் முதலிய தொழிலுக்காக செயல் ஏற்றாலும், செயல் என்பது ஒரு வரையறையாக இருக்கும். எந்த ஒரு வரையறையும் வரையறுக்கப்பட்டதை அநித்தியமாக - நிலை அற்றதாக, ஆக்கும். ஈஸ்வரன் நிலையற்றவர் என்பதை ஏற்க இயலாது. செயலற்ற பிரம்மம் எவ்வாறு ஸ்ருஷ்டி முதலிய தொழிலைச் செய்யும் என்றால், ஸ்ருஷ்டியை வேதாந்தம் தோற்ற மாத்திரமாக ஏற்கின்ற காரணத்தால் இந்தக் கேள்வி பொருந்தாது போகிறது.

நிற்க, இப்படி தொழில் என்கின்ற வரையறை மட்டுமே ஈஸ்வரனை அநித்தியமாக ஆக்கும் நிலையில், ஜீவனும் ஈஸ்வரனும் வெவ்வேறு என்று ஏற்பதால் உண்டாகும் குறைகளை கூறவும் வேண்டுமோ?

இப்படிப் பல வேற்றுமைகளை நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். அப்படி அவசியமான, விளக்கப்பட வேண்டிய வேற்றுமைகளை, பாட்டுக்கு விளக்கம் கூறும் இடங்களில் தெளிவாக அவசியமான வரையில் காண்போம்.

இங்கு இந்த நூல் வேதாந்த அடிப்படையில் இருப்பதாலும், கூறப்பட்ட சொற்களில், பல சம்ஸ்கிருத சொற்கள் இருப்பது தெளிவாக காணப்படுவதாலும் இந்த விளக்கவுரையில் சம்ஸ்கிருத சொற்களின் விளக்கத்தோடும், எந்த வேதாந்த வாக்கியத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்பதையும் கூறி தெளிவாக விளக்குவது பொருத்தமாக இருக்கும்.

# தமிழும் சமஸ்கிருதமும் - ஓர் பார்வை

தமிழில் எழுதப்பட்டதாக ஏற்கப்படும் நூலில் சமஸ்கிருத திணிப்பின் அவசியம் என்ன என்ற கேள்விக்குப் பதில், மொழி கொண்டு அரசியல் செய்யப்படாத காலகட்டத்தில் எழுதப்பட்ட நூல் இது என்பது மட்டுமே போதும்.

இருந்தாலும், இது தூய தமிழ்நூலாக இல்லாமல் “மணிப்பிரவாளம்” என்ற சமஸ்கிருதம் கலந்த தமிழ் வடிவமாக இருப்பது காணப்படுகிறது. உதாரணத்திற்கு, " நேயத்தே நின்ற" , " ஏகன் அநேகன்", " விமலா", "ஆரியனே" போன்ற சொற்களை கூறலாம். துவங்குவதே “நமஹ” என்ற சொல் கொண்டு என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். மேலும், தூயதமிழில் எழுதப்பட்ட நூல்களுக்கு, "தமிழில்" விளக்கம் எழுத வேண்டிய வேதனையான காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். "இந்த நீரை, குடிக்க பாவிக்க வேண்டாம்" என்று எழுதப்பட்ட வாசகத்திற்கும் கோனார் விளக்கவுரை தேடும் காலம் இது. இந்தக் கோனாருக்கும் மேனார் அல்லது மோனார் இப்படி விளக்கவுரைகள் அவசியம் உள்ளவர்களும் இங்கு உண்டு.

தென் திசையில் திராவிட தேசங்களான ஐந்திலும் தமிழே பிரதானமாக உபயோகிக்கப்பட்ட காலத்திலும் சம்ஸ்கிருதமும் அதிகமாக பழக்கத்தில் இருந்திருப்பது தெரிகிறது. தமிழ் என்கிற சொல் ' திரவிட' என்ற சொல்லின் மரூஉ என்று கையடர் என்ற பாணினி இலக்கணத்தின் பதஞ்சலியின் மகாபாஷ்யம் என்கிற விளக்கவுரை உரை எழுதியவர் கூறுகிறார்.

அதாவது, 'திரவிட' என்பது 'திரமிட' என்றும், பின்னர் 'த்ர' வில் உள்ள 'ர' இழந்து 'தமிட' என்றும். **लडयोरभेदात्** "லடயோர் அபேதாத்" என்ற இலக்கண குறிப்புபடி ல மற்றும் ட வில் வேற்றுமையற்ற நிலை ஏற்கப்பட்டு, தமிழ் என்று ஆகிறது. **अग्निमीडे** "அக்னிமீடே", **हरिमीडे** "ஹரிமீடே" போன்ற

மந்திரங்களில் உள்ள ட என்ற எழுத்து ழ என்றும் உச்சரிக்கப்படுவது இதற்குச் சான்று.

திராவிட என்ற சொல்லிற்கு பாசமுடையவன், மூன்று புறங்களிலும் கடல் சூழப்பட்ட, திர என்றால் ஒழுகி ஓடும், அதாவது நீர், மிட – வணங்கும், முப்புறமும் மிகையாக இருக்கும் நீரை வாங்குபவர் என்று பொருள்.

பாணினி இலக்கணம் தொல்காப்பியர் இலக்கணத்தினை ஒட்டியதாக ஏற்கப்படுகிறது. மேலும் இதற்கு விளக்கவுரை எழுதிய பதஞ்சலி முனிவருக்கு சமாதியும் திருச்சி அருகே உள்ள திருப்பட்டூர் என்கிற இடத்தில் இருப்பதும், இவருக்குச் சிதம்பரம் மற்றும் ராமேஸ்வரம் ஆகிய கோவில்களில் தனியாக சந்நிதி அமைந்திருப்பதும் இப்படிப்பட்ட காழ்ப்புணர்ச்சி இல்லாத காலகட்டத்தைக் காண்பிக்கிறது.

சம்ஸ்கிருத மொழியானது தேவபாஷை என்பது போல, தமிழும் தெய்வ மொழியாகவே ஏற்கப்படுகிறது. தமிழ் தோன்றியது தமிழ் கடவுள் முருகப்பெருமான் இடத்திலிருந்து என்பதே இதற்கு மேற்கோள். கடவுளையும் தமிழையும் பிரித்தல் இயலாது என்பதாலேயே "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று வள்ளுவர் பெருந்தகையும் **अकारो वै सर्वा वाक्** "அகாரோ வை சர்வா வாக்" என்ற வேதவாக்கியம் அடிப்படையிலான குரல் மூலமாக சுட்டிக் காட்டி நமக்கு நினைவுபடுத்துகிறார்.

தேவபாஷையும் தெய்வ மொழியும் வெவ்வேறு அல்ல என்பதை கூறவும் வேண்டுமோ? தமிழ் என்பது கலாசார அடிப்படையில் இருப்பதாகவும் சம்ஸ்கிருதம் என்பது இலக்கியம் மற்றும் ஆன்மீக அடிப்படையில் இருப்பதாகவும் காணப்படுகிறது. தமிழ்க் கலாசாரம் காணப்படும் இலங்கை, இந்தோனேசியா போன்ற இடங்களிலும் சம்ஸ்கிருத மொழியின் தாக்கம் அதிக அளவில் இன்றும் காணப்படுகிறது.

ஆரியர் - திராவிட வேற்றுமை எனும் மாயத்தோற்றத்திற்கு அடிமைகளாக இருப்பது நமது சிற்றறிவையே குறிக்கிறது. அப்படிப் மாணிக்கவாசகப் பெருந்தகை போன்றோர் இந்த விஷயத்தில் இதற்கும் ஆதாரமாக நமக்கு விளங்குகின்றனர். "கோகழி ஆண்ட குருமணி" என்று தன்னுடைய அந்தணக் குருவை வணங்குவதே இதற்கு உதாரணம். மேலும் "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" என்பதும் இங்கு கருதப்படவேண்டும்.

ஆரியர் என்பது மேன்மையானவர், மதிப்பிற்குரியவர் என்ற பொருளிலேயே உபயோகிக்கபடுகின்றது. இராமாயணத்தில் சீதை இராமபிரானை ஆரியன் என்றே விளிக்கிறாள். ஆரியர் என்பவர்கள் 'வந்தேறிகளாக' இருக்கும் நிலையில் சமஸ்கிருத மொழியானது அது தோன்றிப் இடத்தில் இருக்க வேண்டும் என்பதுடன் அவர்களின் மரபணு இங்கு இருப்பவர்களிடம் காணப்படவேண்டும் என்பது போன்ற பல குறைகள் நிறைந்த ஒரு கட்டுக்கதை என்பதை தெளிவாக்கும் சான்றுகளாக அறிஞர்கள் ஏற்பர். மேலும், "குருமணி" "குறுமிளகு" என்பதிலுள்ள 'கு' வின் வேற்றுமை அறிய இயலாத நிலையில் தமிழை நாம் வளர்க்கின்றோமா அல்லது அழிக்கின்றோமா என்பது கண்கூடாக தெரிகிறது.

## திருமுறை --- ஒரு குறிப்பு

தமிழில் திருமுறை ஆசிரியர்கள் எழுதிய நூல்கள் 12 திருமுறை என்று போற்றப்படுகிறது. அவையாவன -

- ஞானசம்பந்தரின் திருக்கடைக்காப்பு முதல், இரண்டு மற்றும் மூன்றாம் திருமுறை.
- நாவுக்கரசரின் தேவாரம் நான்கு , ஐந்து மற்றும் ஆறாம் திருமுறை சுந்தரரின் திருப்பாட்டு ஏழாம் திருமுறை

- மாணிக்கவாசகரின் திருவாசகம் மற்றும் திருக்கோவையார் எட்டாம் திருமுறை
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை
- திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறை
- மற்றவர்களில் பல்வேறு பாடல்கள் பதினொன்றாம் திருமுறை
- சேக்கிழார் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை.

## மாணிக்கவாசகர் - சிறு குறிப்பு

மாணிக்கவாசகர் மதுரையை அடுத்த வாதவூர் என்கிற இடத்தில் அவதரித்தார். ஆமாத்ய பிராமண குலத்தில் தோன்றிய இவர் தன்னுடைய ஊர் பெயரான வாதவூர் என்கிற பெயரினாலேயே வாதவூரார் என்று அறியப்படுகிறார். கல்வி கேள்வியில் சிறந்து விளங்கிய இவர் அரசன் வரகுணபாண்டியனின் மந்திரியாக இருந்திருக்கிறார்.

தனுர் வேதம் எனும் போர்க் கலையினை குறித்து அறிவினை தரும் உபவேதத்திலே சிறந்த அறிவு பெற்றிருந்த காரணத்தால் அதுதொடர்பான போர் கருவிகள் மற்றும் யானை, குதிரை போன்றவற்றின் விஷேச அறிவு இவரிடம் காணப்பட்டது. இதனை உணர்ந்த பாண்டிய அரசன் இவரிடம் குதிரைப்படைக்குத் தேவையான குதிரைகளைக் கீழக்கரையில் வந்திறங்கிய வியாபாரிகளிடம் வாங்கிவரப் பெரும் செல்வத்துடன் அனுப்பிவைத்தான். இந்த பல்வேறு குதிரைகளும் அதன் லட்சணங்களுடன் திருப்பெருந்துறை கோவிலில் சிற்பமாக இன்றும் காணப்படுகிறது.

பொருளுடனும் படையுடனும் மதுரையை விட்டு கிளம்பிய வாதவூராருக்கு காத்துக்கிடக்கும் பேரின்பத்தைக் குறித்து ஒன்றும் தெரியாது. ஆனால், அதன் தேடலில் அவர்

இருந்துள்ளார் என்பதும், அவருடைய வைராக்கியத்தின் திடத்தையும் இந்த பாடல்களில் காண முடிகிறது.

கோகழி எனப்படும் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் தன்னுடைய சீடர்களுடன் இருக்கும் குருவைக் கண்ட மாத்திரத்திலேயே, தான் மதுரையை விட்டு கிளம்பிய காரணத்தை மறந்தார், மதுரையை மறந்தார், மற்ற எல்லாவற்றையும் மறந்தார். தானும் அந்த சீடர்களில் சீடனாய் இருந்து அந்த குருவினால் ஆகமங்களில் கூறப்படும் தீக்ஷைகளையும் அதனில் கூறப்பட்ட உட்கருத்தையும் அறிந்தார். ஆகமங்களில் ஸ்பர்ஷ தீக்ஷை, சக்ஷு தீக்ஷை முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன. இதனைக் காட்டிலும் முக்கியமானது அந்த குருவின் திருவார்த்தை கேட்டல். அப்படிப்பட்ட வேதாந்த உட்கருத்தையும் அவர் திருப்பாதங்கள் கீழ் அமர்ந்து கேட்டறிந்தார். அறிந்ததை உணரவும் செய்தார். இப்பாடலில் கடையில் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார்" எனக் குறிப்பிடுகின்றார். தன்னை தடுத்தாட்கொண்டு அங்கிருந்து மறைந்த குரு ஈசனே என்று அறிந்தார்.

இப்படி மேன்மையான செயலான குருசேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் இத்திருத்தலத்தில் ஒரு கோவிலையும் அமைக்க திருவுள்ளம் கொண்டார். இன்றும் இந்தக் கோவிலுக்கு நிகரான கோவிலை கட்டுதல் இயலாது. இந்த நிலை கோவில் கட்டும் பகுதிகளில் ஒப்பந்தத்தின் நியமமான 'திருபெருந்துறை கோவில் மேற்கூரை போலச்செய்தல் இயலாது' என்பதான வாக்கியத்தால் அறியலாம்.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் கட்டிய கோவிலில் சிறப்பு என்னவன்றால் இது ஏழு பிராகாரங்கள் உள்ள ஒரு கோவில். குண்டலினி சக்தி 7 சக்கரங்களை ஏற்பது போல, இங்கு ஏழு பிராகாரங்கள் உள்ளது. குண்டலினியின் ஏழாவது சக்கரம் சிவனோடு சக்தியின் ஐக்கியம் கூறப்பட்டுள்ளது. இங்கு

ஏழாவது பிராகாரத்தில் லிங்கம் இல்லாத ஆவுடை மட்டுமே பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவுடையார் மட்டுமே இருப்பதே இந்தக் கோவிலுக்கு ஆவுடையார்கோவில் என்ற பெயர் வரக் காரணமாகிறது. மற்றொரு காரணம், இங்கு கோவிலின் உட்பிராகாரத்தில் நைவேதியம் புழுங்கல் அரிசி சாதமாக உள்ளது. வடிக்கப்பட்ட அந்த சூடான சாதத்தை பீடத்தில் கொட்டி அந்த ஆவி பறக்க விடுவது நைவேத்தியமாக காணப்படுவதால் ஆவுடையார் = ஆவி + உடையார் என்று பெயராகிறது.

இந்த கோவிலில் சிவன் அருவுருவமாக இருக்கிறார். பார்வதி தேவியும் முழு உருவமாக காட்சி தராமல் பாதம் மட்டுமே வணங்குவதற்கான உருவமாக உள்ளார். கோவில் பிராகாரத்தில் மாணிக்கவாசகர் முழு உருவம் கூடியதான சன்னதி உள்ளது. முதல் பிராகாரத்தில் முன்னால் கூறிய மேற்கூரை வடிவமைப்பு பிரமிப்பூட்டுவதாக உள்ளது. இங்கு நவக்கிரகம் நேராக அமைந்திருப்பது சிறப்பு. நாம் நிற்கும் இடத்திலிருந்து எந்த திசையில் இறைவனின் சன்னதி இருந்தாலும், நமது நிழலானது இறைவன்மேல் படுவது மற்றொரு விசேஷம்.

பல சிறப்புகள் கூடிய, வாழ்க்கையில் காணப்பட வேண்டியதான ஒரு கோவிலாக இது இருக்கிறது.

பாண்டியன் ஒற்றர்கள் மூலம் பெருந்துறையில் நடக்கும் செய்திகள் அறிந்தான். விஷயத்தை அறிந்த அவன் வாதவூராரை மதுரை திரும்பி வருமாறு பணித்தான். இத்தருணத்தில் வாதவூரார், தன்னுடைய குருவான ஈசன் ஆணைக்கு இணங்க அவரைக் குறித்து பாடல்கள் பாடுவதிலும், கோவில் அமைப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். மணி போன்ற வாசகங்கள் கொண்ட பாடல்களை புனைந்ததால் வாதவூரார் மாணிக்கவாசகர் ஆனார். அரசனின் ஆணையை ஏற்கமறுப்பது இயலாத

காரணத்தால், மிகுந்த பயத்துடன் மீண்டும் மதுரை திரும்பிக் கொண்டிருந்தார்.

மிகுந்த பயத்துடன் மாணிக்கவாசகர் திரும்பிக் கொண்டிருந்த நிலையில், மேலூர் கோவில் திண்ணையில் தன் நிலை குறித்து சிந்தித்தவாறு படுத்தார் அவர். அப்பொழுது ஈசன் அவர் கனவில் தோன்றி 'அரசரிடம் இங்கிருக்கும் இந்த விலைமதிப்பில்லா மணியை கொடுத்து, மூல நட்சத்திரத்தன்று குதிரைகள் வந்து சேரும்' என்று கூறப் பணித்தார். கண் விழித்த மாணிக்கவாசகர் இறைவன் கூறிய இடத்தில் ஒப்பற்ற மணி இருந்தது கண்டு, ஆறுதலடைந்து இறைவன் பணித்தது போன்று பயம் ஒழித்துச் செய்யத் துணிந்தார்.

மாணிக்கவாசகர் இவ்வாறு மணியைத் தந்து கூறிய கதையை ஏற்க மறுத்தாலும் மணியின் விலைமதிப்பற்ற தன்மையை ஆய்ந்தறிந்து இதில் உண்மை இருக்குமோ என்று சந்தேகம் கொண்டான் அரசன். தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள சிறந்த ஒற்றர்களைத் தேர்ந்தெடுத்து உடனே திருப்பெருந்துறையில் நடந்தவற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள அனுப்பினான். கிடைத்த தகவல் நேர்மாறாக இருத்தல் கண்டு சினமுற்ற அரசன் மாணிக்கவாசகரை சிறையில் அடைத்து பல துன்பங்களுக்கு ஆளாக்கினான்.

இது இப்படி இருக்க, குறித்த மூல நட்சத்திரத்தன்று காட்டிலுள்ள நரியைப் பரியாக்கி தன்னுடைய தலைமையில் அந்த குதிரைகளைக் கொண்டுவந்து இறைவன் சேர்த்தார். வந்து சேர்ந்த குதிரைகள் அவ்வளவும் மிகச்சிறந்த லட்சணங்கள் (சுழிகள் என்பர்) பொருந்தியதாக இருந்ததைக் கண்டு வியந்த அரசன் அதனை கொண்டு வந்தவருக்கு (ஈசனுக்கு) நல்ல வகையில் தகுந்த சன்மானங்கள் கொடுத்து அனுப்பினான். தன் தவறை உணர்ந்தவனாக சிறையிலிருந்து மாணிக்கவாசகரையும் உடனடியாக விடுவித்து பலவாறாக அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டான்.

தன்னுடைய குதிரைத் தொழுவத்தில் மற்ற நல்ல உயர்ந்த லட்சணங்கள் பொருந்திய குதிரைகளைக் காட்டிலும் இந்த குதிரைகள் இருப்பதை கண்டு அதனை அங்கேயே கட்டிவைக்கப் பணித்தான். பகற்பொழுதில் அக்குதிரைகளுக்குச் சேவகம் செய்தவர்களிடமும் அக்குதிரைகளின் மேன்மையான தன்மைகளைக் கேட்டு ஆனந்தம் கொண்டான்.

பகல் இரவானது. நடுநிசியில் அந்தக் குதிரைகள் எல்லாம் மீண்டும் நரிகளாக மாறி தொழுவத்தில் இருந்த மற்ற குதிரைகளையும் கடித்துக் கொன்றுவிட்டுக் காட்டிற்குச் சென்று மறைந்தது. இந்த விஷயத்தை கேட்ட அரசனுக்கு இது எல்லாம் மாணிக்கவாசகரின் சித்து விளையாட்டு என்ற எண்ணம் தோன்ற, மீண்டும் அவரைச் சிறையில் அடைத்து, பல சொல்லொணாத் துன்பங்கள் கொடுத்தான்.

மாணிக்கவாசகரின் பெருமைகளை உலகு உணர, தக்க தருணம் வந்து விட்டது என்று ஈசன் தீர்மானித்து, அதன் காரணமாகத் தன்னுடைய திருவிளையாடலைத் துவங்கினார். திருவிளையாடல் காரணமாக வைகை ஆறு பெருக்கெடுத்து ஓடத்துவங்கியது. பல இடங்களில் கரை உடைந்து மதுரையே வெள்ளக்காடாக மாறியது. இதனை அறிந்த அரசன் வீட்டிற்கு ஒருவராக கரையைச் செப்பனிட ஆட்களை அனுப்பும்படி ஆணை பிறப்பித்தான்.

அதே மதுரையில் பிட்டுவணி அம்மையார் என்கிற வயதான பாட்டி ஒருத்தியும் தன்னுடைய வாழ்க்கையை இறைபக்தியுடன் பிட்டு விற்று வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்காக வேலை செய்ய ஒருவரும் இல்லாத நிலையில் வேறொருவரை பணியில் அமர்த்தவும் பணமில்லாது ஆணையை மீறும் துணிவும் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய திருவிளையாடலில் தானே பங்கெடுக்கத் தீர்மானம் கொண்ட இறைவன் கூலி ஆளாக அந்த பாட்டி முன்பு தோன்றினார். பணமில்லாத கிழவியிடம்

பிட்டுக்கு மண் சுமக்க ஒப்பந்தம் செய்துகொண்டார். ஒப்பந்தப்படி பாட்டியும் பிட்டு சமைக்க, ஒரு பிட்டுகூட முழுவதாக வரவில்லை. அதனால் உடைந்த விள்ளைகளான அந்த பிட்டை கூலியாக பாட்டி கொடுத்தார்.

வயிராற பிட்டைத் தின்றுவிட்டு இறைவனும் அணை கட்டும் இடத்திற்கு சென்றார். அங்கு சென்று, பணியைச் செய்யும் மற்றவருக்கும் இடையூறாகவும், சில நேரம் அங்கிருந்த திண்ணையில் தூங்கியும் பொழுதைக் கழித்தார். மேற்பார்வையிட வந்த அரசன் பாட்டிக்குக் கொடுக்கப்பட்ட பங்கு அடைக்கப்படாமல் இருந்தது கண்டு சினமுற்றார். அவள் சார்பாக வந்த கூலியின் சேட்டைகளைக் கேட்டு மிகுந்த கோபத்துடன் அவனை அழைத்து வந்த அரசன் அந்தக் கூலியின் முதுகில் பிறம்படி கொடுத்தான். ஆனால், பிறம்படி அந்த கூலியைத் தவிர அரசன் உட்பட எல்லா ஜீவராசிக்கும் விழுந்ததறிந்து, வந்தது சாதாரணன் அல்ல என்று உணர்ந்தான். கூலியாள் இறைவனாக அவன் முன் காட்சி அளித்தது கண்டு மயிர்க்கூச்செரிந்தான்.

இறைவன் அரசனிடம் "மாணிக்கவாசகன் என் பக்தன். அவன் பொருட்டே இந்தத் திருவிளையாடல். உடனே அவனை சரணடைவாயாக" என்று பணித்து மறைந்தார். பிட்டுவணித் தாயாரும் புஷ்பக விமானத்தில் கயிலாயம் சென்றார். இதனைக் கண்ட அரசன் அந்த நிமிடமே மாணிக்கவாசகர் இருந்த இடம் சென்று அவரைச் சரணடைந்தார். அரசனாக இருந்து ஆட்சி புரிய வேண்டினார். மாணிக்கவாசகரோ, அரசனிடம் ராஜ்ஜிய பதவியை ஏற்க மறுத்துவிட்டுச் சன்யாசம் ஏற்றுகொண்டார். பல திருத்தலங்களையும் கண்டு, பின்னர் தன்னுடைய வாழ்க்கையின் இறுதிக் காலத்தைச் சிதம்பரத்தில் கழிக்கச் சித்தமானார். அங்கு அச்சோ பதிகத்தைப் பாடியவாறு இறைவனின் ஜோதியில் இரண்டறக் கலந்தார்.

## சிவபுராணம் - சிறு குறிப்பு

துவக்கத்திலே கூறியபடி இச்சிவபுராணம் வேதாந்தக் கருத்துக்களைப் போதிப்பதாக உள்ளது. வேதாந்தத்தில் ஞானம் மட்டுமே மோக்ஷத்திற்குக் காரணமாக ஏற்கப்படுகிறது. இங்கு அந்த ஞானமே சிவனாக உருவகப்படுத்தபட்டுள்ளது.

ஞானம் இரண்டு வகை, ஒன்று சொரூபம் மற்றொன்று விருத்திரூபம். சொரூபமான ஞானமே பிரம்மம் எனப்படுகிறது. இந்த சொரூபமான ஞானம் நம் விசாரத் தெளிவினால் அகண்டாகார விருத்தியாக தோன்றும் பொழுது அது அறியாமையை நீக்க வல்லதாக ஆகிறது. அறியாமை, சொரூப ஞானத்திற்கு விரோதி அல்ல. அவ்வாறு விரோதியானால் அறியாமையே இருத்தல் இயலாது. அதனால், விருத்தி ஞானம் மட்டுமே அஞ்ஞானத்திற்கு விரோதியாக ஏற்கப்படுகிறது. இந்த விருத்தி ஞானத்தையே மாணிக்கவாசகர் திருவடிக் காட்சியாகக் கூறுகிறார்.

வேதாந்தத்தில் ஒரே உபதேசமானது வெவ்வேறு முறையில் மீண்டும் மீண்டும் வருவதுபோல இங்கேயும் பிறப்பு இறப்பற்ற நிலையையும், ஆராத இன்பத்தையும், **पुनरावृत्ति** “புனராவிருத்தி” - அதையே மீண்டும் கூறுதல், என்கிற தோஷத்தையும் பொருட்படுத்தாமல் கூறுகிறார். ஆத்மாவைக் குறித்த அறிவு அவ்வளவு எளிதானது அல்ல என்பதால்.

சிவமான ஆத்மாவைக் குறித்த அறிவே இங்கு விசாரம் செய்யப்படுகிறது. மாண்டூக்ய உபநிஷத்தில் கூறியுள்ள **शिवम् शान्तम् अद्वैतम् चतुर्थम् मन्यन्ते स आत्मा स विज्ञेयः** 'சிவம் சாந்தம் அத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே ஸ ஆத்மா ஸ விக்ஞேய" - மங்கள மயமானது, அமைதியானது, இரண்டற்றது எது நான்காவதாக ஏற்கப்படுகிறதோ (விழிப்பு, கனவு, தூக்கம் ஆகியவை கடந்தது) அதுவே ஆன்மா அதனையே அறிய வேண்டும். இந்த வாக்கியப்படி சிவம் ஆத்மாவே என்று தீர்மானமாகிறது. அப்படிப்பட்ட ஆத்மாவை குறித்த விசாரமே

சிவபுராணம் என்றாகிறது. அல்லது, ஜீவனின் பலவகையான அவஸ்தைகளை குறித்து விசாரம் செய்து அந்த நிலைகளிலிருந்து விடுதலை அடையக் கூறப்படும் விசாரமே சிவபுராணம் ஆகும். முக்தி நிலையான சிவபுரம் அடைதலே இங்கு பலன் என்று கூறப்பட்டதால் இப்படி ஏற்கப்படுகிறது.

இந்த நூல் மாணிக்கவாசகர் தம்முடைய ஞானத்தின் பொருட்டு எழுதப்பட்டதல்ல, மாறாக ஜீவராசிகள் இந்த சிவத்தை அடையவேண்டும் என்பதற்காக எழுதப்பட்டது. இதனைப் பாட்டின் துவக்கத்தில் 'சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்" என்றும் முடிவில் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்வார்" என்றும் உரைக்கின்றார். தன்னுடைய ஞான நிலைபாட்டை இரண்டாவது வரியிலேயே கூறிவிடுகிறார் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க".

தமிழில் ஜ என்ற எழுத்தானது ச என்றே எழுதப்படுகிறது. ஜீவ புராணம் என்பது சீவ என்று மருவி, சிவ என்று நெடில்கெட்டு மாறிவிடுகிறது. ஒரே பாடல் சிவனையும் ஜீவனையும் குறிப்பதாக எவ்வாறு இருக்க இயலும் என்றால், வேதாந்த கோட்பாட்டின்படி ஜீவனே சிவன், சிவமே ஜீவன். இதனையே தத்வமசி என்பதான வேதாந்த வாக்கியங்களும் கூறுகின்றன.

புராணம் என்ற சொல்லிற்கு **पुरा अपि नव** "புரா அபி நவ" - பழையது ஆனாலும் இன்றும் புதியதே என்று பொருள். இப்படிச் சிவன் எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பதால், மிகப் பழமையானவர் ஆகிறார். மிகப் பழமையானது, பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற தமிழ் மரபுப்படி சிவத்தை விடுத்து வேறொன்று ஏற்பது சிறந்ததாகும். இது ஒரு பழையதாக மட்டும் இல்லாமல், இனி பிறக்கப்போகும் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கப் போவதாலும் இந்த சிவன் பழமைக்குப் பழமை புதுமைக்குப் புதுமை ஆகிறார்.

பதினெண் புராணங்களில் கீழ் உள்ள சிவபுராணமும் இதுவும் எந்த தொடர்பும் இல்லாதது, அங்கு சிவனின் பல்வேறு

திருவிளையாடலை குறித்த விசாரம் செய்யப்படுகிறது, இங்கு அந்தப் சிவனே ஆத்மாவாக நிரூபணம் செய்யப்படுகிறது. இந்த காரணத்தினால் இந்த சிவபுராணம் ஆனது ஜீவபுராணம் ஆகவும் ஆகிறது.

வேதத்திலும் ஒரு விதியாக **स्वाध्यायो अध्येतव्यः** "சுவாத்யாயோ அத்யேதவ்ய" - தன்னுடைய வேத பாகத்தை படிக்க வேண்டும், என்பதிலும் பொருளை உணர்ந்து படிப்பதையே தாத்பர்யமாக கூறப்பட்டது. இங்கும் இதுவே "பொருள் உணர்ந்து" என்பதின் வாயிலாக கூறப்பட்டது. மீண்டும் மீண்டும் படிப்பதால் பொருள் உணர இயலும் என்பது ஏற்புடையதாகாது. அப்படி இருந்தால், இங்கு பொருள் அறிந்து என்று கூறியிருப்பார், உணர்ந்து என்று அல்ல. பொருள் உணர்வதற்கு முதலில் அந்தப் பொருளைப் அறிவது முக்கியம். பொருளை அறிய அதன் அறிவு அடையவேண்டியது முக்கியம். அறிவை அடைய, அந்த அறிவு அடைந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் முக்கியம். அதனால் உணர்வதற்கு முதலில் கேட்டல் என்ற செயலைச் செய்ய வேண்டும். இதனையே கற்றுணர்ந்தவர் என்ற சொல் மூலம் நாம் குறிக்கிறோம், அதாவது கற்றலினால் உணர்ந்தவர் அல்லது கற்றதை உணர்ந்தவர்.

பாடலின் முதல் 20 வரிகள் ஈசனாகிய குருவின் மேன்மைகளைக் கூறி, 21 முதல் 92 வரை விசாரமும், அதைத் தொடர்ந்து 95 வரையில் பலனை கூறுவதாகவும் கூறப்பட்டுள்ளது. வேதாந்த நிலை **ब्रह्मविद् ब्रह्मैव भवति** 'பிரம்மவித் பிரம்ம ஏவ பவதி' – பிரம்மத்தை உணர்ந்தவர் பிரம்மமே, அதனால் குருவை பிரம்மமான சிவனாக பாவித்தல் என்று ஏற்றாலும் தவறு இல்லை.

தக்ஷிணாமூர்த்தி மானசோல்லாஸ விளக்கத்தின் துவக்கத்தில் **ईश्वरो गुरुर् आत्मेति मूर्तिभेद विभागिने** 'ஈஸ்வரோ குரு ஆத்மேதி மூர்திபேத விபாகினே' என்று தக்ஷிணாமூர்த்தியை ஈஸ்வரனாகவும், குருவாகவும் ஆத்மாவாகவும் காண்பிக்கிறார்.

இந்த வேதாந்த முறையையே இந்த விளக்கவுரையிலும் கடைப்பிடிப்போம்.

இதை தினமும் ஓதுபவர்கள் பொருளை தெரிந்துகொண்டு எதற்கு இந்த சிவபுராணம் என்ற தெளிவு அடைவதற்காகவும் இதன் விளக்க உரையை எழுதுவது அவசியமாகிறது. சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள சம்பந்தமானது ஒரு அகராதி கண்டு அறிந்துகொள்ள இயலும் என்பதால், இந்த விளக்கவுரையானது அவசியம் இல்லை என்று தோன்றும். ஆனால், ஒரு சொல் ஒரு இடத்தில் ஒரு பொருள் தருவதாகும் வேறோர் இடத்தில் அதற்கு நேர்மாறான பொருள் தருவதாகவும் காணப்படுகின்ற காரணத்தால், எந்த பொருளை இங்கு ஏற்பது என்பது நம்மால் தீர்மானம் செய்ய இயலாது. இந்த காரணத்தால் நமக்கு பரம்பரையாகக் ஏற்கப்பட்ட பொருளை அறிய அதனை முறைப்படிக் கற்றவரிடம் கேட்டல் என்பது அவசியமாகிறது.

ஓம் நமசிவாய

# சிவபுராணம்

## நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க --- 1

நமச்சிவாய – திருவைந்தெழுத்து, வாழ்க – போற்றி, நாதன் - தலைவன், தாள் – திருப்பாதங்கள், வாழ்க - போற்றி.

நமச்சிவாயத்தை போற்றுகின்றேன். நாதனின் ஸ்வரூபத்தைப் போற்றுகின்றேன்.

இங்கு நமச்சிவாய வாழ்க என்பது முதல் வாக்கியம் ஆகிறது.

பொதுவாக சமஸ்கிருத நூல் ॐ ஓம் என்றோ **अथ** அத என்றோ துவங்குவது மரபு. ஆனால், தமிழில் அதுவும் சைவ நூல்கள் காப்பு தவிர, இது போல மரபு இல்லை. ‘பித்தா பிறைசூடி’ என்று பாடிய நிலையில் ‘நமச்சிவாய’ என்பதை மிகவும் மேன்மையானதாக கருதவேண்டும். அதுமட்டுமல்லாமல், சொற்கள் எல்லாம் இறைவனைக் குறிப்பதாகவே இருக்கின்றன. இருந்தாலும் **प्रवृत्ति निमित्तक भेद** ‘பிரவிருத்தி நிமித்தக பேதம்’ – வழக்கு காரணாமாக வேற்றுமை, என்று ஏற்கப்படுகிறது.

நமச்சிவாய என்பது திருவைந்தெழுத்து. இது தாரகமந்திரம் என்று போற்றப்படுகிறது. இந்த மந்திரத்தையே காசியில் சிவன் ஜீவர்களுக்கு இறந்த பின் உபதேசம் செய்கிறார் என்று ஏற்கப்படுகிறது. இந்த காரணத்தினாலே காசியில் இறந்தால் முக்தி என்று கூறப்படுகிறது. இது அவ்வளவு மேன்மையான மந்திரம் என்றால் இதனையே நாம் ஜெபமாகச் செய்யலாமே என்ற ஐயம் உண்டாகும். ஆனால், இப்படிப்பட்ட ஜபம் செய்யும் தகுதி அற்றவர்களாக இப்பொழுது இருப்பதால், ஜெபமானது மனத்தூய்மையைத் தந்து நம்மை வேதாந்தத்திற்கு தகுதி ஆக்குகிறது.

இச்சிவபுராணம் நமக்கு ஞானம் மூலமாக மோட்சத்தினை அளிக்கிறது. ஜெபம் செய்யத் தகுதி இல்லை என்பது நம்முடைய அனுபவமாகவே இருக்கும் காரணத்தால், அதாவது, “ஓம் நமச்சிவாய” என்று துவங்கிய நிலையில் பின்னால் அந்த மனது வெவ்வேறான விஷயங்களைச் சிந்திப்பதாக, துவங்கிய நிலைக்கு சம்பந்தம் அற்றதாகக் காணப்படுகிறது. இதனாலேயே மனதில் மந்திரம் உரு ஏற்றி ஜெபிக்க அந்த மனதில் இறைவனின் உரு படுகிறது, அதனால் அவன் உருபடுகிறான் என்று கூறப்படுகிறது.

ந, ம, சி, வ மற்றும் ய. ஒவ்வொரு எழுத்தும் சிவனின் ஒரு முகத்தினை குறிப்பது – ஈசாண்யம், தத்புருஷம், அகோரம், சத்யோஜாதம் மற்றும் வாமதேவம்.

- ஒவ்வொரு எழுத்தும் ஒரு தொழிலை குறிப்பது – படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் மற்றும் அருளல்.
- ஒவ்வொரு எழுத்தும் ஒரு மாற்றத்தைக் குறிப்பது – பிறத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல் மற்றும் அழிதல்..
- ஒவ்வொரு எழுத்தும் ஒரு நிலையைக் குறிப்பது – விழிப்பு, கனவு, தூக்கம், மயக்கம் மற்றும் சமாதி.
- ஒவ்வொரு எழுத்தும் ஒரு பூதத்தைக் குறிப்பது – ஆகாயம், வாயு, அக்னி, நீர் மற்றும் நிலம்.
- ஒவ்வொரு எழுத்தும் ஒரு விஷயத்தைக் குறிப்பது – சப்தம், ஸ்பர்ஷம், ரூபம், ரசம் மற்றும் கந்தம்.
- ஒவ்வொரு எழுத்தும் ஒரு இந்திரியத்தைக் குறிப்பது – காது, தோல், கண், நாக்கு மற்றும் மூக்கு.
- ஒவ்வொரு எழுத்தும் ஒரு பிராணனைக் குறிப்பது – பிராணன், அபானன், வியானன், உதானன் மற்றும் சமானன்.

இப்படி இந்த உலகத்தில் காணப்படும் எல்லாமாகவும் இருப்பது அந்த சிவம் மட்டுமே என்பது இங்கு பொருள். இதனைக் குறிப்பதாகவே ருத்ரத்தின் **चमक** 'சமகம்' என்பதில், சிவனிடம் 'தங்கமும் வேண்டும், வெள்ளியும்' என்பது போல், 'கோதுமையும் வேண்டும், பருப்பும்' ஆகிய வஸ்துக்கள் வேண்ட நமக்கு கற்றுத்தருகிறது. இந்த 'நமச்சிவாய' என்கிற மந்திரமும் இந்த ருத்ரத்தின் மற்ற பாகமான **नमक** 'நமக'த்தில் நடு பகுதியில் கூறப்பட்டுள்ளது.

ருத்ரம் என்பது யஜுர் வேதத்தில் நடுவில் உள்ளது. இதுவே மற்ற வேதங்களிலிருந்து இந்த வேதத்தை தனித்து காண்பிக்கிறது. யஜுர்வேதம் பொதுவாக ரிக்வேத மந்திர பிரயோகத்தினைச் செய்ய உபயோகமானது ஆகும். ஆனால், இந்த ருத்ரமும் அதனில் வரும் **नमः शिवाय च शिवतराय च** 'நம சிவாய ச சிவதராய ச' என்பதில் இருந்து உண்டாகும் மந்திரம் 'நமச்சிவாய' என்கிற மந்திரமும் நேரடியாக பலவகையாக பிரயோகம் செய்யப்படுகிறது. உதாரணமாக, 'நமசிவாய' என்கிற மந்திர எழுத்துக்களை வெவ்வேறு வகையாக உச்சாரணை செய்வதால் வெவ்வேறு பலனைத் தருவதாக உள்ளது. 'வேதம் நான்கிலும் மெய்பொருள் ஆவது' என்று அதன் சாரமான வேதத்தின் இதயமாக அதன் நடுவில் இருக்கும் இந்த நமச்சிவாய தத்துவத்தையே குறிப்பிடுகிறது.

இந்த இறைவனும் **मन्त्रात्मको देवः** 'மந்த்ராத்மகோ தேவ' – மந்திர ஸ்வரூபமானவர் தேவன், ஆகிறார். மந்திரமும் தேவதையும் வெவ்வேறு அல்ல. அப்படிப்பட்ட இறைவனை வணங்க **देवो भूत्वा देवान् अप्येति** 'தேவோ பூத்வா தேவான் அப்யேதி' – இறைவனாக ஆகி இறைவனை வழிபடுகின்றார், என்று கூறப்பட்டுள்ளது. இறைவனாக எவ்வாறு ஆவது? இந்த செயலே **न्यास** நியாசம் என்கிற செயலாகச் செய்யப்படுகிறது. அந்த மந்திரத்திலுள்ள எழுத்துக்களையோ சொற்களையோ கூறப்பட்ட முறையில் நம்முடைய உடல் முழுதும் மற்றும்

விரல்களிலும் நிறுத்தி, அதன் பின்னர் தேவதையினை வணங்குகின்றோம்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் சிஷ்யரான ஸ்ரீ பத்மபாதர் இந்த நமசிவாய மந்திரத்திற்கு ஒன்பது பொருளைக் கூறியுள்ளார்.

நம என்ற சொல்லின் பொருள் தியாகம் ஆகும். பகுதியில் உள்ள சிவ என்னும் சொல்லிற்கு ஆனந்தம் என்றும், விகுதியில் உள்ள ஆய என்னும் சொல்லிற்கு பலன் என்றும் பொருள். தியாகத்திற்கு உரியவையான பழம், பூ முதலியவைகள். இந்த பிறவியில் தர்மம், அர்த்தம், காமம் மற்றும் மோக்ஷம் அடைவதற்காக, பார்க்கப்படும் எல்லாவற்றையும் தியாகம் செய்கிறேன்.

நம என்ற சொல்லின் பொருள் வணக்கமாகும். அது தீன நிலையான - சேவை மற்றும் அறிவு, பொருட்களின் அடைவும். ஆசையோடு அல்லது ஆசையில்லாமலோ தேவர்களின் தேவனை வணங்குகிறேன்.

நம என்பதில் உள்ள **नञ्** 'நஞ்' ( இன்மையை உணர்த்தும் பகுதி வேற்றுமை) என்ற நிராகரணமானது இந்த உலகில் காணப்படும் அறுவகை மாற்றங்களையும் ( பிறத்தல், இருத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல் மற்றும் அழிதல்) நிராகரிக்கிறது. இது **नेह नानास्ति** 'நேஹ நானாஸ்தி' - இங்கு பலது இல்லை, என்ற வேத வாக்கியத்தினால் அறியப்படுகிறது. ஆய என்பது கொண்டு செல் என்கிற பொருளில் உள்ளது. உடல், வீடு முதலிய பற்றினை அழிப்பது நமஸ்காரம். இதனால் எப்பொழுதும் தூய்மையானவனாக இருக்கிறேன்.

சிவன் மூன்று சக்திகளும் கூடிய ப்ரம்மா முதலிய ரூபமே அல்லது குணமற்ற பிரம்மனே ஆகும். நம சொல்லின் சக்தி வணக்கத்தில் உள்ளது. இங்கு வணக்கம் தியானம் ஆகும். நான்காம் வேற்றுமை ஜீவன் மற்றும் சிவனின் வேறற்ற நிலையை குறிக்கிறது. வேதாந்த நிச்சயத்தால் 'நான் சிவன்' 'சிவன் நான்' அல்லது 'நான் தாசன்' 'தாசன் நான்' என்று

அறிகிறேன். இதுவே எல்லா சாஸ்திரத்திலும் நம என்ற சொல்லின் பொருள். இங்கு அறியப்படும் விஷயமான அறம், பொருள் மற்றும் இன்பத்தை, வீடு ஆகிய அந்த சிவத்தை அடைய தியாகம் செய்கிறேன். அல்லது, ஈஸ்வரனை எல்லா வரையறையிலிருந்தும் சாஸ்திர ஞானம் கொண்டு அறிவு பூர்வமாக தத்துவத்தை தியானம் செய்யவேண்டும்.

நம என்ற பகுதி பாகமான சொல்லில் ‘அச்’ என்ற விகுதி சேர்வதால் நம: என்ற சொல் ஆகிறது. 'நான் தாசன்' என்ற பாவனையில் உன்னோடு என்னை சேர்த்துக்கொள்வாயாக.

இந்த உலகம் சிவத்தினில் இருந்து தோன்றுகிறது, இதிலேயே லயம் அடைகிறது. சொற்களுக்கெல்லாம் பொருளாக விளங்குகின்ற இதனை பிரம்ம நிஷ்டை உடையோர் சிவம் என்கின்றனர்.

வேதாந்தத்தில் கூறப்பட்ட 'நேதி நேதி' நம என்பதில் உள்ள 'நஞ்' பகுதி கொண்டு நீ அளக்கின்றாய். அதனால் நான் 'அநம' ஆகிய வரையறைகளிலிருந்து 'நம' ஆகிவிட்டேன். துன்பம் அற்றவனாக நீ இருப்பதால் 'சிவாய' என்று அறியப்படுகிறாய். என்னையும் வரையறைகளற்ற ஆனந்தமாக ஆக்கிவிடு.

அறியாமை உடைய நான் பிரம்ம வித்தையினால் உன்னை அடைந்தேன். அதனால், தகுதியற்ற எனக்கு இங்கு காணப்படுகின்ற எல்லாவற்றையும் உன் சொரூபமாக மாற்றிக் அருள்வாயாக.

மாயை அற்ற ஆனந்த ஸ்வரூபனாக நீ இருப்பதால் நம ஆகின்றாய். உன்னுடைய கருணையினால் நானும் அறியாமை அற்ற நம ஆகிவிட்டேன் (அநம விலிருந்து நம ஆகிவிட்டேன்). சிவாய என்ற ஆத்மாவை உணர்ந்தவனாக ஆகிவிட்டேன்.

இப்படி நம்மை அறியாமையிலிருந்து அறிவுக்குக் கொண்டு செல்லும் மந்திரம் இந்த நமசிவாயம் என்பது தெளிவாகிறது. இப்படி மேன்மையான நிலையை தருவதாக மந்திரம் இருந்தாலும், முன்னர் கூறியது போல ஒருமுகப்படாத

மனதுடையவர் இந்த மந்திரத்தை ஜபிக்க இயலாதென்பதால், அவர்களுக்காக சஹஸ்ரநாமம் முதலிய ஆயிரம் மந்திரப் பெயர்களைப் கொண்ட சுலோகங்கள் கூறப்பட்டுள்ளது. ஆயிரம் பெயர்கள் என்று கூறினாலும், இங்கு **न्यूनाधिक न्याय** 'ந்யூன அதிக நியாயம்' - குறைவு அல்லது கூடுதல், என்கிற நியமப்படி ஆயிரம் பெயர்கள் என்று கூறப்பட்டது, அதாவது ஆயிரத்திற்கு குறைவாகவோ அதிகமாகவோ இருக்கலாம்.

அப்படிப்பட்ட ஒரு சுலோக வகையை சேர்ந்தது இந்த சிவபுராணம். சமஸ்கிருதத்தில் உள்ள சுலோகங்களை தவறாக உச்சரிப்பதை காட்டிலும் தமிழில் உள்ள விநாயகர் அகவல், கந்தர் அனுபூதி முதலிய வகையில் உள்ள சிவபுராணம் படிப்பது மிகவும் மேன்மையானது. ஹிந்தியில் ஹனுமான் சாலிஸா, ஆரத்தி முதலியவை இந்த வகையைச் சேர்ந்தவை.

**नमः स्वाहा स्वधा वषट् योगाच्च** "நம ஸ்வாஹா ஸ்வதா வஷட் யோகாத் ச" என்கிற பாணினி சூத்திரப்படி, நம, ஸ்வாஹா, ஸ்வதா மற்றும் வஷட் ஆகியவையுடன் நான்காம் வேற்றுமை உண்டாகும். நம - நமஸ்காரம், ஸ்வாஹா - தேவதைகளுக்கு, ஸ்வதா - பித்ருக்களுக்கு மற்றும் வஷட் - யாகங்கள் செய்வதில் என்று ஏற்கப்படுகிறது. இப்படி நமஸ்காரம் என்பது சிறியவர் பெரியவர்களுக்காக செய்யக்கூடிய, செய்யவேண்டிய செயலாக காணப்படுகிறது. அதனால், நமச்சிவாய என்பதால் சிவ னுக்கு நமஸ்காரம் என்று பொருள் உண்டாகிறது.

நமஸ்காரம் என்பது சிறியவர் பெரியவருக்கு செய்யும் செயல். இப்படிபட்ட நிலையில், சிறியவன் ஆன ஜீவன் பெரியவன் ஆன ஈசனுடன் எவ்வாறு பிரிவற்றவனாக, வேறற்றவனாக இருத்தல் இயலும்? வேதாந்தம் சிறியவன் பெரியவன் என்ற வேறுபாட்டினை ஏற்பதில்லை. இந்த வேறுபாடு அறியாமையின் காரணத்தினாலேயே உண்டாவது ஆகும்.

இது தாரக மந்திரமாக ஏற்கப்படுகிறது என்று முன்னர் கூறினோம். இதனை சிவன் ஜீவர்களுக்கு அவர்கள் இறந்தபின் காசியில் உபதேசிக்கின்றார் என்று கண்டோம்.

“தாரக” என்றால், **तृ तरणे** ‘த்ரு தரனே’ – கடப்பதில், என்று பொருள். எதை கடப்பது? சம்சார பெருங்கடலைக் கடப்பது. ஜீவன் அறியாமை என்கிற கடலைக் கடந்து அறிவுமயமாக இருக்கும் பரபிரம்மமான சிவனை அடைதல். அடைதல் என்றால், அவரிலிருந்து என்றும் வேறானது இல்லை என்று அறிவது. இந்த நிலை வேதத்தினால் (வேதாந்ததினால்) மட்டுமே உணரமுடியும்.

வேதம் என்பது ஞானம், **विद ज्ञाने** ‘வித ஞானே’ என்ற வேர்ச்சொல் அறிவு என்கிற பொருளில் உள்ளது. பிரம்மம் அறிவு ஸ்வரூபமானது. பிரம்மம் நித்தியமானது என்பதால் வேதமும் நித்தியமாகிறது. அல்லாது பிரம்மமும் வேதமும் நித்தியம் என்று இங்கு வெவ்வேறு நிலையாக கூறப்படவில்லை.

பிராமணன் என்ற சொல்லிற்கு **ब्रह्म जानाति** ‘பிரம்ம ஜாநாதி’ – பிரம்மத்தை / வேதத்தை உணர்ந்தவர் என்று பொருள். வேதம் இந்த உலகத்தில் இருப்பதாக காணப்படுவதால், ஜீவன், ஜகத் மற்றும் ஈஸ்வரன் எந்த அளவுக்கு பொய்தோற்றமாக ஏற்கப்படுகின்றனரோ, அதே நிலையில் வேதமும் என்று வேதாந்திகளால் ஏற்கப்படுகிறது. அதனால் வேதம் சிவ ஸ்வரூபம், சிவன் அறிவு ஸ்வரூபம், அறிவு பிரம்மத்தின் ஸ்வரூபம், அந்த பிரம்மமோ நம்முடைய ஸ்வரூபம். நமச்சிவாய என்கிற மந்திரமும் சிவனும் வெவ்வேறு இல்லை, அதனால் இந்த மந்திரம் பிரம்மமே.

வாழ்க என்ற சொல் போற்றி என்ற பொருளில் உள்ளது. பொதுவாக வாழ்க என்பது ஆசீர்வாதத்தில் உபயோகிக்கப்படுகிறது. தமிழில் அர்ச்சனையில் ‘சிவாய நம’ என்பது ‘சிவனே போற்றி’ என்றே கூறப்படுகிறது. வாழ்க என்பது வழுத்துதல் அதாவது வணங்குதல் என்ற பொருளில் வருகிறது. அவ்வாறானால், ‘நமச்சிவாய நம’ - சிவனுக்கு நமஸ்காரம் நமஸ்காரம் (நமஸ்காரம் சிவனுக்கு நமஸ்காரம்), என்று ஆகும். அதாவது, ‘சிவாய நம நம’ என்று இரண்டு நம

சொல், இரட்டைகிளவி போல், அதாவது இரண்டாவது பொருளற்றது ஆகின்றதா என்றால், அது இல்லை. இங்கு நமச்சிவாயத்தை (மந்திரம்) வணங்குகின்றேன் என்று பொருள்படும். இதற்கு காரணம், போற்றி, ஏதாவது ஒன்றை (குணத்தை) சார்ந்து இருப்பது அவசியம். அதாவது, நமச்சிவாயம் என்ற பெயரை வணங்குகின்றேன். வேதாந்தத்தில் பெயரும், பெயருடையவரும், சக்தியும், சக்தியுடையவரும் வெவ்வேறு இல்லை. இதனால், ஈசனை வணங்குகின்றேன் என்று ஆகிறது.

பானை என்கிற பெயரும், அதன் உருவமும் வேறு அல்ல. அல்லது பெயரும் உருவமும் கற்பனையானது என்பதால், அது அவைக்கு அதிஷ்டானமாக இருக்கும் சிவத்திலிருந்து வேறல்லாததாக இருகிறது. கற்பனையான, ஏற்றிப் பார்க்கப்பட்ட விஷயமானது அதன் அதிஷ்டானத்தை காட்டிலும் வேறல்லாதது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஒரு நிலை.

போற்றி என்ற பொருளில் சமஸ்கிருதத்தில் **जय** ‘ஜய‘ , **विजयते** ‘விஜயதே’ (**शिवो विजयत इतराम्** ‘சிவோ விஜயத இதராம்’ – சிவன் மற்றவற்றை வெல்வார்) – வெற்றி என்ற அர்த்தத்தில் உபயோகிக்கபடுகிறது. இதனையே ஹிந்தியில் ‘ஜெய் ஹோ’ என்று கூறுகின்றனர். இங்கும், இதுவே அதிகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது – வாழ்க, வளர்க, வெல்க மற்றும் போற்றி என்று.

சிவ என்றால் மங்களமயமான என்று பொருள். சிவ என்றால் ஆத்மா என்று கூறினோம். அதாவது, ஆத்மா மங்களமயமானது. இதனால் சிவனல்லாத, அனாத்மாவான இந்த உலகம் மங்களமற்றது ஆகிறது.

பெயரினைப் போற்றிவிட்டு இப்போது உருவத்தைப் போற்றுகின்றார். **நாதன் தாள் வாழ்க**. நாதன் என்றால் **नथ ऐश्वर्ये** ‘நத ஐஸ்வர்யே’ என்ற வேர்ச்சொற்ப்படி ஈஸ்வரன், தலைவன்,

இறைவன், காவலன், கணவன், சுவாமி, மரியாதைக்குரியவன், பிரபு, காப்பவன் அல்லது நாயகன். ஐஸ்வர்யம் என்பதின் பொருளே, **ईश्वरस्य भावः** 'ஈஸ்வரஸ்ய பாவ' – ஈஸ்வரனின் தன்மை, என்பது. ஈஸ்வரனை ஏற்பவர்களுக்கு நாதனாக ஈஸ்வரன் இருப்பதால் அவர்கள் அனாதைகள் ஆவது இல்லை. அதனால், இறைவன் விஸ்வநாதன், ஜகந்நாதன் முதலிய பெயர்களால் அறியப்படுகின்றான். இவ்வாறு ஈஸ்வரனை ஏற்காதவர்கள் எத்தனை சொந்தங்களுடன் இருப்பவர்களாக இருந்தாலும் அநாதைகளே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தாள் என்றால் பொதுவாக பாதங்கள் என்று பொருள். 'என் சான் உடலுக்கு சிரசே பிரதானம்' என்பது பழமொழி,

இதன் அடிப்படையில் இன்னொரு பழமொழியும் உண்டு, 'பூனைக்கு தலையாவதை காட்டிலும் புலிக்கு வாலாய் இருப்பது மேன்மை' என்று. ஆனால், ஈஸ்வரனையும் குருவையும் பொறுத்தமட்டில் பாதமே பிரதானம். குரு பாதங்களை சேவிப்பதால் மனது தூய்மை அடைதல் மட்டுமல்லாது, அறியாமையை அதன் காரணத்துடன் அழிக்க சக்தியுடையது. ஆனாலும், இங்கும் மற்ற இடங்களிலும் பாதம் என்பது ஸ்வரூபம் என்கிற பொருளில் ஏற்கவேண்டும். இதற்கு காரணம் 'பாதம்' என்றால் **पदनीयम्** 'பதநீயம்' – அடையப்படவேண்டியது என்று பொருள். இங்கு பிரம்மத்தை காட்டிலும் அடையப்படவேண்டியது என்று ஒன்றும் இல்லை. இங்கு சிவனை சகுணமாக ஏற்காமல் நிர்குணமாக ஏற்கின்றார். குணங்கள் வரையறை ஆவதால் அவை வேற்றுமையை உண்டுசெய்கின்றன. குணம் என்றால், அந்த குணமுடைய குணி இருத்தல் அவசியம். குணம் – குணி என்ற பிரிவு அத்வைதத்தில் இல்லை. இந்த காரணத்தினால் சத்யம், ஞானம் மற்றும் ஆனந்தம் பிரம்மத்தின் ஸ்வரூபமாக ஏற்கின்றோம். இதுவே 'அன்பே சிவம்' என்று தமிழில் கூறப்படுகிறது. ஞான ஸ்வரூபன் அல்லது ஆனந்த ஸ்வரூபனை போற்றுகின்றேன், வணங்குகின்றேன். ஞானத்தின் பாதமும் ஞானமே ஆகும்.

சகுணம் தியானத்திற்கு, நிர்குணம் ஞானத்திற்கு என்பது வேதாந்த ரகசியம்.

முதலில் சிவத்தை போற்றுகின்றேன், அடுத்து அவன் பாதத்தைப் போற்றுகின்றேன். 'நம' என்று நான், எனது எல்லாவற்றையும் தியாகம் செய்தபின்னர், பாதங்களைப் பணியும் தகுதி கிடைக்கிறது.

நமஸ்காரம் ஐந்து நிலைகளில் கூறப்பட்டுள்ளது வயது, ஜாதி (பிராமணன் முதலிய), ஆசிரமம் (பிரமச்சாரி முதலிய), தவம் மற்றும் ஞானம். இதனில் பின்னால் உள்ளவருக்கு முன்னால் உள்ளவர் செய்வது நமஸ்காரம். இதனை காண்பிக்கவே தக்ஷிணாமூர்த்தி பற்றி கூறும்போது **वृद्धा शिष्या गुरुर् युवा** 'விருத்தா சிஷ்யா குரு யுவா' – வயதான சிஷ்யர்கள், குருவோ இளம் வயதினர்' என்று கூறப்பட்டுள்ளது.

## இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க --- 2

> இமைப்பொழுதும் – எப்பொழுதும், என் நெஞ்சில் – என் மனதில், நீங்காதான் – நீங்காதிருக்கும், தாள் – ஸ்வரூபத்திற்கு, வாழ்க – போற்றி. --- 2
>
> எப்பொழுதும் என் மனதில் நீங்காதிருக்கும் ஸ்வரூபனைப் போற்றுகின்றேன்.

இங்கு நீங்காதான் தாள் வாழ்க என்று மட்டும் கூறினால் போதுமானது. சிவன் இல்லாத நிலை, என்றும் இருப்பது இயலாது. ஆனால், அறியாமையால் அவனை தொலைத்தவருக்கு நீங்கியது போல் காணப்படுகின்றான். ஞானத்தினால் அறிந்த பின்னர் நீங்காமல் இருக்கின்றான், நீங்க இயலாதவனாக இருக்கின்றான். இதனையே வேதமும் **तद् दूरे तदु अन्तिके** 'தத் தூரே தது அந்திகே' – அது தொலைவில்

இருப்பதும் (அறியாதவருக்கு) மிகவும் நெருங்கியதும் (அறிந்தவருக்கு). இப்படி, அறியாதவருக்கு, சிவம் என்ன என்று தெரியாமல் இருப்பதால் தூரமாகவும், அறிந்தவருக்கு தன் ஸ்வரூபமாகவே இருப்பதால் மிகவும் நெருங்கியதாகவும் உள்ளது. நீங்குவது, எனக்கு அந்நியமாக இருப்பது அவசியம், என் ஸ்வரூபமோ எனைவிட்டு என்றும் நீங்க இயலாது.

எங்கிருந்து நீங்காது? உடலிலிருந்து என்றால், மீண்டும் வரையறையால் வேற்றுமை உண்டாகும். அதனால் 'நெஞ்சில்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **हृदि अयम्** 'ஹ்ருதி அயம்' – இதயத்தில் இருப்பது (சிவம்), என்பதால் அதனை இதயம் (ஹ்ருதயம்) என்கிறோம். வேதம் **अङ्गुष्ट मात्र पुरुषः मध्ये आत्मनि तिष्ठति** 'அங்குஷ்ட மாத்ர புருஷ மத்யே ஆத்மனி திஷ்டதி' – கட்டைவிரல் அளவு உள்ள ஆத்மா இதயத்தில் இருக்கிறது, **यो वेद निहितम् गुहायाम्** 'யோ வேத நிஹிதம் குஹாயாம்' – யார் அதனை, இந்த இதய குகையில் இருப்பதை, அறிகின்றனரோ; முதலியன இதய குகையில் ஆத்மா இருப்பதை கூறுகின்றன.

ஆனால், இதயகுகை, கட்டைவிரல் அளவு என்பது வரையறை, ஆத்மா வரையறுக்கப்பட்டால் அநித்தியம் ஆகும். இந்த தோஷத்தை நீக்க **यावान् वा अयम् आकाशः तावान् अन्तर्हृदय आकाशः** 'யாவான் வா அயம் ஆகாஷ தாவான் அந்தர்ஹ்ருதய ஆகாஷ' – எது இந்த வெளி ஆகாயத்தின் அளவோ அதுவே உள்ளிருக்கும் ஆகாயத்தின் அளவு என்று, இந்த பிரத்யகாத்மாவும் பரமாத்மாவும் (ஜீவன், பிரம்மம்) வேறல்லாதது என்றும் கூறுகிறது. இந்த இதயம், புருவ இடையில் என்றெல்லாம் கூறுவது, மனதை ஒருமுகப்படுத்த ஒரு இடமே தவிர, அங்கு மட்டுமே இருக்கிறான் என்று கூறவில்லை. கோவிலுக்கு உள்ளும், கோவிலுக்கு வெளியிலும் இறைவன் இருந்தாலும் அவரை நாம் வணங்க ஒரு இடமாக கோவில் உள்ளது போல. வெளியில் இறைவனை காண இயலாதவருக்கு ஒரு இடமாக கோவிலும், இதயமும் இருக்கிறது. கோவிலிலும் தீபாராதனை காட்டும் தருணத்தில் கண்களை மூடிக்கொண்டு இதயத்தின்

உள்ளிருக்கும் இறைவனையே நாம் வணங்குகின்றோம். இப்படி இல்லாமல், வரையறுக்கப்பட்டவராக இருந்தால், அவர் நம்மை போல் ஆவார், எல்லோரையும் காத்தல் முதலிய செயல்புரிதல் இயலாது.

இவ்வாறு நாம் இறைவனை மனதில் நினைக்கும் போது, அவர் நெஞ்சில் நீங்காமல் இருக்கின்றார். நம்முடைய அனுபவமும் மாணிக்கவாசகருடைய அனுபவமும் ஒன்றா? இல்லை. அதனை கூற, ‘இமைப்பொழுதும்’ என்கிறார். கண் இமைக்கும் காலத்தை மாத்திரை என்போம். இதுவே க்ஷணம் என்று அறியப்படுகிறது. அப்படிப்பட்ட பகுக்கக்கூடிய ஒரு கால அவகாசத்திலும், நீங்காமல் இருப்பவன் இறைவன். இது எல்லோருக்கும் பொருந்தும் என்றாலும், அறியாமையால் இதனை நாம் உணர்வது இல்லை. எதனை? இறைவன் தனக்கு அன்னியமாக இல்லாத நிலை. தன் மனதில் மட்டுமல்லாமல் வெளியிலும் அவர் காணப்படுகின்றார் என்பதை கூறுகின்றார்.

## கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க --- 3

> கோகழி – திருப்பெருந்துறை, ஆண்ட – ஆட்சி செய்யும், குருமணி – மேன்மையான குரு, தன் – அவருடைய, தாள் – திருப்பாதங்கள், வாழ்க – போற்றி.
>
> கோகழி என்ற திருப்பெருந்துறை ஞான ராஜ்ஜியத்தை அட்சி செய்யும் மேன்மையான குருவின் ஸ்வரூபதிற்கு போற்றி.

கோகழி என்று திருப்பெருந்துறை அறியப்பட்டதாக இதன் மூலம் அறிகின்றோம். ஆண்ட – ஆட்சி புரியும். இங்கு ஈஸ்வரனாகிய குருவை அல்லது குருவாகிய ஈஸ்வரனை குறித்து கூறுகின்றார். அவர் அந்தணர் என்று கூறிய பின்பு, ஆண்ட என்பது எவ்வாறு பொருந்தும்.

ஆட்சி செய்வது க்ஷத்திரிய தர்மம் என்றால், எவர் ஒருவர் தன்னுடைய மனம் என்னும் புரத்தை அடக்கியவரோ, எவர் தன் முன் வரும் பக்தரின் மனதினை, கடைக்கண் பார்வையினால் அடக்குகின்றவரோ, அவர் நாட்டை ஆளும் மன்னனைக் காட்டிலும் மேன்மை பொருந்தியவர். நாட்டை ஆளக்கூடிய மன்னன் வரையறை உள்ள இடத்தை ஆளுகின்றான், ஆனால் இவரோ வரையறையற்ற ஞானத்தை ஆளுகின்றார்.

குருமணி இங்கு முன்னர் கூறியது போல 'குறு மிளகு' என்பதைப் படிப்பது போல் படிக்காமல், குரு – ஆச்சாரியர் என்று அறியவேண்டும். மணி என்றால் மேன்மை, ஒப்பற்ற என்று இங்கு பொருள். மேன்மையான குருவினைப் போற்றுகின்றேன்.

வெளியில் உள்ள ஆகாயமே பானைக்குள்ளும் இருப்பது போல, வெளியிலிருக்கும் ஒப்பற்ற குருவே நெஞ்சில் நீங்காமல் இருக்கின்றார். இப்படிக் கூறுவதால் குரு எல்லையற்றவர் என்று கூறியதாயிற்று. வரையறை மூவகை –

1. தேசத்தினால் – இங்கு உள்ள பானை வேறிடத்தில் இல்லாதது போல.
2. காலத்தினால் – இப்போது உள்ள பானை வேறு காலத்தினில் இல்லாதது போல.
3. பொருளினால் – பானை துணியில் இல்லாதது போல.

இப்படி எந்த வரையறையும் அற்றவர் ஈஸ்வரனாகிய குரு. என்னிலிருந்து ஈஸ்வரன் வேறானவராக இருந்தால், நான் மட்டுமல்லாமல் ஈஸ்வரனும் அநித்தியம் ஆவது நிச்சயம்.

## ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க --- 4

ஆகமம் – வேதம், ஆகிநின்று – ஸ்வரூபமாக (தாத்பர்யமாக) இருந்து, அண்ணிப்பான் –

தடுத்தாட்கொள்பவன், தாள் – திருப்பாதங்கள், வாழ்க – போற்றி.

வேதாந்த ஸ்வரூபமாக இருந்து தடுத்தாட்கொள்ளும் ஸ்வரூபத்திற்கு போற்றி.

ஆகமம் என்றால் வேதம் என்று ஏற்பதே சரியானது. ஆகமம் என்பதால், ஆகம நூல்களை ஏற்றால், ஆகம நூல் வெவ்வேறானது – சைவ ஆகமம், வைஷ்ணவ ஆகமம், சாக்த ஆகமம் முதலியவை. அவ்வாறு இங்கு சைவ ஆகமம் மட்டும் ஏற்பது இயலும் என்பதால், வரையறுக்கப்பட்ட நிலை உண்டாகும். அதனால், ஆகமம் என்றால் வேதம்.

வேதத்தின் தாத்பர்யம் வேதாந்தம். வேதாந்த தாத்பர்யம் ஜீவனும் ஈஸ்வரனும் வெவ்வேறு அல்ல. ஜீவன் ஈஸ்வரனை போல், சிருஷ்டி முதலியவை செய்ய இயலுமா என்றால், இங்கு ஜீவ மற்றும் ஈஸ்வரன் இரண்டிலும் பொதுவான தத்துவம் சைதன்யம் என்பதால் அதுவே இங்கு கூறப்பட்டுள்ளது.

அதாவது, ஈஸ்வரன் என்றால் மாயை கூடிய சைதன்யம், ஜீவன் என்றால் அவித்யா கூடிய சைதன்யம். இது பானையில் பெரிய மற்றும் சிறிய என்பது போல. இரண்டும் வெவ்வேறு நிலை உடையது என்றாலும் இரண்டும் பானையே. அதுபோல சைதன்யம் ஜீவனிலும் ஈஸ்வரனிலும் பொதுவானதாக இருந்தாலும் வரையறையான மாயை மற்றும் அவித்யையின் வேறுபட்டால் ஜீவனும் ஈஸ்வரனும் வெவ்வேறாக கருதப்படுகின்றார்கள். இந்த வரையறைகளை நீக்கினால் சைதன்யமே மிஞ்சுகிறது. இதுவே ‘தத்வமசி’ என்ற உபதேசமாக கூறப்படுகிறது.

தடுத்தாட்கொள்ளல் என்றால், தவறான அறிவிலிருந்து தடுத்து சரியான அறிவை தந்து ஆட்கொள்ளல். இங்கு அறியாமையிலிருந்து அறிவைத் தந்து தடுத்தாட்கொள்ளல். சம்சாரத்திலிருந்து மோக்ஷம் தந்து ஆட்கொள்ளல்.

இங்கு ஈஸ்வரனை சகுணமாகவே கூறுவது போல் உள்ள நிலையில், நிர்குணனாக விளக்குவது சரியா என்ற சந்தேகத்தை அடுத்த வாக்கியம் நீக்குகிறது.

## ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க --- 5

ஏகன் – ஒருவன், அநேகன் – பலவானவன், இறைவன் – இறைவன், அடி – ஸ்வரூபம், வாழ்க – போற்றி.

ஒருவனாகவும், பலவாகவும் இருக்கும் ஈஸ்வரன் ஸ்வரூபதிற்கு போற்றி.

ஒரே நிலையில் (தேசம்), ஒரே நேரத்தில் (காலம்), ஒரே விஷயத்தில் (பொருள்) ஈஸ்வரன் ஒருவனாகவும் பலவாகவும் இருத்தல் இயலாது. இவ்வாறு ஈஸ்வரனை ஏற்றால், ஈஸ்வரன் பகுக்கப்படுபவர், பிரிக்கப்படுபவர் என்று ஆவார். இதனால் ஈஸ்வரன் அநித்தியமாக ஆவார்.

இதனை தவிர, வேற்றுமை மூன்று வகைப்படுகிறது –

1. சஜாதீயம் – சமான ஜாதியுடையது. இரண்டு மரங்கள். ஒரு வாழை மரம் வேறொரு வாழை மரத்துடன் வேறானது.
2. விஜாதீயம் – வெவ்வேறு ஜாதியுடையது. இரண்டு மரங்கள். ஒரு வாழை மரம், வேறொரு புளியமரத்துடன் வேறானது. அல்லது, மரம் மனிதனிடமிருந்து வேறானது.
3. ஸ்வகதம் – தன்னில் உள்ள வேறுபாடுகள். மரத்தில் பூ, பழம், இலை முதலியவை. மனிதனில் கை, கால், தலை முதலியவை.

இரண்டு ஈஸ்வரன் என்பதை ஏற்பது இயலாது. ஒருவர் ஸ்ருஷ்டி செய்யத் துணிந்தால் மற்றொருவர் அழிக்க முனைவார். ஈஸ்வரனுடன் வேறொருவர் இருந்தாலும்

அப்பொழுதும் அவர் வரையறை உடையவர் ஆகிறார். அவரில் அவயவங்கள் இருந்தால், ஒரு பகுதி வேலை செய்தால் வேறொன்று செய்யாமல் இருக்க இயலும் என்பதால், அதுவம் இறை நிலையை தடை செய்யும்.

நான் வரையறுக்கப்பட்டவன் என்றால், யாராலும் என்னை இந்த சம்சாரத்திலிருந்து காக்க இயலாது. இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லாததாகவும் ஈஸ்வரனும் கூட செய்தல் இயலாது.

ஆனால், அது தான் ஈஸ்வரனின் சிறப்பு என்று வாதித்தால், இது ஈஸ்வரனைச் சிறுமை படுத்துமே ஒழிய பெருமைப்படுத்தாது. ஈஸ்வரன் ஏன் என்னைக் கஷ்டத்தில் வைத்து மற்றவனை நல்ல நிலையில் வைத்து இருக்கிறான் என்று கேள்வியும் உண்டாகும். இது இரண்டு தோஷத்திற்கு காரணம் ஆகும்.

1. வைஷம்ய தோஷம் - ஒருவன் நல்ல நிலையில் இறைவன் கருணையால் இருத்தல்.
2. நைர்க்ருண்ய தோஷம் – ஒருவன் இறைவனின் கருணை இன்மையால் மோசமான கஷ்டங்களை அனுபவித்தல்.

இறைவன் எல்லோருக்கும் பொது என்பதற்கும் களங்கம் உண்டாகும். அதுமட்டுமல்லாமல் அவர் கட்டுப்பாட்டில் எப்பொழுதும் இருக்கும் நிலை உண்டாகும். ஈஸ்வரன் சர்வாதிகாரி போல இருப்பார். நமக்கு ஈஸ்வரன் மேல் காதல் உண்டாவது இயலாது, மாறாக பயம் மட்டுமே உண்டாகும். அன்பே சிவம் என்பது தவறாகும்.

ஈஸ்வரன் வரையறுக்கப்பட்டவன் ஆக இருத்தல் இயலாது. வரையறுக்கப்பட்டதை ஈஸ்வரன் மாற்ற இயலாது.

ஈஸ்வரன் ஏகனாக இருந்தால் ஒரு தவறும் இல்லை, ஆனால், அனேகனாக இருந்தால் பல தவறுகள் நேரிடவரும்.

ஈஸ்வரன் எவ்வாறு இந்த ஸ்ருஷ்டியைச் செய்தார்?

1. தன்னைக் கொண்டு, தன்னிலிருந்து ஒரு பகுதியை கொண்டு – இறைவன் பகுப்பப்படுபவர் என்றால், அநித்தியம் ஆவார். தானே நிமித்த (செயல்) காரணமாயும் உபாதான (பொருள்) காரணமாயும் இருந்தால். பார்வதி (நிமித்த) தன் அழுக்கிலிருந்து (உபாதான) பிள்ளையார் செய்தது போல.

2. தனக்கு அந்நியமான பொருளை கொண்டு – இறைவனை தவிற வேறொன்று உண்டு என்றாலும், வரையறுக்கபட்டவர் என்பதால், அநித்தியம் ஆவார். தான் நிமித்த காரணமாக மட்டும் இருந்தால். நிமித்த காரணனான குயவன், களிமண் கொண்டு பானை பிடிப்பது போல.

3. அவருடைய லீலையால் ஸ்ருஷ்டி செய்தால் – முன் கூறிய வைஷம்ய தோஷம் மற்றும் நைர்க்ருன்ய தோஷம் வரும். நம்மைத் தேவை இல்லாமல் கஷ்டம் மற்றும் சுகமான நிலையில் தள்ளுவதால். சில சமயம் சுகமும் கஷ்டமுமாவதால்.

இதற்கு வேதாந்தம் கூறும் விளக்கம், ஈஸ்வரன் தன் மாயையினை கொண்டு பலவாக காணப்படுகின்றார்.

மாயை என்பது உண்மை அல்லாததினை உண்மை போன்று காண்பிக்க சாமர்த்தியம் உடையது. மாயாவியின் மாயாஜால வித்தையில் காணும் தோற்றங்கள் போல. இதற்கு உதாரணம் – நம்முடைய கனவு. கனவில் நாம் நம்மை மட்டும் காண்பதில்லை. நாமும் பல விஷயங்களும் அங்கு காணப்படுகின்றன. அந்த விஷயத்திற்கு அங்கு இடமோ, நேரமோ, காரணப்பொருளோ கிடையாது. இருந்தாலும் அவை உண்மை போன்று நம் அனுபத்திற்கு வருகின்றன.

இது ஈஸ்வரனின் கனவா? இல்லை.

கனவில் எவ்வாறு விழிப்பு நிலையின் அறியாமை காரணமோ, அதுபோல, விழிப்பு நிலையும் நம் ஸ்வரூபத்தை குறித்த

அறியாமையே காரணம். இந்த அறியாமை, ஒன்றான (பிரிவற்ற) நம் ஸ்வரூபத்தை மறைத்து பலவான ஸ்ருஷ்டியைத் தோற்றுவிக்கிறது.

மாயையின் இரண்டு நிலைகள் ஆவரணம் மற்றும் விக்ஷேபம். ஆவரணம் நம்முடைய ஸ்வரூபத்தை (நாம் பிரம்மம் என்பதை) மறைக்கிறது. விக்ஷேபமானது அந்த மறைப்பின் மேல், பலவித தோற்றத்தை உண்டு செய்கிறது. மாயை என்பது ஸ்வரூபத்தின் அறியாமையால் தோன்றிய இல்லாத ஒரு கற்பனை என்பதால் அதன் இருப்பு குறித்த சந்தேகம் எழுப்புவது பொருந்தாது. இதனையே விவர்த்த காரியம் என்பர்.

காரியம் நான்கு வகைப்படும் –

1. உற்பத்தி – தோற்றுவிப்பது. களிமண்ணில் இருந்து பானை தோற்றுவிப்பது போல.
2. விகாரி – மாற்றம். பால் தயிராக மாறுதல் போல.
3. ஆப்யம் – அடையப்படுவது. முன்னர் இல்லாதது முயற்சியால் அடையப்படுவது போல. மதுரையிலிருந்து சென்னை வருவது போல.
4. சம்ஸ்கார்யம் – பக்குவப்படுத்துவது. ஒரு பொருள் சேர்ப்பதால் அல்லது நீக்குவதால் உண்டாவது. தண்ணிரில் தேதான்கொட்டை சேர்ப்பது போல.

இந்த விவர்தமானது, மேற்கூறிய எந்த வகையும் இல்லாமல் ஒரு புதிய வகை, மாற்றம் போல இருப்பது. கயிற்றில் பாம்பு போல, கானல் நீர் போல, சிப்பியில் வெள்ளி போல. அதனால் தான் இந்த உலகை தோற்றம் மாத்திரம் என்று கூறுகின்றோம். ஒருவனான ஈஸ்வரன் இந்த காரணத்தால் பலவானவனாக காட்சி தருகின்றான். இந்த விவர்த்தமல்லாத வேறொரு வழியிலும் இந்த பலவாக தோன்றும் நிலையினை தவறில்லாது ஏற்றல் இயலாது. இதனையே வேதத்தில் **एको अहम् बहु स्याम्** 'ஏகோ அஹம் பஹு ஸ்யாம்' – ஒன்றான நான்

பலவானவனாக ஆவேனாக. இந்த மாயையினை ஏற்காமல் ஸ்ருஷ்டியை விளக்குவது இயலாது. மாயை தோற்றமாத்திரம் என்பதால், அதன் சிருஷ்டியும் மாயையாகவே இருத்தல் இயலும். இதனை, ‘மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி’ என்று பின்னால் கூறுகிறார்.

இதனையே **पादोस्य सर्वा भूतानि त्रिपादस्य अमृतम् दिवि** ‘பாதோஸ்ய சர்வா பூதானி திரிபாதஸ்ய அம்ருதம் திவி’ – ஒரு கால் பகுதியில் இந்த உலகமும், மற்ற முக்கால் பகுதியில் மரணமற்ற ஆத்மாவும் உள்ளது, **अत्यतिष्ठत् दशाङ्गुलम्** ‘அத்யதிஷ்டத் தஷான்குலம்’ – ஸ்ருஷ்டியை காட்டிலும் பத்து அங்குலம் அதிகம் இந்த ஆத்மா உள்ளது, என்பவை கூறுகின்றது.

அல்லாமல், ஒரு பாதத்தில் (பாகம்) ஸ்ருஷ்டி என்று கூறுவதாக ஏற்றால் மற்ற முக்கால் பாகம் அநித்தியமாக ஆவது நிச்சயம். பத்து அங்குலம் அதிகம் என்றாலும், நாம் கருதக் கூடியதை காட்டிலும் பத்து அங்குலம் அதிகம் என்று வரையறைப் படுத்த இயலும் என்பதால் அநித்தியம் ஆகும்.

இந்த ஸ்ருஷ்டிக்குக் காரணம் விவேகம் இன்மை, இதுவே வேகம் என்று அடுத்த வரியில் கூறப்படுகிறது.

## வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க --- 6

வேகம் – மனதின் சிந்தனைகள், கெடுத்து – தடுத்து நிறுத்தி, ஆண்ட – என்னை ஆண்ட, வேந்தன் – இறைவன், அடி – ஸ்வரூபம், வெல்க – போற்றி.

(அல்லது)

வேதம் கெடுத்து – வைராக்கியம், ஆண்ட – தந்து என்னை ஆண்ட, வேந்தன் – இறைவன், அடி – ஸ்வரூபம், வெல்க – போற்றி.

எண்ண அலைகளைத் தடுத்து நல்வழிப்படுத்திய ஈஸ்வர ஸ்வரூபதிற்கு போற்றி.

(அல்லது ) வைராக்கியத்தை தந்து நல்வழிப்படுத்திய ஈஸ்வர ஸ்வரூபதிற்கு போற்றி.

கூறப்பட்ட விஷயங்கள் மனதில் பதிய நமக்குத் தடையாக நம்முடைய எண்ண ஓட்டமே காரணம் ஆகிறது. ஒருமுகப்படாத மனது தடையாக இருக்கிறது. இதற்குக் காரணம், மனது வேகமாக எண்ண அலையாக மாறுகிறது. மனதிலிருந்து எண்ணங்கள் தோன்றுகின்றன என்பது தவறு, மனது எண்ணமாக மாறுகிறது. இன்பம், துன்பம், ஆசை, சந்தேகம், பயம், வெட்கம், கோபம் எல்லாம் மனதின் எண்ண அலைகளே. எண்ணங்களே மனது. மனதில்லா தூக்கத்தில் எண்ணங்கள் இல்லை. இது போல் சமாதியிலும் மனது இல்லை, அதனால் எண்ணங்கள் இல்லை.

பொதுவாக உலகில் உள்ள ஆத்திக மற்றும் நாத்திக தத்துவமும் மனதினை கட்டுப்படுத்தவே கூறுகிறது. கட்டுப்படாத மனது ஒன்றும் அறிய இயலாது. யோக சூத்திரம் **योगः चित्तवृत्ति निरोधः** ‘யோக சித்த வ்ருத்தி நிரோத’ – யோகம் என்பது மனதின் எண்ண அலைகளைக் கட்டுபடுத்துவதே ஆகும், என்று தெளிவாக முதல் சூத்திரத்திலேயே கூறியுள்ளது. யோகமான, எண்ணங்கள் கட்டுப்படும் நிலையை நமக்கு கொடுத்து, அதாவது விவேகத்தை கொடுத்து என்று பொருள். விவேகம் என்றால் **विगत वेगम्** ‘விகத வேகம்’ – நீங்கிய வேகம், என்று பொருள், இதனையே வேகம் கெடுத்து என்று கூறியுள்ளார். நம்மை ஆட்கொண்ட இறைவனின் ஸ்வரூபம் போற்றி. விவேகம் என்றால் பிரித்தறியும் தன்மை. நான் யார், இந்த உலகம் எப்படிப்பட்டது, இறைவன் யார், நித்தியம் எது அநித்தியம் எது, என்று அறிவது. ஆத்மா நித்தியம் மற்றெல்லாம் அநித்தியம் என்பது விவேகம். வரையறுக்கப்பட்டது அநித்தியம், வரையறுக்கபடாதது நித்தியம். கடைசியில் விவேகம் என்பது அறிவு, அதாவது மனதற்ற நிலை.

அடுத்து, வேகம் என்ற இடத்தில் வேதம் என்ற ஒரு பாடமும் காணப்படுகிறது. வேகம் கெடுத்து என்றால் விவேகம் என்பது போல, வேதம் கெடுத்து என்றால் வைராக்கியம் எனப்பொருள். முண்டக உபநிஷத்தில் **ब्राह्मणो निर्वेदम् आयात्** 'பிராம்மணோ நிர்வேதம் ஆயாத்' – பிராமணன் வைராக்கியம் அடைகின்றான் என்று கூறப்பட்டுள்ளது. நிர்வேதம் என்ற சொல்லின் நேர்ப்பொருள் வேதமற்று என்று ஆகும். ஆனால், இது தவறானது, அதனால், இங்கு வைராக்கியம் என்று பொருள் எடுக்கப்படுகிறது. அதுபோல மற்ற இடத்தில் **वेदा अवेदा अभूवन्** 'வேதா அவேதா அபூவன்' – வேதம் வேதமற்ற நிலையை அடைந்தது என்கிறது. வேதம் தன் நிலை மாறி வேதமற்றது ஆவது இயலாது, அதனால், ஞான நிலையில் வேதம் தன்னிலிருந்து வேறல்லாதது ஆகிறது.

இந்த விவேகமும் வைராக்கியமும் அந்த ஈஸ்வரனைக் குறித்து மட்டும் சிந்திப்பதால் உண்டாகும். அதனையே வேந்தன் அடி – ஈஸ்வர ஸ்வரூபம், என்று கூறுகின்றார்.

இங்கு அவன் பிறப்பறுப்பவன் என்ற அறிவு உள்ளவன், அவரை அடைவதை வாழ்க்கையின் குறிக்கோளாக உள்ளவன் ஆகிறான். இதுவே முமுக்ஷுத்வம் – மோக்ஷம் வேண்டும் என்ற திடமான விருப்பம் என்று கூறப்படுகிறது.

## பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க --7

பிறப்பறுக்கும் – சம்சார பந்தத்தை அழிக்கும், பிஞ்ஞகன் – மஞ்சள் நிறமுடையவன் / அழிப்பவன், தன் – அவன், பெய்கழல்கள் – அழகிய பாதங்கள், வெல்க – போற்றி.

நம் அறியாமையை நீக்கும் அழகிய ஆத்மா ஸ்வரூபத்திற்கு போற்றி.

வேதாந்தத்தின்படி ஞானத்தால் மோக்ஷம். அந்த ஞானம் மட்டுமே பிறப்பை அறுக்கும் தகுதி உடையது. ஞானம் வேதாந்தத்தினால் உண்டாகும் ஞானம் மட்டுமே இங்கு ஏற்கப்படுகிறது. **प्रमाण जनित ज्ञानम्** 'பிரமாண ஜனித ஞானம்' – வேதாந்த பிரமாணத்தினால் உண்டான ஞானம், என்போம். தன்னை அறியாமல் அறியாமை நீங்காது. தன்னை அறிவது என்பது வேறு எந்த வழியிலும் முடியாது, விசாரத்தினால் மட்டுமே இயலும். விசாரம் மஹாவாக்கியமான **तत्त्वमसि** 'தத்வமசி' முதலிய வாக்கியத்தின் குறிப்பு பொருளை அறிவதே. அதாவது, சொற்பொருளான 'தத்' – அது, 'த்வம்' – நீ, 'அசி' – ஆகிறாய், 'நீ அதுவாகிறாய்' என்று குறிப்பிடுகிறது. இந்த அபேத நிலை (பிரிவற்ற நிலை) குறிப்பு பொருளினால் மட்டுமே இயலும். இந்த குறிப்பு பொருளும், வரையறைகளை நீக்கி ஆதாரமான சைதன்யம் நாம் என்று உணர்த்துகிறது.

தியானம், ஜபம், யோகம் முதலியவை மனத்தூய்மைக்கு மட்டுமே காரணம் ஆகின்றன. மோக்ஷத்தினைத் தர இயலாது. இப்படி மற்ற முறைகளில் அடையப்பட்டது அநித்தியம் ஆகிறது. இங்கு நாம் சிவனாதல் என்பது, அடைதல் முதலிய நிலை அல்ல. அறியாமை நீக்கினால் மட்டும், தானே ஒளிர்கின்ற ஆத்ம ஸ்வரூபம் அங்கு பிரகாஶிக்கிறது. முகம் பார்க்கும் கண்ணாடி மேல் உள்ள அழுக்கை நீக்கினால் மட்டும் போதுமானது, அதனை முகத்தை பிரதிபலிக்க வேண்ட வேண்டாம்.

பிறப்பிறப்பு என்பது சம்சாரம் என்று கூறப்படுகிறது. பிறப்பறுக்கும் என்றால், அங்கு இறப்பும் இல்லை என்று பொருள். பிறப்பு இருந்தால் இறப்பு தவிர்க்க முடியாதது என்பதால். பிறப்பு அறுத்தல் பிறப்பற்ற ஸ்வரூபம் உடைய ஈஸ்வரனால் மட்டுமே இயலும். பிறப்பற்ற நிலையே **अज - न जातम्** 'அஜ – ந ஜாதம்' என்ற சொல் குறிக்கிறது.

பிஞ்ஞகன் – அழிப்பவன் என்று பொருள். இருந்தாலும், **पिङ्ग वर्णे** ‘பிஞ்க வர்நே’ – நிறத்தில் என்ற வேர்சொல் மூலம் உண்டாகும் சொல். பிங்க என்பது நீலமும் மஞ்சளும் சேர்ந்த ஒரு நிறம். ஆனாலும் பொதுவாக மஞ்சள் நிறத்தை குறிப்பதாக ஏற்போம். முகிலன் – முகிலகன் என்பது போல, பிஞ்ஞு – பிஞ்ஞகன். சிவன் **हिरण्य बाहू हिरण्य स्मश्रू** ‘ஹிரண்ய பாஹு ஹிரண்ய ஸ்மஸ்ரு’ – தங்கத் தோள், தங்க உரோமங்கள், உடையவர் என்று கூறப்பட்டுள்ளது. இது சகுண பிரம்மத்திற்கு பொருந்தும். நிர்குண பிரம்மத்திற்கு பிஞ்ஞகன் என்றால் அழிப்பவன் அல்லது அழிப்பது என்று பொருள் ஏற்பது சரியாகும். பிஞ்ஞகன் என்றால் மயில் தோகை அணிந்து நடனம் ஆடுபவன் என்றும் ஒரு பொருள் உண்டு.

பிரம்மம் ஞான ஸ்வரூபமாக இருந்தாலும் அது அறியாமையை நீக்காது. அறியாமை அந்த பிரம்மத்தை குறித்த வ்ருத்தியினால் மட்டுமே இயலும். இதுவே பிரம்மாகார வ்ருத்தி அல்லது அகண்டாகார வ்ருத்தி என்றும் அறியப்படுகிறது. வ்ருத்தி – எண்ண அலை.

பெய் என்பது பேய் என்று சிலரால் திருவண்ணாமலை கோபுரத்தைக் குறிப்பிடும்போது கூறப்படுகிறது. ஆனால், இது பெய் கோபுரம். பெய் என்றால் அழகிய என்று பொருள். கழல்கள் என்றால் பாதங்கள், அடி. அழகிய பாதங்கள், பாதம் என்பது ஸ்வரூபம் என்று முன்னரே கூறப்பட்டது. அழகிய ஸ்வரூபம், ஆத்மாவைக் காட்டிலும் வேறேதும் அழகியதாக இருத்தல் இயலாது. மிகவும் அழகிய விஷயம் ஆனந்தத்திற்குக் காரணம் ஆவது இயலாது போகலாம். ஆனால், ஆனந்த ஸ்வரூபம் அழகியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால் ஆத்மாவை **परमप्रेमास्पद** பரமபிரேமாஸ்பதம் – மிகவும் விரும்பத்தக்கது என்று வேதம் கூறுகிறது.

விவேகமும் வைராக்யமும் அடிப்படைத் தகுதிகளாக வேதாந்தத்தில் ஏற்கப்படுகின்றன. அடிப்படைத் தகுதிகளாவன

- விவேகம் – நித்தியம் மற்றும் அநித்தியம் குறித்த அறிவு.
- வைராக்யம் – இங்கும் வேறிடத்திலும் உள்ள பலனில் பற்றின்மை.
- சமாதி ஷட்க சம்பத்தி – சமம் - மனக் கட்டுப்பாடு, தமம் இந்திரியக் கட்டுப்பாடு, உபரதி – தன்னுடைய தர்மத்தைக் கடைப்பிடிப்பது, திதிக்ஷா – இரட்டைகளை ஏற்றல், சமாதானம் – மன ஒருமுகப்பாடு, ஷ்ரத்தா – குரு மற்றும் வேதாந்த வாக்கியங்களில் சமர்பண புத்தி. மற்றவை இந்த விவேகம் மற்றும் வைராக்யத்தைச் சார்ந்ததாக இருக்கின்றன.
- நான்காவது தகுதியாக முமுக்ஷுத்வம் – மோக்ஷம் வேண்டும் என்ற திடமான விருப்பம்

எல்லாம் பிரம்மம் என்றால் அதை அடைய முயற்ச்சி அவசியம் இல்லை. அதனால், விவேகம் அல்லது வைராக்யம் அடைதல் அவசியமற்றது. இந்த சந்தேகத்தை நீக்க.

## புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க --- 8

புறத்தார்க்கு - ஏற்காதவர்களுக்கு, சேயோன் - அந்நியமானவன், தன் - அவன், பூங்கழல்கள் – பூப்போன்ற திருப்பாதங்கள் (அழகிய ஸ்வரூபம்), வெல்க – போற்றி.

வேதத்தை பிரமாணமாக ஏற்காதவர்க்கு அறிய இயலாத அவருடைய அழகிய ஸ்வரூபத்திற்கு போற்றி.

புறத்தார் என்றால் வேறு நிலை உடையவர் என்று பொதுவாக ஏற்கப்படும் பொருள். ஆனால் முன்னர் கூறியது போல, ஈஸ்வரனிலிருந்து வேறாக இருத்தல் இயலாது. ஈஸ்வரனைத் தவிர வேறொன்றும் இல்லாத காரணத்தால். அப்படி

இருக்கையில் புறத்தார் ஆவது எவ்வாறு இயலும். இங்கு ஏற்காதவர் என்று பொருள் கொள்ளவேண்டும். இப்படியும், ஏற்பவர்களுக்கு ஒரு முறையிலும் ஏற்காதவர்களுக்கு வேறொரு முறையிலும் தன்னுடைய கருணையைக் காண்பித்தால் ஈஸ்வரன் காரணமற்ற கருணை உடையவர், நல்லது – கெட்டது இல்லாதவர், உயர்வு – தாழ்வு அற்றவர் என்பது பொய்யாகும். புறத்தார் என்றால், தன் (ஆத்மா) இருத்தலை ஏற்க மறுப்பவர்.

ஆத்மா என்றால் என்ன ?

1. இந்த உடல் தான் என்று ஏற்கின்றனர் சிலர். உடல் அழியக்கூடியது என்பதால் அது ஆத்மா ஆவது இயலாது.
2. இந்திரியம் (புலன்) ஆத்மா என்று வேறு சிலர்.
3. பிராணன் ஆத்மா என்பர் இன்னும் சிலர்.
4. மனது ஆத்மா என்பர் மற்றும் சிலர்.
5. அறிவே ஆத்மா என்பர் சிலர்.
6. அந்த ஒன்றும் இல்லா (அறியாமை நிலை) ஆத்மா என்பர் சிலர்.

இப்படி ஆத்மாவைக் குறித்த வேதாந்த அறிவு இல்லாமல் பலவாறு ஆத்மாவை ஏற்கின்றனர். இவர்கள் ஆத்ம ஸ்வரூபத்தை அறியாதவர், ஆதலால் புறத்தார் ஆவர். அதாவது, ஆத்மாவை தனக்கு அன்னியமாக பார்ப்பவர்கள். தனக்கு அன்னியமாக மற்றவற்றைப் பார்பவர்கள். வேதமும் **उदरम् अन्तरम् कुरुते अथ तस्य भयम् भवति** ‘உதரம் அந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி’ – தன்னிலிருந்து வேறொன்று இருப்பது போல எவர் பார்கிறாரோ, அவருக்கு பயம் உண்டாகிறது.

இங்கு ஆத்திகர்களாக ஏற்கப்படும் இறை பக்தி உள்ளவர் என்று பொருள் கொள்வதில்லை. ஆத்திகர்கள் என்றால் ‘வேதத்தை

பிரமாணமாக ஏற்பவர்கள்'. பிரமாணம் என்றால் சரியான ஞானத்தை அறியும் கருவி. அப்படி வேதத்தை பிரமாணமாக ஏற்காதவர்கள் புறத்தார். ஞானம் தரும் கருவி வேதம், அதனை ஏற்காதவர் என்பதால் நித்தியமான ஞானம் குறித்த அறிவு வேறு வழியில் உண்டாக இயலாது. அதனால் புறத்தார் ஆகிறார். வேதமே நமக்கு பந்தம் மற்றும் மோக்ஷம் குறித்த அறிவை தருகிறது, அதனால் அந்த பந்தம் நீங்கும் அறிவும், அதாவது மோக்ஷம் அடையும் அறிவும் இந்த வேதமே தர இயலும்.

இப்படிப்பட்டவருக்கு, வேதத்தைப் பிரமாணமாக ஏற்காதவருக்கு, ஞானம் ஒருபோதும் உண்டாக இயலாது. அதனால் சேயோன் – தொலைவில் இருப்பவன். இதனால் ஷ்ரத்தா கூறப்பட்டதாகிறது.

ஈஸ்வரன் மிகப்பெரியதை வியாபித்து இருக்கிறார், மிகச்சிறிய ஒன்றுக்கும் இருத்தலைத் தருகிறார். அதனால், தூரமாகவும் அதே நேரத்தில் நெருங்கியவராகவும் இருக்கிறார்.

## கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க --- 9

> கரங்குவிவார் - வணங்குபவர், உள்மகிழும் – மனதில் ஆனந்தமாக இருக்கும், கோன்கழல்கள் – தலைவனின் ஸ்வரூபம் , வெல்க - போற்றி.
>
> வணங்குபவர் மனதில் ஆனந்த ஸ்வரூபமாக இருக்கும் ஈஸ்வரனுக்கு போற்றி.

கரங்குவிவார் தன்னுடைய கைகளால் தொழுபவர். இந்திரிய கட்டுப்பாடு உள்ளவர். இதையே தமம் என்று கூறினோம். கோவிலில் தீபாராதனை காட்டும் போதும் இயல்பாக, கடவுளின் அழகைப் பார்க்காமல், நாம் கண்களை மூடி உள்ளே இருக்கும் ஆத்மஜோதியை காண முயல்கிறோம்.

இங்கு கரங்குவிவார் என்பது நம்முடைய அடக்கத்தின் வெளிப்பாட்டைக் காட்டுகிறது. குரு காரணமற்ற கருணையுடையவர் என்றாலும் தன்னுடைய அடக்கத்தைக் காண்பிக்க தவறியவனுக்கு அறிவு தருவதில்லை. தாய் குழந்தையை நேசித்தாலும் அது அழாமல் பால் தருவது இல்லை, என்பது போல.

பகவத் கீதையிலும் **न शटाय न अश्रद्धाय** 'ந ஷடாய, ந அஷ்ரெத்தாய' – பிடிவாதகாரன், சிரத்தை இல்லாதவன், முதலியவருக்கு இந்த அறிவு தரக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. தன்னுடைய அடக்கத்தைக் காண்பிக்கவே குருவை அணுகும் முறையும் சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. முண்டக்கோபநிஷத் **समित्पाणि सन्** 'சமித்பாணி சன்' என்றும், கைவல்ய நவநீதம் 'போனவன் வெறுங்கையோடு போகாவண்ணம்' என்றும் கூறுகிறது.

## சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க —10

> சிரம்குவிவார் - தலை வணங்குவர், ஓங்குவிக்கும் – மேன்மை தரும், சீரோன் – ஸ்ரேஷ்டமான (மேன்மையானவர்), கழல் - ஸ்வரூபம், வெல்க - போற்றி.

> தலை வணங்குபவருக்கு மேன்மை தரும் மேன்மையானவர் ஸ்வரூபத்திற்கு போற்றி.

சிரம்குவிவது என்பது தலைகுனிவு என்று பொருள் தருவது இல்லை, மாறாக தலை வணங்குதல் ஆகும். இது சமம் அல்லது / மற்றும் சமாதானம் என்று கூறப்பட்டது ஆகும்.

இரண்டு கைகளைச் சேர்த்து வைத்து கொள்ளுதல் கரம் குவித்தல். தலையைத் தாழ்த்தி முகவாய் நெஞ்சில் படுவது போல வணங்குவது, சிரம் குவிதல். நம்முள்ளே (நெஞ்சில்)

இருக்கும் ஈஸ்வரனைக் காண முயற்சி செய்தாலும், இதுபோலவே நாம் இருப்போம்.

ஓங்குவிக்கும் - நம்மை கைதூக்கிவிடல், மேன்மையான நிலைதரல்.

மேன்மை என்பது இரு வகைப்படும் 1. அபேக்ஷிகமான மேன்மை 2. நிரபேக்ஷிகமான மேன்மை. வேறொன்றோடு தொடர்பில் மேன்மையாக காணப்படுவது முதல் வகை, உலகில் காணப்படும் மேன்மை. இதனை ப்ரேயஸ் என்பர். இரண்டாவது, எல்லாவற்றின் தொடர்பில் மேன்மையாக காணப்படுவது, பிரம்மஞானம் மட்டுமே இந்நிலைக்குத் தகுதியுடையது, இது ஷ்ரேயஸ் எனப்படும். இந்த ஷ்ரேயசைத் தருபவரே ஷ்ரேயோன். இந்த ஷ்ரேயோனையே இங்கு சீரோன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சீரோன் – சீர்கள், நற்குணங்கள் உள்ளவன். வேதாந்தத்தில் பகவான் என்றால் **भग यस्य अस्ति** ‘பக யஸ்ய அஸ்தி’ – பக எவரிடம் உள்ளதோ என்பர். பக என்றால் ‘ஞானம், வைராக்கியம், தர்மம், ஐஸ்வர்யம், யஷஸ் மற்றும் ஸ்ரீ’. இவை எவரிடம் முழுவதுமாக, குறைவற்று இருக்கின்றனவோ அவர் பகவான். விசிஷ்டாத்வைதம் சார்ந்தவர்கள், நிர்குண என்பதற்கு கல்யாண (மேன்மையான) குணங்கள் உள்ளவர் என்பர். அப்படிப்பட்ட கல்யாண குணங்கள் உடையவரை இங்கு சீரோன் என்று கூறியுள்ளார். மற்றவரை முறைப்படுத்துபவர், வழிபடுத்துபவர், சீராக்குபவர் சீரோன் என்று கூறலாம்.

சீர் மிக்க கூட்டத்தினை வழிநடத்துபவர் சீரோன் என ஆகலாம். இது பின்னால் ‘சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி’ ‘நின் பெரும்சீர் பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்’ என்றும் கூறி நமக்கு உணர்த்துகிறார்.

கழல் வெல்க - அவனுடைய ஸ்வரூபத்திற்கு போற்றி.

இவ்வாறு விவேகம் (6), வைராக்கியம் (6), முமுக்ஷுத்வம் (7), சமாதி முதலிய ஆறு தகுதிகளில் – சமம் (9), தமம் (10), சமாதானம் (10), சிரத்தை (8) கூறப்பட்டது.

சாதன சதுஷ்டயம் நிரூபித்த பின்னர், வேதாந்த அறிவினை விளக்கி நம்முடைய ஆசையை தூண்ட அந்த ஈஸ்வர ஸ்வரூபத்தைப் புகழ்கிறார்.,

## ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி --- 11

ஈசன் – ஈஸ்வரன் , அடிபோற்றி – ஸ்வரூபம் போற்றி, எந்தை - என் தந்தை, அடிபோற்றி – ஸ்வரூபம் போற்றி.

சகல ஐஸ்வர்யமும் உள்ள ஸ்வரூபத்திற்கு போற்றி. எல்லாவற்றுக்கும் காரணமான ஸ்வரூபத்திற்கு போற்றி.

ஈசன் என்ற சொல் **ईश ऐश्वर्ये** ‘ஈஷ ஐஷ்வர்யே’ - ஐஷ்வர்யத்தில், என்கிற வேர்ச்சொல்லிருந்து, ஆட்சி புரிபவர் என்று பொருள். ஆட்சிபுரியும் ராஜாவும் ஈஷன் ஆகிறான், அதனால் இங்கு ஐஷ்வர்யம் முழுதும் உள்ள ஈஸ்வரனே குறிக்கப்படுகிறார்.

ஐஸ்வர்யம் என்று குறிப்பிடுவது இங்கு ஏற்றிப்பார்த்த குணங்களை என்று அறியவேண்டும். அல்லாமல், ஐஸ்வர்யம் உள்ளவர் என்று ஏற்றால் முற்கூறிய குணம் – குணி என்ற வேறுபாடு உண்டாகும், அதனால் அநித்தியம் ஆவார்.

எந்தை – என் தந்தை என்று பொதுவாகப் பொருள் தந்தாலும், இங்கு காரணமான என்று பொருள். இந்த உலகிற்குக் காரண ஸ்வரூபன் ஈஸ்வரன். அடிபோற்றி என்பது எப்பொழுதும் போல ஈஷ்வர ஸ்வரூபத்தைப் போற்றக் கூறப்படுகிறது.

## தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி --- 12

தேசன் – தானே ஒளிர்கின்ற, அடிபோற்றி - ஸ்வரூபத்திற்கு போற்றி, சிவன் – மங்களமயமான, சேவடி – ஸ்வரூபத்திற்கு, போற்றி – போற்றி.

ஸ்வயம்ப்ரகாஶ ஸ்வரூபத்திற்குப் போற்றி, மங்களமயமான ஸ்வரூபதிற்குப் போற்றி.

தேசன் என்பது திராவிட தேசம், தென் தேசம், வட தேசம் என்ற பொருளில் இங்கு குறிப்பிடப்படவில்லை. தேசன் என்பது தேஜன் என்பதின் மரூவு. தேஜன் – தேஜோமயமானவன், பிரகாஶமயமானவன் என்று பொருள். பிரம்மத்தைக் குறித்து கூறும்போது ஸ்வயம்பிரகாஶம் - தானே ஒளிர்கின்றது, என்று கூறப்படும். ஸ்வயம்ப்ரகாஶம் என்றால் **अवेद्यत्वे सति अपरोक्ष व्यवहार योग्यत्वम्** ‘அவேத்யத்வே சதி அபரோக்ஷ வ்யவஹார யோக்யத்வம்’ – விஷயமாக அறியப்படாத நிலையில் நேரடி அனுபவத்திற்கு வருவது, என்பது லக்ஷணம். நெருப்பு, சூரியன் முதலியவை நேரடியாக பிரகாஶித்தாலும், அது வேத்யத்வம் - விஷயமாக பிரகாஶிக்கிறது. விஷயமாக இல்லாத தூரத்தில் உள்ள கிரகம் அல்லது பானையின்மை நேரடியாக அறியப்படுவதில்லை. இங்கு கூறப்படும் சிவனும் அதனால் சகுணமாக இருத்தல் இயலாது. சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், நெருப்பு ஆகியவை தம் பிரகாஶத்தினால் தான் ஒளிர்விடுகின்றன என்று **न तत्र सूर्यो भाति न चन्द्र तारकम्** ‘ந தத்ர சூர்யோ பாதி ந சந்திர தாரகம்’ என்ற மந்திரம் கூறுகிறது.

ஒவ்வொரு அறிவும் பார்ப்பான், பார்க்கும் முறை மற்றும் பார்க்கப்படும் பொருள் என்ற முப்புடிகள் உள்ளது. இந்த ஸ்வயம்ப்ரகாஶத்தில் இப்படிபட்ட முப்புடிகள் இல்லை. பார்க்கப்படும் ஆத்மா தனக்கு அன்னியமாக இல்லாததால்.

சிவன் என்றால் மங்களமயமானவன். அவனைத் தவிர ஏற்றிப்பார்க்கும் மற்ற எல்லாம் அமங்களமானவை. அவனைத் தவிர இங்கு வேறேதும் இல்லை. சிவன் என்ற சகுணத்தின் பெயர் நிர்குணத்திற்கு எவ்வாறு பொருந்தும்? நிர்குணத்தினை

தவிர வேறேதும் இல்லாத நிலையில், சகுணமே கற்பனை என்றபோது, அந்தப் பெயர் மட்டும் எவ்வாறு உண்மை ஆவது இயலும்.

## நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி --- 13

> நேயத்தே - விஷயத்தில், நின்ற - நிலைப்பட்ட, நிமலன் - தூய்மையானவன், அடி - ஸ்வரூபம், போற்றி - போற்றி.

> ஞேயமான விஷயத்தில் இருக்கும், அதனோடு சம்பந்தம் இல்லாமல் இருக்கும் ஈஸ்வர ஸ்வரூபத்திற்குப் போற்றி.

நேயம் என்பது விருப்பம், அன்பு என்றும் ஆகலாம். அன்பில் நின்றவன், அன்பிற்கு விஷயமானவன் என்று பொருள்.

நேயம் என்ற சொல்லும் ஞேயம் என்பதின் மரூஉ.. ஞேயம் என்பது திருபுடிகளில் ஒன்று. திருபுடி ஞானம் – அறிவு, ஞாதா – அறிபவர் மற்றும் ஞேயம் - அறிபடு விஷயம். இதுவே பார்ப்பான் முதலியவையாகக் கூறப்பட்டது.

வேதாந்தத்தின்படி ஞாதாவான மனது கூடிய சைதன்யத்தினில் இருந்து, ஞானமான வ்ருத்தி கூடிய சைதன்யம், ஞேயமான விஷயம் கூடிய சைதன்யத்தை அடைகிறது. மனதின் மாற்றமே வ்ருத்தி என்று கூறப்பட்டது. இப்படி ஞாதாவும் ஞேயமும் ஒருநிலை அடைதல் விஷயத்தின் பிரத்தியக்ஷம் என்று ஏற்கப்படுகிறது. சைதன்யம் சம்பந்தபடாத ஒன்றும் இங்கு இருத்தல் அடைய இயலாது. சைதன்யமே இருத்தல் (சத்) ஆகும். விஷயம் சைதன்ய சம்பந்தம் இல்லாதிருந்தால் அது அசத் ஆகும், முயல் கொம்பு, மலடி மகன் முதலியன இதற்கு உதாரணம். காரணம், விஷயம் எல்லாம் மாயையின் தோற்றம், மாயைக்கு இருத்தல் இல்லை.

பிரம்மம் 'சத் சித் ஆனந்தம்' – இருத்தல், அறிவு மற்றும் ஆனந்தம் ஸ்வரூபமானது. இவை அதன் குணம் அல்ல என்று கூறப்பட்டது; சத்தியம், ஞானம், ஆனந்தம் என்பவற்றை விளக்கும்போது. அப்படி விஷயமான பானை, துணி முதலியவை பிரம்ம சைதன்யம் கூடியதே. சைதன்யம் எப்போதும் பிரகாஶிப்பதால் (ஸ்வயம்பிரகாஶமானதால்) அதனை அறிய புலன்கள் அவசியமில்லை? சரிதான். ஆனால், இந்த சைதன்யம் அறியாமையின் ஆவரணம் (போர்த்தல் / மறைத்தல்) என்ற சக்தியினால் மறைக்கப்பட்டதால் நமக்கு இந்திரியத்தின் அவசியம் உண்டாகிறது. இந்த விஷயத்தில் இருக்கும் சைதன்யத்தையே இங்கு 'ஞேயத்தே நின்ற' என்று கூறுகிறார். சைதன்யத்தை விடுத்து ஒன்றும் இல்லை, என்பதால் இங்குள்ள எல்லாம் அந்த சைதன்யத்தை வரையறுப்பதாக உள்ளது. நாம் அதனால் தான் கல், மரம் முதலியவற்றை வணங்குதலைத் தவறாகக் கூறுவதில்லை. காரணம், அதில் உள்ள சைதன்யமே இங்கு வணங்கப்படுகிறது.

மேலே சொன்ன தேசன் மற்றும் இங்குள்ள ஞேயத்தே நின்ற என்பதற்கும் விரோதம் இல்லை. அங்கு உருவமற்ற (வரையறையற்ற) சைதன்யம், இங்கு உருவம் (வரையறை) கூடிய சைதன்யம்.

இப்படி சைதன்யம் வேறொன்றோடு சேர்ந்தால் வரையறுக்கப்படும், அது வரையறுக்கப்பட்டால் அநித்தியம் ஆகும் என்ற சந்தேகத்தை நீக்க, அடுத்த வாக்கியம்.

நிமலன் – நிர்மலன் என்பதின் மரூஉ. நிர்மலன் என்றால் மலம் அற்றவன், தூய்மையானவன் என்று பொருள். மாயை இங்கு மலம் என்று குறிப்பிடப்பட்டது. எந்த சம்பந்தமும் இருப்பதும் இங்கு மலம் என்று அறியலாம். மாயை சைதன்யத்தில் இருந்தாலும் அதனால் அது கலங்கப்படுவது இல்லை. மாயை முன்னர் கூறியபடி இன்மை இயல்புடையது. மாயை என்றால் **सत् असत् उभय विलक्षणम् अनिर्वचनीयम्** 'சத் அசத் உபய விலக்ஷணம் அநிர்வசநீயம்' சத் மற்றும் அசத்திலிருந்து வேறுபட்டது,

விளக்கப்பட இயலாதது. மாயை இருத்தல் உடையது இல்லை, இன்மையானது இல்லை, இதற்கு வேறுபட்டது. இருத்தல் பிரம்மத்தின் ஸ்வரூபம் மட்டுமே ஆகும். இன்மை மலடி மகன் போன்ற நித்திய இன்மையின் ஸ்வரூபம். ஆனால், கயற்றில் தோன்றும் பாம்பு, இருத்தல் என்றோ இன்மை என்றோ கூறுதல் இயலாது. இருந்தால் நீக்க இயலாது, அறிவினால் மட்டும் நிச்சயம் நீக்க இயலாது. இன்மையானால் நீக்க அவசியம் இல்லை. இதனை இப்படிப்பட்டது என்று விவரிக்க இயலாது. கயற்றில் பாம்பு காணப்படுகிறது, அது கயற்றிலேயே லயமும் ஆகிறது. இப்படியே இந்த ஸ்ருஷ்டியும் இருத்தல் மற்றும் இன்மைக்கு அப்பாற்பட்டது. கயறு பாம்பினால் எந்த ஒரு மாற்றமும் அடைவதில்லை, அது புதிய குணம் சேர்க்கையோ அல்லது பழைய குணம் நீக்கமோ அடைவதில்லை.

அதனால் எந்த ஒரு மாற்றத்தை பிரம்மத்தின் சம்பந்தத்தில் கூறினாலும் அங்கு ‘போன்ற’ என்ற வார்த்தையைச் சேர்த்தே புரிந்துகொள்ளவேண்டும். ஞேயத்தே நின்ற மற்றும் நிர்மலன் ஆகிய இரண்டும் ஒரே இடத்தில் இருத்தல் வேண்டும் என்றால் விஷயம் மாயையாக இருந்தால் மட்டுமே இயலும்.

## மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி ---14

> மாயப் பிறப்பு – மாயையான பிறப்பு, அறுக்கும் - அறுக்கும், மன்னன் - ஈஸ்வரன், அடி - ஸ்வரூபம், போற்றி - போற்றி.

> தோற்றம் மாத்திரமாக இருக்கும் பிறப்பை நீக்கும் ஈஸ்வரன் ஸ்வரூபம் போற்றி.

மாயப்பிறப்பு – பிறப்பு என்ற தோற்றம் மாத்திரமாக இருக்கும் நிலை. பிறப்பு உண்மையானால் நீக்க இயலாது, பொய்யானால் நீக்க வேண்டாம் என்று கூறினோம். மாயை

உண்மையல்லாது பொய்யல்லாது வேறு நிலை என்று அதன் லக்ஷணத்துடன் கண்டோம். ஆடு இல்லையென்றால் அது மாடாக இருத்தல் அவசியமில்லை, குதிரையாகவோ பாம்பாகவோ பறவையாகவோ இருக்கலாம். அதுபோல இல்லையின் (இன்மையின்) இன்மை என்றால் அது இருத்தலாக அவசியமில்லை, இருத்தல் இன்மை என்றால் அது இல்லை (இன்மை) ஆவது அவசியமில்லை.

அறுக்கும் – அறுக்கும். இங்கு அழிக்கும் என்றோ, வேறு சொல்லோ உபயோகிக்காமல் அறுக்கும் என்று கூறியது மிகவும் பொருத்தமானதே. இந்த ஸ்ருஷ்டி, சித் – ஜட கிரந்தி என்று கூறுவார், அதாவது சைதன்யமும் ஜடமும் சேர்ந்த கூட்டம். முண்டகோபனிஷத் கூறுவது **भिद्यते हृदय ग्रन्ति** 'பித்யதே ஹ்ருதய கிரந்தி' – மனதில் உள்ள முடிச்சு அறுக்கப்படுகிறது என்கிறது.

பிறப்பை அறுப்பது ஞானத்தினால் மட்டுமே ஆகும். அறியாமை அறிவினால் மட்டும் நீங்கும், அதுவல்லாது ஆயிரம் செயல்களாலும் நீங்காது. இந்த ஞானம் நம்முடைய ஸ்வரூபத்தை குறித்த ஞானம் ஆகும். உபாதான காரணமான பொருட்காரணத்தோடு நீங்குதல் பாதம் என்றும், அதுவல்லாமல் காரியம் மட்டும் நீங்குதல் நிவ்ருத்தி என்றும் கூறப்படுகிறது.

## சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி — 15

சீரார் – மேன்மையானவர்கள் , பெருந்துறை - பெருந்துறை, நம் – நமது, தேவன் - ஈஸ்வரன், அடி – ஸ்வரூபம், போற்றி - போற்றி.

மேன்மையானவர்கள் வாழும் பெருந்துறையில் இருக்கும் நம் ஈஸ்வரன் ஸ்வரூபம் போற்றி.

சீரார் – சரியானவர்கள், மேன்மையானவர்கள், பக்குவப்பட்ட பலர் இருக்கும் பெருந்துறை. பெருந்துறையில் இருப்பவர்கள்

சிவகணங்கள், சிவ கிங்கரர்கள். கிங்கரர்கள் குரூபமாக சித்தரிக்கபடுவார்கள் ஒரு கண், மூன்று கண் முதலியவை உடையவர்களாக. இப்படிப்பட்ட குரூபிகளை தங்களருகில் அசிங்கமானவர்கள் அல்லது அடக்கும் குணம் உள்ளவர் சேர்ப்பர். ஈஸ்வரன் சுந்தரன், அழகானவன் அதனால் முதல் காரணம் பொருந்தாது. இரண்டாவது காரணமும் பொருந்தாது ஏனென்றால் அவர் நிர்மலர், சேர்க்கையற்றவர், நினைத்த மாத்திரத்தில் எல்லாமும் அடைபவர். அதனால், இங்கு புற அழகு முக்கியமற்றது என்பதைக் காட்டவே ஈஸ்வரன் தன்னருகில் இப்படிப்பட்ட குரூபிகளைக் கொண்டுள்ளார்.

அவர்கள் சீரானவர்கள், ஏனென்றால் நியமத்திற்கு கட்டுப்பட்டவர்கள். ஈஸ்வரனை, ஆத்மாவை ஏற்பவர்கள். ஈஸ்வரனை ஏற்காமல் வேறெதையும் ஏற்பதினால் எந்த மேன்மையும் இல்லை. **यथा राजा तथा प्रजा** 'யதா ராஜா ததா பிரஜா' – அரசன் எவ்வழி மக்களும் அவ்வழி. அதனால், நம் தேவன் சீரானாக இருப்பதால் அங்கு இருப்பவர்களும் சீருடயவர்கள்.

சீரற்றவர்களைச் சீர் செய்வது குருவின் கடமை, தொழில். அதுவல்லாது நம்மை தகுதியற்றவர் என்றோ, நாம் இதற்குத்தான் தகுதி என்றோ நம்மை கீழ் நிலையில் வைப்பவர்கள், ஆத்மஞானத்தை தராமல் இருப்பவர்கள் குரு என்ற சொல்லிற்குத் தகுதியுடையவர் ஆகார்.

துவக்கத்திலேயே 'கோகழி ஆண்ட', 'ஆகமமாகி' என்று குருவின் பெருமைகளை கூறினார். இங்கு மீண்டும் அதனைக் கூறுதல் மோக்ஷம் அடைய குருவின் முக்கியத்துவத்தை காண்பிக்கவே ஆகும். சீராரான பெருந்துறை வாழும் நம் ஈஸ்வரன். குருவின் பிறந்த இடம், இருந்த இடம் அல்லது சமாதி அடைந்த இடம் தீர்த்த ஸ்தலம் என்று ஏற்கப்படுகிறது.

## ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி --- 16

ஆராத – குன்றாத, இன்பம் – ஆனந்தம், அருளும் – தரும், மலை – மாற்றமற்ற ஸ்வரூபம், போற்றி – போற்றி.

குன்றாத இன்பம் தரும் மாற்றமற்ற ஸ்வரூபத்திற்குப் போற்றி.

ஆராத இன்பம் – குன்றாத, வற்றாத ஆனந்தம் (நிரதிஷய ஆனந்தம், பரம ஆனந்தம்). **आनन्दम् ब्रह्म इति व्यजानात्** 'ஆனந்தம் பிரம்ம இதி வ்யஜாநாத்' - பிரம்மம் ஆனந்த ஸ்வரூபம் என்று அறிந்தார் என்று வேதாந்தமும் கூறுகிறது. விஷயத்தில் உண்டாகும் ஆனந்தம் சிறிது நேரத்தில் குறையும் அல்லது திகட்டும். ஆனால் நம் ஆத்மா ஆனந்தமோ மாறாது, குன்றாது எப்பொழுதும் இருப்பது, ஆனந்தம் அதன் ஸ்வரூபம் ஆனதால். இங்கு ஆனந்தம் என்று பிரம்மத்தைக் கூறக் காரணம் அதில் துன்பம் சிறிதும் இல்லை என்பதைக் கூறவே. இதுபோலவே பிரம்மத்தில் அறியாமையற்ற நிலையைக் கூற அறிவு என்றும், இன்மையை நீக்க சத் என்றும் கூறுகிறோம். இன்மை எப்போதும் அதிஷ்டானத்தின் ஸ்வரூபமாக இருக்கும்.

விஷயத்தின் இன்பம் மூவகை –

1. ப்ரியம் – விஷயத்தை பார்க்கும்போது உண்டாவது.
2. மோதம் – விஷயத்தை அடைவதால் உண்டாவது.
3. பிரமோதம் – விஷய அனுபவத்தால் உண்டாவது.

மலை என்பது அருணாசலத்தையோ அல்லது கைலாய மலையையோ குறிப்பது இல்லை. மலை என்றால் அசலம் ' ந சலம்' – சஞ்சலமற்றது, அதாவது மாற்றமற்றது என்று பொருள். ஆத்மா ஸ்வரூபம் மாற்றமற்றது ஆகும். அதைக் குறிக்கவே மலை என்று கூறப்பட்டது.

'மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி' மற்றும் 'ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி' என்பதற்கும் இடையில் 'சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி' என்று

கூறப்பட்டது மிக முக்கிய காரணத்தினால். இங்கு மாயப்பிறப்பு அறுந்தால் உண்டாவது ஆராத இன்பம், ஆனால் இந்த இன்பத்தை அடைய முக்கிய காரணம் பெருந்துறை தேவன், குரு என்பதால், இரண்டிற்கும் இடையில் அவரைப் போற்றுகிறார். உலக வழக்கில் 'குரு தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது' என்று கூறுவதும் உண்டு. வேதாந்தமும் **आचार्याद् एव विदिता विद्या साधिठम् प्रापत्** 'ஆசார்யாத் ஏவ விதிதா வித்யா சாதிஷ்டம் ப்ராபத்' – குருவிடமிருந்து அடையப்பட்ட வித்தையே நிலைப்பாடும், **आचार्यवान् पुरुषो वेद** 'ஆசார்யவான் புருஷோ வேத' – குருவுடையவன் ஞானத்தை அடைகிறான் என்பது முதலாக கூறுகிறது.

குரு என்பதே அறியாமையைப் போக்கி அறிவைத் தருவது என்று பொருள். ஆசார்யர் என்றால் **आचिनोति आचरति आचारयति** 'ஆசிநோதி ஆச்சரதி ஆசாரயதி' – சாஸ்த்திரத்தில் கூறப்பட்ட விஷயத்தை அடைந்து, அதை கடைபிடித்து மற்றவரையும் கடைப்பிடிக்கவைப்பவர். தான்தோன்றியாக அறிவு உண்டாகாது. அறியாமையில் இருக்கும் புத்தி, அறிவை அறிவது இயலாது.

மற்ற பிரமாணங்களால் வெளிவிஷயங்களைப் பற்றிய அறிவு உண்டாகிறது. வேதாந்தமோ தன்னை குறித்த அறிவைத் தருகிறது. வெளிவிஷயத்தைப் பற்றிய அறிவு வேதாந்த பிரமாணம் காட்டிலும் வேறு பிரமாணங்களால் ஒன்று மற்றொன்றை நிராகரிக்கும். ஆத்மாவைக் குறித்த அறிவோ வேதாந்தப் பிரமாணத்தினால் மட்டுமே உண்டாகும். மற்ற பிரமாணங்களால் அடையப்பட்ட ஞானமானது வேதாந்தப் பிரமாணம் கொண்டு நீங்கும், ஆனால் வேதாந்தத்தை மிஞ்சிய பிரமாணம் இல்லாததால், அதனால் அடையப்பட்ட அறிவு நிராகரிக்கப்படாதது. ஆராத இன்பம் அருளும் மலை என்பது என்ன என்று சந்தேகம் இந்நிலையிலும் வந்தால், அதை நீக்க கூறுகிறார்.

## சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால் --- 17

> சிவன் – தன்னுடைய ஆத்மாவாக, அவன் – அந்த பிரம்மம், என்சிந்தையுள் – என் புத்தியில், நின்ற அதனால் – நின்றதால்.
>
> தன் ஆத்மாவாக அந்த பிரம்மம் என் புத்தியில் நிற்பதால்.

சிவன் – மங்களமயமானவன். வேதாந்த உபதேசத்தை பெற்று அதன் அடிப்படையில் விசாரம் செய்ததால், என்னுடைய புத்தியில் நிலைப்பதால். கைவல்ய நவநீதமும் 'என்னுடைய மனது புத்தி இந்திரிய சரீரமெல்லாம் என்னுடைய அறிவினாலே இரவிமுன் இமமே ஆகி' – வேதாந்த அறிவினால் மனது முதலியவை சூரியன் முன் பனி போன்று நீங்கிற்று, என்று கூறப்பட்டுள்ளது.

சிந்தையுள் என்பது மனதுள் என்றோ அறிவில் என்றோ சித்தத்தில் என்றோ கூறுவது தவறில்லை. அந்தக்கரணம் என்று கூறப்படும் உள் இந்திரியம், நான்கு வகை செயல் புரிகின்றது. ஒவ்வொரு செயலிலும் ஒரு பெயர் அடைகிறது. ஒரே அந்தக்கரணம் நான்கு செயல் புரிகின்றது, நான்கு மாற்றங்கள் அடைகிறது. இதற்கு மாறாக நான்கு வகைப்படுகின்றது என்றோ நான்கு பகுதிகள் ஆகிறது என்றோ ஏற்பது தவறு.

இந்த அந்தக்கரணத்தின் நான்கு செயல்கள்

1. மனது – சந்தேகப்படும் சுபாவம் உள்ளது.
2. புத்தி – தெளிவாகத் தீர்மானம் செய்வது.
3. சித்தம் – பதியவைத்துக் கொள்வது மற்றும்
4. அஹங்காரம் – அபிமானம் கொள்வது.

இந்த நான்கு செயல்களும் ஒரு அந்தக்கரணத்தில் தோன்றும் விருத்தியின் வேற்றுமையால் ஆகின்றன.

'இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்' என்றும் 'எண்ணுதற்கு எட்டா' என்றும், இங்கு 'சிந்தையில் நின்ற' என்று கூறுவதும் விரோதம் போலத் தோன்றும். எண்ணுதற்கு எட்டா என்பது **मनोवाचाम् अगोचरम्** 'மனோ வாசாம் அகோசரம்' – மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதவர். அஞ்ஞானிக்கு ஆத்மா மனதிற்கு விஷயம் ஆகிறது, ஞானிக்கோ மனதே ஆத்மா ஸ்வரூபம் ஆகிறது. நம்முடைய முன்வினைப்பயனால் அந்த ஆத்மா குறித்த சிந்தனை நமக்கு உண்டாகின்றது. இதனை நினைவில் வைத்து அடுத்த வரிக்குச் செல்லவேண்டும். நம் முன்வினையைச் சாராமல் இறைவன் நமக்கு அருள் செய்தால் அவர் பக்ஷபாதம் பார்ப்பவர் ஆவார். முன்னர் கூறிய வைஷம்ய மற்று நைர்க்ருன்ய தோஷம் ஈஸ்வரனில் உண்டாகும்.

## அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச் --- 18

> அவன் - ஈஸ்வரன், அருளாலே - அருளால், அவன்தாள் – அவன் ஸ்வரூபத்தை, வணங்கிச் - அறிந்து.

> அவருடைய பிரகாஶத்தால் அவர் ஸ்வரூபத்தை அறிந்து.

இங்கு ஈஸ்வரன் அருளால்தான் அவனை வணங்குதல் இயலும் என்பது போல குறிக்கிறது. இப்படி எடுத்தால், இறைவன் கொடுங்கோலன் என்பது மட்டும் அல்லாமல், நமக்கு இறை சிந்தனை வராவிட்டால் அது ஈஸ்வரனின் குறையாகுமே தவிர நமது குறை ஆகாது, என்றும் ஆகிவிடும்.

புராணத்தில் கூறியிருப்பது 'நீ என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் நான் மீதமுள்ள தொந்நூற்றோன்பது அடி உன்னை நோக்கி எடுத்து வைப்பேன்'. அதுபோல கட உபநிஷத்திலும் **यम् एव एष वृनुते तमेव तनूम् स्वाम्** 'யம் ஏவ ஏஷ வ்ருனுதே தமேவ தநூம் சுவாம்' – எவன் அதை ஏற்கிறானோ

அவனுக்கே தன்னுடைய ஸ்வரூபத்தைக் காண்பிக்கும், என்று கூறுகிறது. இப்படி தன் முயற்சியை எவன் செய்கிறாரோ அவருக்கே ஆத்மா தன் ஸ்வரூபத்தை காண்பிக்கும். நம்முடைய ‘புருஷார்த்தம்’ – சொந்த முயற்ச்சி, இல்லாமல் ஈஸ்வரனும் கூட நமக்கு ஞானத்தை தர இயலாது.

அருள் மூன்று வகைப்படும் குரு கிருபா, சாஸ்திர கிருபா மற்றும் ஆத்மா கிருபா. குருவே ஈஸ்வரன் என்பதால், குரு கிருபையும் ஈஸ்வர கிருபையும் ஒன்றே. மற்ற இரண்டும் இருந்தாலும் ஆத்மகிருபா இல்லாவிட்டால் ஞானம் அடைவதியலாது. வேதாந்தத்தில் இறைவனான பிரம்மனும் தன் சிஷ்யரான இந்திரனுக்கு ஞானம் போதித்து விசாரம் செய்ய தூண்டினார். தன்னுடைய மகனான பிருகுவுக்கும் உபதேசம் மட்டுமே வருணன் செய்தார். யமனும் நசிகேதனுக்கு உபதேசம் மட்டுமே செய்தார், ஆசீர்வாதம் மூலமோ வேறு வழிகள் மூலமோ ஞானத்தைத் தரவில்லை. அவ்வாறு தர இயலாது.

அருள் என்பது இறை ஸ்வரூபமே என்பதால், ஈஸ்வரனைப் போல அருளும் நீக்கமற நிறைந்துள்ளது. அதை அடைய நம்மை நாம் தகுதி செய்து கொள்ளவேண்டும். பாத்திரம் ஓட்டையாகவோ, கவிழ்த்து வைத்தோ இருந்தால் நீர் சேகரித்தல் இயலாது. அதுபோல நாம் நம்மைச் சரியான பாத்திரமாக ஆக்கிக்கொள்ளவேண்டும். அதோடு எந்தவித தடைகளும், பாவம் முதலிய தடைகள், இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பாத்திரம் ஒழுங்காக இருந்தாலும், நீர் அதனுள் விழ, தடை இருந்தால் நீர் நிரம்பாது, அதுபோல, தடைகள் இருந்தாலும் ஞானம் உண்டாகாது. இந்த கிருபை அடையும் வழிகளாக பூஜை முதலியவை கூறப்பட்டாலும். இதனை காட்டிலும் சிறப்பான வழி **तद् चिन्तनम् तद् कथनम् तद् अन्योन्यप्रबोधनम्** ‘தத் சின்தனம் தத் கதனம் தத் அன்யோன்ய பிரபோதனம்’ – அதனைக் குறித்துச் சிந்தித்தல், அதனைக் குறித்து பேசுதல், அதனைக் குறித்து உரையாடல்.

சூரியனை சூரிய வெளிச்சம் கொண்டு காண்பது போல, இங்கு ஈஸ்வரனை அவனுடைய பிரகாஶம் கொண்டே அறியமுடியும். வேறு பிரகாஶம் இல்லாததால், அவரே எல்லாவற்றையும் பிரகாஶிப்பதால்.

அவரை வணங்கி என்ன செய்ய இருக்கிறார் என்பதை அடுத்த வரியில் கூறுகிறார்.

## சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை --- 19

சிந்தை மகிழ – மனதில் ஆனந்தம் உண்டாக, சிவ புராணம் தன்னை - சிவ புராணத்தை.

சித் ஸ்வரூபம் ஆவதற்கு சிவபுராணத்தை.

சிவ புராணத்தை எழுதுவது குறித்து கூறுகிறார் என்பது அடுத்த வரியோடு சம்பந்தபடுத்திக் காணும்போது தெளிவாகிறது.

ஆனால் சிந்தை மகிழ என்றால் என்ன? மனது ஞானிகளுக்கு சிவ ஸ்வரூபமே ஆகும் என்று கூறினோம். முன்னர், 'இமைப்பொழுதும் என்நெஞ்சில்' என்றும், 'ஆறாத இன்பம் அருளும் என்றும்' தன்னுடைய ஆத்ம ஞான நிலைப்பாட்டினை கூறினார். அதனால் இங்கு இந்த பாட்டைத் தன் பொருட்டு எழுதினார் என்பது தவறாகும். பின்னர் யாருக்கு எழுதினார் என்றால், கர்மவினை என்ற தடை உள்ளவர்களுக்காகவே.

ஆனால், பரோக்ஷ ஞானிக்கும் கர்மவினை தடையாக இருப்பதால் அந்த ஞானம் அபரோக்ஷமாக (நேரிடை அனுபவமாக) வருவதில்லை. அப்படி, மாணிக்கவாசகரும் பரோக்ஷத்தை அடைந்தார், அபரோக்ஷத்திற்கு இங்கு வேண்டுகிறார் என்பது தவறு. 'இமைப்பொழுதும் என்நெஞ்சில்' 'சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற' என்றும் அபரோக்ஷ அனுபவத்தைக் கூறி இருப்பதால்.

இங்கு இது பிரதிஞா வாக்கியம் (சூளுரை) என்பர். 'யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்பது போல, எல்லோரும் இந்த இன்பநிலை அடைய அந்த தத்துவத்தின் உண்மை குறித்து பாடுகிறார். இல்லையேல், மிகவும் தாழ்ந்த நிலையில் கூறினால், இந்த வாதம் நமக்கு ஏற்புடையது இல்லை. இங்கு அவர் அபரோக்ஷ ஞானம் அடைந்தாலும், அந்த ஞானம் நிலைப்படவில்லை அதனால் அது நிலைப்பட என்று பொருள் கொள்ளலாம்.

இந்த நிலை ஏற்றால், வெவ்வேறு சமாதி நிலைகளை அறியவேண்டும். சமாதி நான்கு வகைப்படும் –

1. தானே திடமின்மையால் வெளிப்படுவது.
2. அடுத்தவரால் வெளிப்படுவது.
3. பிராரப்தம் என்ற கர்ம வினையால் வெளிப்படுவது மற்றும்
4. சஹஜ சமாதியிலேயே இருப்பது.

இந்த சஹஜ சமாதியை அடைய என்று ஏற்கலாம்.

யோக சூத்திரத்தில், சமாதி பழகுவதால் ரிதம்பரா என்ற ப்ரஞா உண்டாகும், இந்த ப்ரஞா சம்ஸ்காரத்தை அழிக்கும், அதனால் சமாதி உண்டாகும் என்ற சக்கிரம் கூறப்பட்டுள்ளது. அதுபோல, இங்கு 'சிவனருள் என் சிந்தையில்', அதனால் 'அவன் அருள்' அதனால் 'சிந்தை மகிழ' என்ற சக்கிரம் உண்டாகும். முற்பிறவியில் நாம் செய்த கர்மங்கள் நமது சம்ஸ்காரமாக வெளிப்படும்.

**முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான். — 20**

முந்தை - பழைய, வினைமுழுதும் – எல்லா புண்ணிய பாவ கர்மங்களும் அதன் பலனும், , ஓய - அடங்க, உரைப்பன் கூறுவேன், யான். – நான்.

அடையாதவர்கள் இந்த ஈசனை அடைய, தடையான அவர்கள் கர்மங்கள் ஒய்வதற்கு இந்த சிவபுராணத்தைக் கூறுகிறேன்.

கர்மம் செயலுக்கும் பலனுக்கும் உபயோகிக்கப்படும் ஒரு சொல். கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களிலும் கர்மம் என்றே இது அழைக்கப்படுகிறது. புண்ணியமும் பாபமும் கர்மம் எனப்படும். இந்த புண்ணிய பாவத்தை அடைய செய்யும் செயலும் கர்மம் ஆகும். விதி மற்றும் நிஷித்தம் என்று இரண்டு வகை. விதி என்பது செய் என்று பணிக்கும் கர்மம் - சந்தியாவந்தனம், நிஷேதம் என்பது செய்யக்கூடாத என்று பணிப்பது – மது அருந்துதல்.

இந்த செயல் நான்கு வகை நித்தியம், நைமித்திகம், காம்யம் மற்றும் பிராயஸ்சித்தம்.

1. நித்தியம் – தினமும் செய்ய வேதம் விதித்த கர்மங்கள். சந்தியாவந்தனம் போன்றவை.
2. நைமித்திகம் – சில நிமித்தங்களால் செய்யப்படும் கர்மங்கள். அமாவாசை தர்ப்பணம் போன்றவை.
3. காம்யம் – பலனில் உள்ள விருப்பத்தினால் செய்யப்படும் கர்மங்கள். மகன் பிறக்க வேண்டி செய்யும் புத்ரகாமேஷ்டி போன்றவை.
4. பிராயஸ்சித்தம் – முன்னர் உள்ள பாவங்களைப் போக்கிக்கொள்ளச் செய்யப்படுவது. கங்கை ஸ்நானம் போன்றவை.

இவ்வாறு கர்மங்களின் கூட்டம் இருந்தாலும், இங்கு நாம் அறியவேண்டிய கர்மங்கள் சஞ்சிதம், ஆகாமி, மற்றும் பிராரப்தம் என்று மூவகை.

1. சஞ்சிதம் – பல பிறவிகளில் நாம் சேர்த்த கர்மக்கூட்டதிற்கு பெயர். கிடங்கிள் உள்ள தானியம் போன்றது.
2. ஆகாமி – நம்முடைய அடுத்துவரும் சில பிறவிகளை மாற்றக்கூடிய கர்மங்கள். கிடங்கிலிருந்து வீட்டு சமையல்கூடத்தில் வைத்திருக்கும் தானியம்.
3. பிராரப்தம் – இந்த பிறவியைத் தீர்மானிப்பது, இந்தப் பிறவி, ஆயுள் மற்றும் அனுபவங்கள் தீர்மானிப்பது. அடுப்பில் இப்போது உண்ண ஏற்றப்பட்ட தானியம்.

பரோக்ஷ ஞானத்தால் சஞ்சிதம் கர்மம் அழியும். அபரோக்ஷத்தல் ஆகாமி கர்மம். பிராரப்தம் அனுபவத்தாலேயே அழியும்.

அபரோக்ஷஞானமானது எல்லா கர்மங்களையும் அழிக்கும் என்று பகவான் கிருஷ்ணனும் கீதையில் கூறுகிறார் **ज्ञानाग्निः सर्व कर्माणि भस्मसात् कुरुते** ‘ஞானாக்னி சர்வகர்மாணி பஸ்மாஸாத் குருதே’ – ஞான நெருப்பு எல்லா கர்மங்களையும் சாம்பலாக்கும்.

இங்கு கர்மங்கள் அழிய என்று கூறாமல், ஓய என்று கூற காரணம், அழிவது மீண்டும் வேறு நிலையில் தோன்ற இயலும். ஓய்ந்தது – லயம் அடைந்தது, தோற்றம் மாத்திரமாய் இருப்பது, அதன் காரணத்தில் போய் ஒடுங்குதல் லயம். பாம்பு கயற்றில் லயம் அடைதல் போன்று. தோன்றிய இடத்தில் ஒடுங்குவது. அப்படிபட்ட இந்த ஞானத்தை எல்லோரும் அடையும் பொருட்டு, அதன் தத்துவத்தை குறித்து நான் தெளிவாகக் கூறுவேன்.

**கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி -21**

கண் – கண், நுதலான் - நெற்றியில், தன்கருணைக் – தன்னுடைய கருணை, கண்காட்ட – கடைக்கண் காட்ட, வந்தெய்தி – வந்து சேர்ந்து.

நெற்றிக்கண்ணுடையவர் தன்னுடைய கருணையை என் கண்களில் காட்ட வந்துள்ளார்.

கண் நுதலான் - நெற்றிக்கண் உடையவன். நுதல் – நெற்றி. அந்த கண்ணைத் திறந்தால் அக்னி வெளிப்படும். அது சம்ஹாரம் செய்யும் கண். இந்தக் கண் ஆக்கவும் அழிக்கவும் வல்லது. இந்தக் கண்கொண்டு காமனை (நக்கீரனையும்) வதம் செய்தார், இதே கண்ணிலிருந்து முருகப்பெருமான் தோன்றினார். காமன் விடும் அம்பை அதுபோல அம்பு கொண்டு காமாக்ஷி தடுத்தால், சிவன் அந்த அம்பையும் அதை எய்தவனையும் முழுவதுமாக அழிப்பார். அதாவது, காமம், குரோதம், மதம் முதலிய தீய, அறிவுக்குத் தடையான குணங்களை இந்தக் கண் கொண்டு அழிக்கின்றார். அதே நேரம், நெருப்பு என்றால் ஞானம், முருகன் ஓம் என்ற மந்திரத்தை தந்தைக்கு உபதேசம் செய்தவர். அந்த ஞான ஸ்வரூபன் தோன்றினார். சிவன் ஞான ஸ்வரூபன் அவரிடமிருந்து தோன்றுவது அஞ்ஞானமாக இருத்தல் இயலாது.

இந்த நெற்றிக்கண் ஞானக்கண். இது விஷயத்தின் உண்மைத் தன்மையை காண்பிப்பது. காரியத்தின் உண்மைதன்மை உணர்ந்தால், அதன்மேல் உள்ள பற்று போகும். யோகிகள் மனது வறுத்த விதை போன்றது, அது முளைக்க, விஷயத்தில் பற்றுகொள்ளும் சாமர்த்தியம் இல்லாதது என்று யோக சூத்திரம் கூறுவதும் இதையே.

தன் கருணைக் கண்காட்ட – ஈஸ்வரன் தன்னுடைய கருணை நிறைந்த கண்ணை காட்ட. ஈஸ்வரனாகிய குருவின் கடைக்கண் பார்வையே இந்த சம்சாரத்தை அழிக்கவல்லது எனும்போது, அவர் நேராக நோக்கி நமக்கு தீக்ஷை அளித்தால் கூறவும்

வேண்டுமா? தீக்ஷை என்ற சொல்லின் பொருள் **दीयते क्षयति** 'தீயதே க்ஷயதி' – கொடுத்து அழிப்பது, அதாவது ஞானத்தை கொடுத்து அஞ்ஞானத்தை அழிப்பது. இதனை தமிழில் 'தீ கை' - அழித்து கொடுப்பது என்பர், அதாவது, அஞ்ஞானத்தை அழித்து ஆனந்தத்தைக் கொடுப்பது.

கண்காட்ட என்பது கண் நுதலான் என்பதோடு சேர்த்து ஞானக்கண்ணைக் காட்ட என்றும் பொருள் எடுக்கலாம்.

அல்லது, தன்கருணைக் கண்காட்ட, அந்த முக்கண்ணன் எல்லா இடத்திலும் வியாபித்து இருந்தாலும், நமது அனுபவத்திற்கு வராது இருப்பதால், ஈஸ்வரன் உண்டா இல்லையா என்ற சந்தேகம் உண்டாவது இயல்பு. இருந்தால் கண்ணால் காணவேண்டும், காணப்படாததால் ஈஸ்வரன் இல்லை என்று தீர்மானம் உண்டாகும். அதனால், ஈஸ்வரன் தன்னுடைய கருணையை நமது கண்ணிற்குக் காட்ட.

வந்தெய்தி – வந்து சேர்ந்து. இங்கு விரோதமாகக் கூறியுள்ளார் என்று தோன்றும். காணப்படுபவர் என்றானால் வரையறுக்கப்பட்டவர் என்று முன்னர் கூறினார், இங்கு அவர் காணப்படுகிறார் என்று கூறுகிறார். காணப்படுகிறார் என்றால் அநித்தியம். இந்த சந்தேகத்தை நீக்க

## எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி --- 22

> எண்ணுதற்கு எட்டா – சிந்திப்பதற்கு இயலாத, எழிலார் – அழகிய, கழல் – (அடி / பாதம்) ஸ்வரூபம், இறைஞ்சி – வணங்கி.

> மனதிற்கு விஷயமாகாத திவ்யமான ஸ்வரூபம் அதனை மனமுருகப் பாடி.

எண்ணுதற்கு எட்டா – சிந்திப்பதற்கு விஷயம் ஆகாத. வேதத்தில் கூறப்பட்டதுள்ளது **मनो वाचाम् अगोचरम्** 'மனோ

வாசாம் அகோசரம்' – மனதுக்கும் வாக்கிற்கும் விஷயம் ஆகாத. மனதிற்கு எட்டாத. நாம் எதனைக் குறித்துச் சிந்தித்தாலும், மனது அந்த நிமிடமே அங்கு செல்கிறது. ஆனால், ஆத்மா, பிரம்மம், சிவம் என்றால் மனது எந்த செயலும் செய்யாது இருக்கிறது.

விஷயம் சைதன்யம் கூடியது என்பதறிவோம் (ஞேயத்தே நின்ற). பானை என்ற விஷயம் பானை கூடிய சைதன்யம், துணி – துணி கூடிய சைதன்யம், முதலாக. இப்படி சிவனும் விஷயமானால் சிவன் கூடிய சைதன்யம் ஆவாரே, ஒழிய சிவன் சைதன்ய ஸ்வரூபன் ஆகமாட்டார்.

அப்படிப்பட்ட சிவனின், எழிலார் கழல் - திவ்யமான ஸ்வரூபத்தை. உலகில் உள்ள விஷயங்கள் அழகுடன் கூடியதாக இருந்தாலும் அந்த அழகுக்கு இருப்பிடம் ஈஸ்வரன், எழில் உடையவர் எழிலார். கழல் என்பது அடி, பாதம் என்பதின் ஒரு பெயர்.

இறைஞ்சி – மிகவும் சத்தமாக, அதாவது உருக்கமாக, நெகிழ்ச்சியுடன் பாடி. நாம் இறைவனை வேண்டுவதற்கு மூன்று வகை கூறப்பட்டுள்ளது -– உச்சை – சத்தமாக, மத்யம – மெதுவாக மற்றும் உபாம்ஷு - முணுமுணுப்பது போல. இதனைக் காட்டிலும் மேன்மையானது மனதில் செய்யும் தியானம். இப்படியிருக்க இறைஞ்சி என்பதின் பொருள், மேன்மையான நிலையைக் குறிப்பதாகவே இருக்கிறது. அவரவர் மனதின் நிலை அனுசரித்து இது வேறுபடும்.

'கண்காட்ட வந்தெய்தி' என்று கூறியபின் இங்கு 'எண்ணுதற்கு எட்டா' என்று விரோதமாக கூறுவது போல உள்ளது. இந்த சந்தேகத்தை நீக்க

**விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய்,**
**விளங்கொளியாய், --- 23**

விண் நிறைந்தும் – ஆகாயம் முழுவதும், மண் நிறைந்தும் – பூமி முழுவதும், மிக்காய் - பெரியதாய், விளங்கொளியாய் – விளங்கும் பிரகாஶமாய்.

அங்கும் முழுமையாக இங்கும் முழுமையாக வரையறுக்கப்படாது விளங்குகின்ற பிரகாஶமாய்.

தாயுமான சுவாமிகள் கூறுகிறார் 'அங்கிங்கெனாதபடி ஆனந்த பூர்த்தியாய் அருளோடு நிறைந்தது எது' என்று. இங்கோ, அங்கும் நிறைந்து இருக்கிறார் இங்கும் நிறைந்து இருக்கிறார் என்கிறார். வேதத்தில் **पूर्णम् अदः पूर्णम् इदम्** 'பூர்ணம் அத பூர்ணம் இதம்' – அங்கும் முழுமை இங்கும் முழுமை, என்று இதுவே கூறப்பட்டுள்ளது.

மிக்காய் – பெரியாதாய். பிரம்மம் என்றால் **बृहत्वात् बृह्नत्वात्** 'பிருஹத்வாத் பிர்ஹ்னத்வாத்' – பெரியதாக இருப்பது, இது **बृह वृद्धौ** 'பிருஹ விருத்தெள' – வளர்ச்சியில், என்ற வேர்ச்சொல்லிருந்து உண்டான சொல். இதுவே விஷ்ணு என்பதின் பொருளும், **विष्लृ व्याप्तौ** 'விஷ்ல்ரு வ்யாப்தெள' – வியாபித்து இருப்பது. வேதமும் **यो वै भूमा तद् वै सुखम्** 'யோ வை பூமா தத் வை சுகம்' – எது பெரியதோ, வரையறுக்கபடாததோ அதுவே ஆனந்தம். அதனால், மிக்காய் என்றால் வரையறுக்கபடாத.

விளங்கொளியாய் – விளங்குகின்ற பிரகாஶமாய். விஷயமாகாத நாம் அறிய இயலுகின்ற பிரகாஶமாய். இதுவே ஸ்வயம்ப்ரகாஶம் என்று கூறப்பட்டது. எல்லாவற்றிலும் இருத்தலாக பிரகாஶிக்கின்ற.

இதுமட்டுமல்ல அவருடைய பெருமைகள், என்று தொடர்கிறார்.

**எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர் ---24**

எண்ணிறந்து – சிந்தனை (மனது) இறந்த, எல்லை இலாதானே - வரையற்றவனே, நின் பெரும்சீர் – உன்னுடைய மேன்மையான நிலை.

மனதால் கிரகிக்க இயலாது வரையற்று இருப்பவனே, உன்னுடைய மேன்மையான நிலை.

எண் இறந்த – எண்ணம் இறந்த. எண்ணங்கள் மனது வ்ருத்தி ரூபமான மாற்றம் என்று அறிவோம். அந்த மனது அழிந்தால் அதன் மாற்றமான வ்ருத்திகள் உண்டாகாது. மனது வரையறை உள்ள விஷயங்களை மட்டுமே கிரகிக்க முடியும். எல்லையற்ற சிவத்தை கிரகிக்க இயலாது. இந்த கிரகிக்க இயலாத நிலையே எண் இறந்த நிலை. வரையற்ற காரணத்தால் அதனை கிரகிக்க இயலாதது ‘எல்லை இலாதானே’ என்று குறிப்பிடுகிறார்.

பானை முதலிய எல்லை உடைய விஷயங்களிலும் நாம் அதன் ஒரு பகுதியை மட்டுமே காண்கிறோம். முன்னுள்ள பகுதி மட்டுமே காணப்படுகிறது. பின்னுள்ள பகுதியை குறித்து அனுமானம் மட்டுமே செய்கிறோம். வரையறை உள்ள விஷங்களையே நாம் முழுமையாக அறிய முடியாதபோது. வரையற்ற ஆத்மா எவ்வாறு அறியப்பட இயலும்.

மனது மூன்று நிலைகளில் இருக்கும் - பாமரர்களான அஞ்ஞானிக்கு செயலோடு, தூக்கம் மற்றும் சமாதியில் செயலற்று லயத்தில் மற்றும் ஞானிகளுக்கு அழிந்த நிலையில் இருக்கும். லயம் அடைந்தது மீண்டும் உயிர்ப்பித்து வரும், அழிந்த மனது இவ்வாறு ஆகாது என்பது இவைகளின் வேற்றுமை.

இப்படிப்பட்ட உன்னுடைய இந்த மேன்மையான நிலை. சீர் – பக்குவம். உன்னுடைய பக்குவப்பட்ட உயர்ந்த நிலை.

இந்த நிலையை விளக்க இயலுமா? என்றால்; பிரம்மத்தை அறியும்போது வ்ருத்தி உண்டாகுமா ஆகாதா? உண்டானால் பிரம்மம் விஷயம் ஆகிறது, அதனால்

வரையறுக்கப்பட்டதாகும். உண்டாகாதென்றால் பிரம்மத்தை உணர முடியாது. பிரம்மம் மற்ற பானை முதலியவை போல அறியப்படுவதில்லை. பானையை அறிய பானை என்ற உருவ வ்ருத்தியும் பானை என்ற ஞான வ்ருத்தியும் அவசியம். பிரம்மதிற்கு உருவம் முதலிய குணங்கள் இல்லாதால், ஞான வ்ருத்தி மட்டுமே உண்டாகும்.

## பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன் — 25

பொல்லா – புண்ணிய பாவங்கள், வினையேன் – ஆகிய கர்மங்கள் உடையவன், புகழுமாறு – போற்றுமாறு, ஒன்றறியேன் – ஒன்றும் தெரியாதவனாக இருக்கிறேன்.

புண்ணிய பாவங்களான கர்மங்கள் உடையவன், உன்னுடைய பெருமையைப் புகழ அறியாதவன்.

மீண்டும் குழப்பமான நிலை. 'முன்னை வினை முழுதும் ஓய' என்று பின்னர் 'எண்ணுதற்கு எட்டா' எனக்கூறி, 'விண்ணிறைந்து மண்ணிறைந்து' என்றும் இப்பொழுது 'பொல்லா வினையேன்' என்றும் கூறுகிறார்.

முன்னர், உடல் முதலியன பிராரப்த கர்மம் அனுசரித்து உண்டாகும் என்று கண்டோம். இந்த பிராரப்த கர்மம், புகழ்வதைத் தடை செய்கிறதா என்றால், இல்லை, நாம் புகழுவது விஷயமாக இருந்தால் அதை விளக்க இயலும். இங்கு பிரம்மம் வியாபித்து இருப்பதால், எதைக் கூறுவது என்று அறியாததால் இந்தக் குழப்பம். வேதமே இதை விளக்க அறியாது தவிக்கிறது என்று 'வேதங்கள் ஐயா எனவோங்கி' என்று கூறுகிறார். எதைக் கூறினாலும், அந்த பிரம்மத்தைத் தவிர வேறாகாது என்பதாலும் இந்தக் குழப்பம்.

முன்னர் கூறியபடி, இது தான் ஞானமடைய எழுதப்பட்டது இல்லை, தனக்கு அபரோக்ஷ ஆனந்த அனுபவம் உண்டாகிவிட்டதால். இது தெளிவாக பின்னால் அறுதியிட்டு

கூறுகிறார் ‘உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு பேருற்றேன்’. ஞானம் அடைந்த நிலையில் தன்னுடைய பழைய நிலையினை நினைத்து கூறுவதாக எடுக்கவேண்டும்.

பக்தி நிலை இன்னும் முற்றவில்லை என்பதால் இப்படிக் கூறுவர் சிலர், பக்தியில் எப்போதும் இந்த ஏற்ற தாழ்வு இருந்துகொண்டே இருக்கும். ஞானத்தில் இப்படி ஏற்றத்தாழ்வு இல்லை. அதனால் பஞ்சதஷியில் **सम्विद् एक रूपा न भिद्यते** ‘சம்வித் ஏக ரூபா ந பித்யதே’ அறிவு ஒரே வகைப்பட்டது வேறுபடுவதில்லை, என்று கூறுகிறார். இப்படி இருப்பதால், விவேகசூடாமணியில் **आत्मानुसन्धानम् एव भक्तिः** ‘ஆத்மானுசந்தானம் ஏவ பக்தி’ – ஆத்மாவை சிந்தனை செய்வதே பக்தி, என்று கூறுகிறார்.

அல்லது, ‘பொல்லா வினை ஏன்’ – பொல்லாப்பு எதற்கு என்று பொருள் கொள்ளலாம். புகழ ஒன்றும் இயலாத நிலையில், எதற்கு இந்த வீண் முயற்ச்சி என்றும் பொருள் ஆகும்.

இங்கு பகவான் ரமணர் கூறியது நினைவுகொள்ளுதல் நல்லது – ‘அவர்கள் பாடிப் பெறவில்லை, பெற்றதைத் தான் பாடினார்கள்’.

தன்னுடைய ஞானத்திற்கு முன்னர் தான் பட்ட, நாம் எல்லோரும் படும், துன்பமயமான பலவகை பிறப்புகளைப் பட்டியலிடுகிறார்.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்,**
**எம்பெருமான். 26 – 31**

புல்லாகிப், பூடாய்ப், புழுவாய், மரமாகிப், பல் விருகமாகிப், பறவையாய்ப், பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப், பேயாய்க், கணங்களாய், வல் அசுரர் ஆகி, முனிவராய்த், தேவராய்ச், செல்லாஅ நின்ற, இத் தாவர சங்கமத்துள் – இந்த அசையாத மற்றும் அசையும் உயிரினங்களில், எல்லாப் பிறப்பும் – கூறப்பட்ட மற்றும் கூறப்படாத எல்லா பிறப்பும், பிறந்து இளைத்தேன் – பிறந்து நொந்தேன், எம்பெருமான் - என் தலைவனே.

பலவகையான, முறையில்லாமல் உண்டாகும் பிறவிகளைப் பிறந்து அலுத்துவிட்டேன் இறைவா.

புல்லாகி, பூடாகி - புல் பூண்டு முளைத்திருக்கும் என்று வழக்கத்தில் கூறுவது இங்கு நினைவு கொள்ளல் வேண்டும்.

அடுத்து மரமாகி என்று கூறாமல், புழுவாகி மரமாகி என்று கூறியதின் தாத்பர்யம், இந்த சம்சாரத்தில் ஜைனர்கள் ஏற்பது போல, ஏற்றமாக (உயர்வானதாக) மட்டுமே பிறப்பு உண்டாகும் என்பது சாஸ்திர சித்தாந்தம் இல்லை என்பதைக் கூற.

பல் விருகமாகி – பலவகை மிருகமாகி. விருகம் என்பது மிருகம் என்பதின் பிரயோகம். வ மற்றும் ம வேறுபாடில்லாமல் பிரயோகம் செய்யப்படுகிறது. கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பது கண்டவர் மிண்டிலர் மிண்டவர் கண்டிலர் என்பதின் மாற்றம். மலையாளத்தில் இந்த பிரயோகம் இன்றளவும் உள்ளது காணப்படுகிறது, மிண்டல் என்பது பேசுதல் என்ற பொருளில் உபயோகப்படுத்தப் படுகிறது.

பறவையாய்ப் பாம்பாகி – பறப்பனவாகவும், ஊர்வனவாகவும். அடுத்து, கல்லாகி என்கிறார். நாம் கல்லில் ஒரு ஜீவன் இருக்கும் என்று அறிந்திருக்க மாட்டோம். ஆனால், சாஸ்திரம் இதற்கு பல உதாரணம் தருகிறது, ராமர் பாதத்தில் பட்டு கல்லிலிருந்து அகல்யா வெளிப்பட்டார் என்பது முதலாக. அகல்யா சாபத்தினால் கல்லானார். ஆனால் நாம் துஷ்டி என்ற லயத்தை அடைந்து அதில் திருப்தி அடைந்ததால், யோகத்தில் அதற்கு

மேல் போக ஊக்கம் இல்லாதவர்களாக இப்படி கல் பிறப்பு அடைகிறோம். இந்த நிலையில் நல்ல அனுபவங்கள் அல்லது தீய அனுபவங்கள் உண்டாவதில்லை.

மனிதராய் – மனிதராகவும். இதில் ஆண், பெண், அது இரண்டும் இல்லாத அரவானிகளாகவும்.

இந்தப் பிறப்பில் செய்த கெட்ட கர்மங்களால் பேயாக, நல்ல கர்மங்களால் கணங்களாக. தற்கொலை போன்ற அகால மரணத்தை அடைந்தவர் அடையும் பிறப்பு பேய் ஜன்மம். சிவனின் சேவகரர்களான கிங்கரர்கள் இந்த கணங்கள் என்ற கூட்டத்தில் வருபவர். இது சூக்ஷ்ம உடல் தாங்கி இருக்கும் பிறப்பு.

அது போல கெட்ட கர்மங்களால் வல் அசுரர் - மிகவும் மோசமான அசுரர் மற்றும் நல்ல கர்மங்களால் முனிவராய், தேவராய். இது ஸ்தூல உடல் தாங்கி இருக்கும் பிறப்பு.

நான் அடுத்த பிறவியில் சாஸ்திரத்தை படித்துக்கொள்கிறேன் என்பது எல்லாம் கற்பனையே. நமக்கு என்ன பிறவி உண்டாகும் என்பது நிச்சயம் இல்லை. நாம் நல்ல கர்மங்களை மட்டுமே இந்த பிறவியில் செய்திருந்தாலும், எப்படிப்பட்ட மனித பிறவி கிடைக்கும் என்பதும், எந்த இடத்தில் உண்டாகும் என்பதும் நிச்சயமில்லை.

ஆனால், பகவத் கீதையில் பகவான் கூறியிருப்பது **शुचीनाम् श्रीमताम् गेहे योगभ्रष्टो अभिजायते** 'சுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே யோகபிரஷ்டோ அபிஜாயதே' – நல்ல ஒழுக்கம் உடைய, நல்ல வசதி படைத்த வீட்டில் யோகத்திலிருந்து தவறியவன் பிறப்பான். இருந்தாலும், மீண்டும் நாம் ஆத்மாவினை குறித்த விகாரத்தை துவங்க எத்தனை சமயம் எடுக்கும் என்றோ, அங்குள்ள விஷய சுகங்களில் நாம் ஈடுபடமாட்டோம் என்றோ முடிவாக கூற இயலாது. இந்த விஷயம் ஜடபரதர் வாழ்கையில் நாம் காணலாம். பெரிய மகாத்மாவான ஜடபரதர் மான் பிறவியும் எடுத்தார் என்று அறிவோம்.

இதில் மனிதப்பிறவி மட்டுமே புண்ணிய பாவங்கள் செய்ய உறுதுணையாக இருக்கும். மற்ற பிறவிகள் எல்லாமும் போகத்திற்கு மட்டுமே உபயோகமாகும். இதனைக் கருத்தில் கொண்டே ஔவையார் 'அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது' என்றும், பகவான் பாஷ்யகாரரும் **मनुष्यत्वम् मुमुक्षुत्वम् महापुरुष सम्श्रय** 'மனுஷ்யத்வம் முமூக்ஷுத்வம் மஹாபுருஷ சம்ஷ்ரய' - மனித பிறப்பு, மோக்ஷமடையும் ஆசை மற்றும் பெரியோர்களின் சேர்கை ஆகிய மூன்றும் இந்த உலகத்தில் தெய்வத்தின் கருணை இல்லாது உண்டாகாது, என்கிறார்.

இப்படிப்பட்ட மனிதப்பிறவி இதற்கு முன்பு அடைந்திருந்தாலும், 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' உன்னை அறிய இயலாதவாறு பொல்லா வினைகள் என்னைத் தடுத்து விட்டன என்பது அதற்குப் பின்னரும் நான் பிறப்பு அடைந்ததால் தெரியவருகிறது, என்று தன்னுடைய ஆற்றாமையைக் கூறுகிறார்.

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான் – இப்படிப்பட்ட பலவகையான பிறவிகளை மீண்டும் மீண்டும் அடைந்து நான் அலுத்துவிட்டேன். இப்படிப்பட்ட அலுப்பு, வேதனை நமது வைராக்கியத்தைக் காட்டுகிறது. பிறவிகளில் எந்த வகையான ருசியும் இல்லாத நிலை. இதனையே 'இந்த உலகத்திலும் வேறு உலகங்களிலும் உள்ள பலன்களில் பற்றின்மை' என்று வைராக்கிய லக்ஷனமாக கூறினோம். இப்படிப்பட்ட வைரக்யம் உடையவரே மோக்ஷத்திற்குத் தகுதியானவர்.

யோக சூத்திர பாஷ்யத்தில் 10000 முற்பிறவிகளின் அறிவை அடைந்த யோகியிடம் வேறொரு சாதகர் கேட்கிறார் 'அந்த 10000 பிறவிகளில் அனுபவித்ததில் மிகவும் ஆனந்தமான அனுபவம் எது என்று', அதற்கு யோகி கூறுகிறார் 'அனுபவித்தது எல்லாம், துன்பமாகவே நான் அறிகிறேன்'. இதனையே **अक्षपात्रकल्पवद् योगिनः** 'அக்ஷபாத்ரகல்பவத் யோகின' – யோகிகள் கண்ணின் விழி போன்றவர்கள். உடலை வருத்தாத

மென்மையான பஞ்சும் கண்ணின் விழியில் பட்டால் எரிச்சல் உண்டுசெய்யும் என்ற பொருளில் கூறியுள்ளார். உலகில் துன்பக் கலப்பு இல்லாத இன்பமே இல்லை.

ஈஸ்வர ஸ்வரூபானந்ததை தவிர வேறு ஒன்றும் ஆனந்தம் இல்லை, அதனால்.

## மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன் --- 32

மெய்யே – பரமார்த்த சத்தியமே, உன் பொன் அடிகள் – உன்னுடைய ஸ்வரூபத்தை, கண்டு – சாக்ஷாத்கரித்து, இன்று வீடு உற்றேன் – இன்று ஞானத்தை (மோக்ஷத்தை) அடைந்தேன்.

பரமார்த்த சத்தியமே உன்னை சாக்ஷாத்கரித்து இப்பொழுது நான் மோக்ஷத்தை அடைந்தேன்.

மெய்யே என்று ஈஸ்வரனை விளிக்கிறார். மெய் என்பது உடல் என்ற பொருளில் இருந்தாலும் இங்கு சத்தியம் என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த சத்தியம் பிரம்மமே **सत्यम् ज्ञानम् अनन्तम् ब्रह्म** ‘சத்யம் ஞானம் அனந்தம் பிரம்மம்’ என்று கூறப்பட்டது.

இந்த சத்தியம் மூவகை –

1. பரமார்த்த சத்தியம் – மெய்பொருள், பிரம்மம் மட்டுமே.
2. வ்யவஹாரிக சத்தியம் – உலகத்தின் இருப்பு, தோற்ற மாத்திரம்
3. ப்ராதிபாசிக சத்தியம் – பொய்த்தோற்றம் , கானல் நீர், சிப்பியில் வெள்ளி.

உன் பொன் அடிகள் கண்டு - உன்னுடைய ஸ்வரூபத்தை சாக்ஷாத்கரித்து. இன்று வீடு உற்றேன் – இப்பொழுது

மோக்ஷத்தை அடைந்தேன். வேதாந்தம் **ब्रह्मविद् ब्रह्मैव भवति** ‘பிரம்மவித் பிரம்ம எவ பவதி’ – பிரம்மத்தை உணர்ந்தவர் பிரம்மமே ஆகிறார், **ब्रह्मविद् आप्नोति परम्** ‘பிரம்மவித் ஆப்நோதி பரம்’ – பிரம்மத்தை உணர்ந்தவர் பரத்தை அடைகிறார், என்கிறது. இங்கு உணர்வதற்கும் அடைவதற்கும் இடைவெளி இல்லை, அதையே ‘இன்று’ என்று கூறுகிறார்.

முன்னர் நம்முடைய பாவங்களைப் போக்க ‘சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்’ என்று சூளுரைத்துக் கூறினார்.

இப்போது மீண்டும், இதைப் படிப்பதால் நிச்சயம் நாம் மோக்ஷத்தை அடைவோம் என்று சூளுரைக்கிறார்.

## உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற --- 33

> உய்ய – மேன்மை அடைய, என் உள்ளத்துள் – என் மனதில், ஓங்காரமாய் – ஓம்காரமாய், நின்ற – இருக்கும்.
>
> மேன்மையை அடைய மனதில் ஓம்கார ஸ்வரூபமாய் இருக்கும்.

உய்ய – மேன்மையான நிலை அடைய. நிரதிஷய ஆனந்தம் என்று கூறப்பட்ட ஆராத இன்பம். இதற்கு மேலாகவோ சமமாகவோ வேறு இன்பம் இல்லை, அதிகமாக கூறுவானேன், இதனை விடுத்து வேறொன்றும் இல்லை. என் உள்ளத்துள் – என்னுடைய மனதில். ஓங்காரமாய் - ஓம்காரமாய், என்றால் ஓம், ஓம் என்று மீண்டும் மீண்டும் ஒலிப்பதாக அல்ல. அதன் தத்துவமாக. ஓம் என்பது அ, உ மற்றும் ம் என்பதின் கூட்டு.

மேன்மையான நிலை அடைய முதலில், இதனை தியானம் செய்யவேண்டும். ஆனால், எல்லோருக்கும் தகுதி இல்லை, சன்யாசிக்கு மட்டுமே ஓம்காரத்தை தனியாக உச்சாரணம் செய்யவும் அதன் பொருளைச் சிந்திக்கவும் தகுதி

தரப்பட்டுள்ளது. மற்றவர், வேதாந்த முறைப்படி அதன் பொருளைச் சிந்திக்கலாம், அதனை வேறு இறைபெயரோடு சேர்த்து உச்சரிக்கலாம்.

இதனில் என்ன தத்துவம் பொதிந்துள்ளது என்றால்

| எழுத்து | நிலை | உடல் | தனிப் பெயர் | சமூகப் பெயர் | கோஷம் |
|---|---|---|---|---|---|
| அ | விழிப்பு | ஸ்தூலம் | விஸ்வன் | வைஷ்வானரன் | அன்னமயம் |
| உ | கனவு | சூட்சுமம் | தைஜசன் | ஹிரண்ய கர்பன் | பிராணமயம்<br>மனோமயம்<br>விஞ்ஞானமயம் |
| ம் | தூக்கம் | காரணம் | ப்ராஞன் | ஈஸ்வரன் | ஆனந்தமயம் |
| அமாத்திரை | துரீயம் | - | - | - | - |

இந்த ஓம் என்பது ஈஸ்வரனின் பெயர் என்று யோக சூத்திரம் **तस्य वाचक प्रणवः** 'தஸ்ய வாசக பிரணவ' என்று. உபநிஷதும் ॐ **इति ब्रह्म** 'ஓம் இதி பிரம்ம' – ஓம் பிரம்மம், ॐ **इति इदम् सर्वम्** 'ஓம் இதி இதம் சர்வம்' – இது எல்லாம் ஓம் , ॐ **इति एकाक्षरम् ब्रह्म** 'ஓம் இதி ஏகாக்ஷரம் பிரம்மா' – ஓம் என்ற இந்த ஒரேழுத்து / அழிவற்றது பிரம்மம்.

## மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள் --- 34

மெய்யா – பரமார்த்த சத்தியமே, விமலா – தூய்மையான, விடைப்பாகா – விடையாக இருப்பவனே, வேதங்கள் – வேதங்கள்.

பரமார்த்த சத்தியமே, அவித்தை முதலிய மலங்கள் அற்றவனே, எல்லாவற்றுக்கும் விடையாக இருப்பவனே. வேதங்கள்.

மெய்யா – மெய்யே என்பதின் பொருளே இங்கும் ஏற்கவேண்டும். விமலா – நிமலன் என்பதின் பொருள் இங்கும் பொருந்தும்.

விடைப்பாகா – ரிஷப வாகனன் என்றும் விடைகளைப் பகிர்பவன் என்றும் ஆகும். நான் யார்? இந்த உலகம் என்ன? ஆகிய கேள்விகளுக்கு பதிலாக இருப்பவன். வேதமும் **कस्मिन्नु भगवो विज्ञाते सर्वम् इदम् विज्ञातम् भवति** 'கஸ்மின் நு விஞ்ஞாதே சர்வம் இதம் விஞ்ஞாதம் பவதி' – எது ஒன்றை தெரிந்துகொண்டால் எல்லாமும் தெரிந்து கொண்டதாக ஆகின்றதோ, என்று கூறியுள்ளது. இங்குள்ள எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதிலாக இந்த ஆத்மஸ்வரூபம் இருப்பதால் வேதங்கள் இப்படி கூறுகின்றன. அதனால் ஈஸ்வரனை விடைப்பாகா என்று விளிப்பது முறையே.

வேதங்கள் இதனை நமக்கு தெளிவாக விளக்குமா என்றால், அதற்குப் பதிலாக

## ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே — 35

ஐயா என - அய்யா என்று, ஓங்கி – மேன்மையான, ஆழ்ந்து - தாழ்மையான, அகன்ற - பெரியதான, நுண்ணியனே – சிறியதான

ஐயா என்றும், மேன்மையானதாகவும், தாழ்மையாகவும், பெரியதாகவும், சிறிதாகவும்

வேதமும் இந்த பரமார்த்த சத்தியத்தை, இது இப்படிப்பட்டது என்று கூறுவது இல்லை. அப்படிக் கூற இயலாது என்பதால். இதற்கு மாறாக 'ஐயா எனவோங்கி' என்று பிரித்தெடுத்து அதற்கு பொருளாக வேதமும் உன்னைப்பற்றிக் கூற இயலாது ஐயா என்று ஓங்கி அலறுகிறது என்று ஏற்றல் தவறு. ஈஸ்வரனே வேதத்தைத் தோற்றுவித்து தன்னைப் பற்றி அதில் கூற இயலாதவர் ஆகிறான் என்பது ஈஸ்வரனுக்கு இழுக்கு. இதனை, வேதங்கள் உன்னை 'பகவன்', 'ஐயா என' மரியாதையுடன் அழைக்கிறது என்று ஏற்பது சிறப்பு. வேதத்தில் **स आत्मा तत्त्वमसि** 'ஸ ஆத்மா தத்வமசி', **अहम् ब्रह्मास्मि** 'அஹம் பிரம்மாஸ்மி' முதலியதாக இந்த ஆத்மாவைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, இதனை விஷயமாகக் கூறுதல் இயலாது என்பதால், **अणोरणीयान् महतो महीयान्** 'அநோரநீயான் மஹதோமஹீயான்' – சிறியதற்கும் சிறியது, பெரியதற்கும் பெரியது **ब्रह्मैव इदम् अमृतम् पुरस्तात् ब्रह्म पश्चात्** 'பிரம்மைவ இதம் அம்ருதம் புரஸ்தாத் பிரம்ம பஸ்சாத்' – அழிவற்ற பிரம்மமே முன்னால், பின்னால், வலதுபுறம், இடதுபுறம், முதலிய வாக்கியங்களால் கூறுகிறது. **आकाशवत् सर्वगतश्च नित्यः** 'ஆகாஷவத் சர்வகதஸ்ச நித்ய' – ஆகாயத்தை போல எல்லா இடத்தில் வியாபித்து இருப்பதும், மிகவும் சூக்ஷ்மமாக இருப்பதும் என்றும் கூறுகிறது.

இப்படி எனது அனுபவத்திற்கு வராத பிரம்மத்தை எவ்வாறு ஏற்பது என்றால், அதற்கு பதில் கூறும் வகையில்

**வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா --- 36**

வெய்யாய் – வெய்யிலாய் (சூடாய்), தணியாய் – நிழலாய் (குளிர்ச்சியாய்), இயமான னாம் – இயக்குபவராய், விமலா – தூய்மையானவராய்

சூடாய், குளிர்மையாய், கட்டுபடுத்துபவராய், சம்பந்தமற்றவராய்.

பகவத்கீதையில் பகவான் கூறுவது போல, **शीतोष्ण सुखदुःखेषु** 'சீதோஷ்ண சுகதுக்கேஷு' – குளிர் - சூடு, சுகம் – துக்கம் ஆகியவை சமமாக பாவிக்கவேண்டும்.

சாமானியமாக சூடு என்று கூறுகின்றோம், நம்முடைய அனுபவத்திற்கும் வருகிறது, ஆனால் அது என்ன என்று கேட்டல் வரும் பதில் – தொட்டால் கொதிக்கும் என்பது அதன் செயல், 45 டிகிரீ என்பார் ஆனால் அது அளவை, காபியைக் காட்டிலும் அதிகம் சூளை வெப்பத்தைக் காட்டிலும் குறைவு என்பது போல குறிப்பாக சொல்லாமல் கூறுகிறோம். இது போலவே குளிர்மையும், சுகமும், துன்பமும் நாம் அனுபவித்தல் இயலும் ஆனால் விளக்க இயலாது.

வெயிலாய் தகித்தும், குளிராய் விறைக்க வைத்தும் நம்மைக் கொடுமை செய்பவரை எவ்வாறு ஈஸ்வரன் என்பது? ஆனால், வெயிலில் நிழலாயும் குளிரில் வெயிலாயும் நம்மை காப்பவரும் அந்த ஈஸ்வரன் என்பது மறுக்க இயலுமா? நன்மையை மட்டும் ஈஸ்வரன் தரட்டும் என்றால், அது காமிய பக்தி, பரீட்சையில் தேர தேங்காய் உடைக்க வேண்டுவது போல. பகவான் எது செய்தாலும் சரியே என்ற பரமபக்தி வேண்டும். வெயில் முதலியதாக அனுபவங்களாகவும் அதனை உள்ளிருந்து அனுபவிப்பவனாகவும் இருப்பது அந்த ஈஸ்வரனே. ஈஸ்வரனின் சிருஷ்டியில் எந்தத் தவறும் இருத்தல் இயலாது என்பது திண்ணம்.

இயமானனாம் – எல்லாவற்றையும் இயக்குபவராய். அந்த சூட்டையும் குளிரையும் உண்டாக்குபவராய். துரியோதனன்

என்ற அறிவாளி கூறுவது **जानामि धर्मम् न च मे प्रवृत्तिः जानामि अधर्मम् न च मे निवृत्तिः केनापि देवेन हृदिस्थितेन यथा नियोजयति तथा करोमि** 'ஜானாமி தர்மம் ந ச மே பிரவ்ருத்தி ஜானாமி அதர்மம் ந ச மே நிவ்ருத்தி கேநாபி தேவேன ஹ்ருதி ஸ்திதேன யதா நியோஜயதி ததா கரோமி' – தர்மம் என்ன என்று தெரியும் ஆனால் ஈடுபட முடியவில்லை, அதர்மம் என்ன என்று தெரியும் ஆனால் விடமுடியவில்லை, ஏதோ ஒரு தெய்வம் இதயத்தில் இருந்து எவ்வாறு ஆட்டுவிக்கிறானோ அவ்வாறே செய்கிறேன், என்கிறான்.

எனக்குள் இருந்து என்னை ஆட்டுவிப்பவர் ஈஸ்வரன் என்றால், அவர் என்னை காட்டிலும் வரையறுக்கபட்டவர் என்று ஆகும். அதனால் அநித்தியம் ஆவார். இதனை நீக்க, விமலா – தூய்மையானவன். அவன் சம்பந்தப்பட்டவன் போல இருந்தாலும், எதனோடும் சம்பந்தபடாதவன். நமக்கும் நமது கர்மத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லாதவர் ஈஸ்வரன்.

உள்ளிருப்பவர் ஆனால் சம்பந்தப்படாதவர் மற்றும் வரையறுக்கபடாதவர் என்றால், அது எவ்வாறு ?

காந்தத்தைப் போல, அல்லது வகுப்பு ஆசிரியர் போல. காந்தம் எந்த செயலும் செய்யாதிருந்தாலும், அதன்பால் ஈர்க்கப்படுகின்றன இரும்பு துரும்புகள். வகுப்பு ஆசிரியர் எதுவும் செய்யாதிருந்தாலும், அவர் இருக்கும்வரை வகுப்பில் உள்ளவர்கள் பேசாமல் இருக்கின்றனர், அது போல, இந்த பிரம்மம் ஒரு செயலும் செய்யாதிருந்தாலும் அதன் மேல் உள்ள பயத்தால் எல்லாம் தன் தன் வேலையைச் செய்கின்றன. தைத்திரீய உபநிஷத் இதை **भीषास्मात् वातः पवते भीषोदेति सूर्यः** 'பீஷாஸ்மாத் வாத பவதே பீஷோதேதி சூர்ய' – காற்று இதன்மேல் உள்ள பயத்தால் வீசுகின்றது, சூரியன் இதன் மேல் உள்ள பயத்தால் உதயமாகிறது.

கட்டுப்படுத்தப்பட்டதுடன் எந்த சம்பந்தமும் இல்லாதவர். அதனால் விமலா என்றால் அது எவ்வாறு. தாமரை இலை

தண்ணீர் போல, சம்பந்தம் இல்லாமல் இருக்கலாம் ஆனால் அது கட்டுபடுத்துவது இல்லை. இதனை விளக்க

## பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி --- 37

பொய் ஆயின – பொய்த் தோற்றமான, எல்லாம் – பார்பது எல்லாம், போய் அகல – நிரந்தரமாக நீக்க, வந்தருளி – சாக்ஷாத்காரத்தைத் தந்து.

பொய் தோற்றங்களான, பார்க்கப்படுவது எல்லாம் நிரந்தரமாக நீங்க தன்னுடைய சாக்ஷாத்காரத்தை தந்து.

பொய் ஆயின – இந்த உலகத்தில் இருப்பது எல்லாம் பொய்யே என்பது அத்வைத வேதாந்தத்தில் கடை நிலை சித்தாந்தம். எல்லாம் – இங்கு நாம் அனுபவிக்கும் குளிர், சூடு மட்டுமல்லாமல், இந்த உலகம், இறைவன், ஜீவன் எல்லாம் முயல் கொம்பு, மலடி மகன் போன்று உண்மை அல்லாதது. ஈஸ்ஸ்வரனைத் தவிர எல்லாமே பொய்த்தோற்றம் மட்டுமே என்பதை வேதம் **अन्यत् सर्वम् आर्तम्** ‘அன்யத் சர்வம் ஆர்த்தம்’ என்கிறது.

போய் அகல – நிரந்தரமாக நீங்க. இரண்டு சொற்கள் உபயோகம் செய்தது மிகவும் நேர்த்தியானது. போய் மற்றும் அகல என்பது ஒரே பொருள்படும் சொற்கள் போல இருந்தாலும் இது அவ்வாறு உபயோகப்படுத்தவில்லை. **ऐकान्तिक आत्यन्तिक** ‘ஐகாந்திக ஆத்யந்திக’ என்று சாங்கியம் முதலிய இடத்தில் கூறப்பட்டதே இங்கு கூறப்பட்டுள்ளது. அகன்ற விஷயம் மீண்டும் நம்மை வந்து, தலைவலி முதலியவை போல, பீடித்துகொள்ள இயலும் என்பதால் போய் என்று அது நிரந்தரமாக நீங்குகிறது என்பதைக் கூறுகிறார். அதுமட்டுமல்லாது பொய்யானது அழிக்கப்பட இயலாது, அதை நீக்கவே இயலும்.

அந்த பொய் எவ்வாறு நீங்கும்? அது நீங்க அங்கு உண்மை விளங்கவேண்டும். இதனை கூறுகிறார்.

## மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே --- 38

மெய் ஞானம் ஆகி - பரமார்த்த ஞானமாக, மிளிர் கின்ற – பிரகாஶிக்கின்ற, மெய்ச் சுடரே – ஸ்வயம் பிரகாஶனே.

பரமார்த்த ஞானமாக பிரகாஶிக்கின்ற ஸ்வயம் பிரகாஶனே, தானே ஒளிர்கின்றவனே.

அருள் ஈஸ்வரனிடத்திலிருந்து இந்த ஜீவனிடத்தில் பாய்ந்து அவன் அறியாமையை நீக்கும் என்று கற்பனையில் இருக்கவேண்டாம். தவறான அறிவு சரியான அறிவைத்தவிர வேறு எந்த முறையிலும் நீங்காது. இங்கு அந்த சரியான அறிவிற்கு **प्रमाण जनित ज्ञानम्** ‘பிரமாண ஜனித ஞானம்’ – வேதாந்தம் எனும் வேறொன்றாலும் நிராகரிக்க இயலாத ஞானத்தினால் மட்டுமே அறியாமை நீங்கும். பொய் அறிவு உலகத்தைப் பற்றி இருக்கிறது, பற்றியிருக்கிறது. குருவின் அருளான வேதாந்த உபதேசமே இங்கு குறிக்கப்படுகிறது.

வேதாந்தமும் நேரடியாக இந்த விஷயத்தைப் போதிப்பது இல்லை. **अध्यारोपापवादाभ्याम् निष्प्रपञ्चम् प्रपञ्चते** ‘அத்தியாரோப-அபவாதாபியாம் நிஷ்ப்ரபஞ்சம் பிரபன்சதே’ – ஏற்றிப்பார்தல் நிராகரித்தல் மூலமாக ஸ்ருஷ்டி இல்லாத நிலையை உரைக்கிறது. எல்லாம் பொய்த்தோற்றம் என்பதை துவக்கத்திலேயே கூறினால் அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் இல்லாதவர், இந்த உலகை விடாமல், மாறாக வேதாந்தத்தை விட நேரிடும். அதனால் பார்க்கப்படும் எல்லாம் ஈஸ்வர ஸ்வரூபமே என்று கூறுகிறார். ஈஷாவாஸ்ய உபநிஷத்தும் **ईशावास्यम् इदम् सर्वम्** ‘ஈஷாவாஸ்யம் இதம் சர்வம்’ – இது எல்லாம் ஈஸ்வரனால் போர்த்தப்பட்டது, என்கிறது. நேரடியாக போதிக்காததற்குக் காரணம் இது மிகவும்

சூக்குமமான விஷயமாக இருப்பதால். கைவல்ய நவநீதமும் இதை ‘தாளத்தில் மரங்கள் காட்டி தனிப்பிறை காட்டுவார் போல்’ என்பது முதலாக ஸ்தூலமான விஷயத்தை காட்டி சூக்குமமான விஷயத்தை போதிக்கும் ஸ்தூல-அருந்ததி நியாயத்தை போதிக்கிறது.

மெய் ஞானம் – உண்மையான அறிவு, உண்மையை குறித்த அறிவு. மிளிர்கின்ற – பிராகாசிக்கின்ற. மெய்ச் சுடரே – அறிவுச் சுடரே. மெய்யும் ஞானமும் வெவ்வேறு கிடையா. வாக்கியத்தின் துவக்கத்தில் மெய்ஞானமாகிய என்றும் கடைசியில் மெய்ச்சுடரே என்றும் கூறப்பட்டது ஒன்றே. வேதாந்தத்திலும் மற்ற பொய்த்தோற்றம் காணப்படும் இடங்களிலும் அறிவை அடைந்த பின்னர் வேறொன்றும் செய்ய அவசியமில்லை.

‘மெய்ச் சுடரே’ என்று கூற அவசியமென்ன, ‘தேசனே’ என்று கூறியது போல, இங்கும் சுடரே என்று கூறியிருக்கலாமே? சுடர், மெய்ச்சுடர் என்பது போல பொய்ச்சுடரும் இருப்பதே காரணம். வேதத்தில் **तस्य भासा सर्वमिदम् विभाति** ‘தஸ்ய பாஸா சர்வம் இதம் விபாதி’ – அதனுடைய பிராகஷத்தினால் மற்றவை, சூரிய, சந்திரன் எல்லாம் பிராகாசிக்கின்றது, என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஞானமும் அதன் பலனான ஞானமும் வேறு இல்லை.

## எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே --- 39

எஞ்ஞானம் – எந்த அறிவும், இல்லாதேன் - இல்லாதவன், இன்பப் பெருமானே – ஆனந்த ஸ்வரூபனே.

எந்த அறிவும் (தகுதியும்) இல்லாத எனக்கு இன்பத்தை அருளிய தலைவனே.

மீண்டும் தன்னுடைய ஞானத்திற்கு முன்னர் உள்ள நிலையை யோசித்து கூறுகிறார். குழந்தையாய் எல்லோரும் நம்முடைய மல-மூத்திரத்தில் விளையாடியது இன்று அருவருக்கத்தக்கதாக இருப்பதுபோல. எஞ்ஞானம் – எந்த அறிவும், இல்லாதேன் – இல்லாதவன். நான் ஒரு தகுதியும் இல்லாதவனாக இருந்தேன்.

இன்பப் பெருமானே – ஆனந்த ஸ்வரூபனே. நெருப்பு அதன் அருகில் இருப்பவருக்கு அதன் சூட்டை அளிப்பது போல, இன்ப ஸ்வரூபமான ஈஸ்வரன் அருகில் இருந்தாலே நமக்கு அந்த இன்பம் அனுபவத்திற்கு வரும் என்ற நிலையில், அந்த ஈஸ்வரன் குறித்த ஞானத்தால் அதன் ஸ்வரூபம் ஆன ஒருவருக்கு ஆனந்தம் ஸ்வரூபமாக இருக்கும் என்பது உணரக்கூடியதே. அதனால், இன்பப் பெருமானே என்பதற்கு ஆனந்தத்தை அளிக்கும் பெருமானே என்றும் பொருள் கொள்ளலாம்.

இந்த இன்பம் எவ்வாறு அறிய இயலும், என்பதைத் தெளிவாக விளக்குகிறார்.

## அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே — 40

அஞ்ஞானம் தன்னை - அறியாமையை, அகல்விக்கும் - நீக்கும், நல் அறிவே – சரியான அறிவே.

அறியாமையை நீக்கும் சரியான அறிவே.

இது மிகவும் முக்கியமான வாக்கியம்.

ஈஸ்வரன் தன்னுடைய கையை உயர்த்தி அருள்புரிவார் அதனால் அறியாமை நீங்கும். நமக்கு மந்திரத்தைத் தருவார் அதனால் அறியாமை நீங்கும். நமக்குப் பலவகை தீக்ஷைகளில் ஒன்றை அளிப்பார் அதனால் அறியாமை நீங்கும். நமக்கு அருந்த ஏதாவது தருவார் அதனால் அறியாமை நீங்கும். இப்படி, பலவகையான கற்பனையில் இருக்கும் நமக்குத்

தெளிவாக இது எதுவும் சரியான முறையல்ல என்பதைக் கூறுகிறார்.

யோகம் செய்வதால், மந்திரம் ஜபிப்பதால், சமாதி பழகுவதால், வேதம் ஓதுவதால், கர்மங்கள் செய்வதால், இன்னும் இப்படிப் பலப்பல வழிகளில் ஏதும் சரியானது இல்லை என்பதால், அதனால் அறியாமை நீங்காது.

கயற்றில் உள்ள தோற்றம் மாத்திரமான பாம்பை நீக்க அது கயறு என்ற சரியான அறிவே அவசியம். அதுபோல நம் அறியாமை, நாம் ஜீவன் முதலிய, நீங்க நம்மைக் குறித்த சரியான அறிவே காரணமாகும். இந்த சரியான அறிவு ‘பிரமாண ஜனித ஞானம்’ – ஞானத்தை அடையும் சரியான கருவியால் உண்டாகும் அறிவு, என்று இங்கு கூறப்பட்டது. அப்படிப்பட்ட அறிவை தந்து அறியாமையை நீக்கும் கருவி வேதாந்தத்தை தவிர வேறொன்றும் இல்லை.

உபாதான காரணமான பொருட்காரணத்தோடு நீங்குதல் பாதம் என்றும், அதுவல்லாமல் நீங்குதல் நிவ்ருத்தி என்று முன்னர் கூறப்பட்டது. .ஆசானிடம் இருந்து கிடைப்பது மட்டுமே நல்லறிவு, அதனால்தான் ‘நல்லறிவே ஆசான்’ என்று கூறுகின்றனர். மீண்டும், அந்த ஈஸ்வரன் எப்படிப்பட்டவர்? அந்த கூறப்பட்டு கொண்டிருக்கும் ஈஸ்வரனை பற்றி மேலும் கூறுகிறார்.

**ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்**
**ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்**
**போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்**
**தொழும்பின் --- 41 - 43**

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் – துவக்கம், வரையறை, முடிவு இல்லாதவர்,

துவக்கம், வரையறை மற்றும் முடிவு இல்லாதவன் ஈஸ்வரன். ஈஸ்வரனுக்கு துவக்கமோ முடிவோ அல்லது வரையறையோ இருந்தது என்றால் அவர் அநித்தியம் ஆவார் என்று அறிவோம். அதனால், ஆக்கம் இல்லாய் – துவக்கம் இல்லாதவன். அதாவது ஈஸ்வரன் தனக்கு அந்நியமான, காரணம் இல்லாதவன். அளவு இல்லாய் – வரையறை இல்லாதவன், இறுதி இல்லாய் – முடிவு இல்லாதவன், அதாவது காரியம் ஆகாதவன்.

பொதுவாக எது துவங்கியதோ அது முடிவுக்கு வரும் (பிறந்தது அழியும்) என்ற சாமானிய நியமம் இந்த உலக விஷயங்களிலேயே தவறு என்று நிரூபிக்கப்படும். பானையின் முன்னின்மை துவக்கமற்றது ஆனால், அது பானை உண்டுசெய்யப்படுவதால் அழிவு அடைகிறது. பானை அழிந்த பின்னர் அந்த அழிவு பிறந்தது (பின்னின்மை), ஆனால், அதற்கு முடிவு இல்லை. எது துவக்கமில்லாததோ அது முடிவும் இல்லாதது அதனால் இடையில் வரையறை உடையவரும் இல்லாதவர். பிறந்ததாக ஏற்றால் மட்டுமே வரையறை ஏற்க இயலும்.

> அனைத்து உலகும் – இந்த ஸ்ருஷ்டியை , ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் போக்குவாய் - ஸ்ருஷ்டிப்பாய், காப்பாய், சம்ஹாரம் செய்வாய், அருள் செய்வாய், மறைப்பாய்

ஐந்தொழில் செய்பவன் ஈஸ்வரனே. திருவைந்தெழுத்தை பற்றி கூறிய முதல் வாக்கியத்தில் இதைக் கண்டோம். ஈஸ்வரன் ஐந்தொழில் உடையவர், அவரது ஒரோர் செயலுமே ஐந்தெழுத்தின் ஒவ்வொரு எழுத்து. பின்னால் 'நிறங்கள் ஓரைந்து உடையாய்' என்றும் இதனைக் கூறுவதாகவும் ஏற்கலாம். பிராணன் ஒன்றாக இருப்பினும் செயல்களால் பிராணன், அபானன் முதலிய வெவ்வேறு பெயர் அடைவதும். அதுபோல மனது - மனது, புத்தி முதலிய பெயர்களை அடைவது போல. ஒன்றான ஈஸ்வரன் பல செயல் செய்வதால் பல பெயர்கள் அடைவது போலக் காணப்படுகிறான்.

பொதுவாக சிருஷ்டிக்கும் செயல் பிரம்மாவும், காத்தலை விஷ்ணுவும், அழித்தலை சிவனும் செய்வதாகக் கூறப்பட்டாலும். இந்த செயல்களைச் செய்வது இந்த ஈஸ்வரன் ஒருவர் மட்டுமே.

> என்னைப் புகுவிப்பாய் – என்னை ஈடுபடுத்துவாய்,
> நின் தொழும்பின் – உன்னுடைய சேவையில்
> (சிந்தனையில்).
>
> என்னை உன்னுடைய சிந்தனை என்ற சேவையில் ஈடுபடுத்துவாய்.

என்னைப் புகுவிப்பாய் – என்னை நிலைப்படுத்துவாய், புகுவிப்பாய் என்று கூறியதின் காரணம் **पराञ्चि खानि व्यतृनत् स्वम्भू** 'பராஞ்சி காணி வ்யத்ருனத் ஸ்வயம்பூ' – இந்திரியங்கள் வெளிப்புறம் ஈடுபடுவதாகவே இறைவனால் உண்டாக்கப்பட்டவை, அதனால் வெளிப்புறமான சிந்தனையில் மட்டுமே ஈடுபடுகிறோம் ஆத்மாவைக் குறித்த சிந்தனையில் அல்ல; அறிவாளி (தைரியம் உடையவர்) உட்புறமாக மனதைத் திருப்பி ஆத்மாவைப் பார்க்க விழைகிறார் என்று முண்டக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நிலையை அடைந்த என்னை, தன்னிலிருந்து வேறானவாக வைக்காதிருத்தல்.

புகுவிப்பாய் என்பதின் பொருள் உட்செலுத்துவாய் என்ற பொருளில் இங்கு இல்லை. **ब्रह्मविद् आप्नोति परम्** 'பிரம்மவித் ஆப்நோதி பரம்' – பிரம்மத்தை அறிந்தவர் பரத்தை அடைகிறார். இங்கு ஆப்நோதி என்பது புகுவித்தல் என்ற பொருள் உடையது. பொதுவாக சம்ஸ்கிருத இலக்கணத்தில் அடைதல் என்ற பொருள் உள்ள வேர்ச்சொல் எல்லாம் அடைதல், அறிவு மற்றும் செல்லுதல் என்ற பொருள்படும். இங்கும் புகுவிப்பாய் (ஆப்நோதி) அடைகிறார் என்ற பொருளில் இல்லாமல், அறிதல் என்ற பொருளில் வரும். தன்னை உணர்ந்தவர் பிரம்மத்தை அறிகிறார். அறிவே அடைவு, அறிவு அடைந்த பின்னர் வேறு எந்த செயலும் செய்ய

வேண்டாம். உதாரணத்திற்கு, பத்து பேரில் தொலைந்து போனதாக கருதப்பட்ட ஒருவன் அதே கூட்டத்தில் இருக்கிறான் என்று கூறிய பின், நீயே அந்த பத்தாமானவன் என்று அறிந்தபின் வேறொன்றும் செய்ய வேண்டாம்.

நின் தொழும்பின் – உன்னுடைய சேவையில் (சிந்தனையில்). ஞானம் உண்டான பின்னர் **न किञ्चिदपि विचालयेत्** 'ந கிஞ்சித் அபி விசாலயேத்' – மனதை அந்த பிரம்மத்திலிருந்து வேறு எந்த விஷயத்திலும் ஈடுபடுத்தாமல் இருக்கவேண்டும். தன்னை மறக்காதிருத்தலே இங்கு சேவை.

## நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே --- 44

> நாற்றத்தின் நேரியாய் – மேன்மையான சம்ஸ்காரத்தால், சேயாய் – தூரத்தில் இருப்பவனே, நணியானே – அருகில் இருப்பவனே
>
> மேன்மையான சம்ஸ்காரத்தினால் தூரத்தில் இருப்பவனே, அருகில் இருப்பவனே

நாற்றத்தின் – வாசனையின். வாசனை என்பது சம்ஸ்காரம், எண்ணப் பதிவுகள். சேயாய் - குழந்தையாய் என்று இல்லாமல் தூரத்தில் என்று பொருள். அறியாதவர்களுக்கு தூரத்தில். அறிந்தவர்களுக்கு தன்னுடைய ஸ்வரூபமாகவே இருப்பதால் நணியானே – அருகில் இருப்பவனே. 'புறந்தார்க்குச் சேயோன்' என்ற இடத்திலும் சேய் என்பது தொலைவில் என்ற பொருள்படும்படி ஏற்கப்பட்டது.

ஒரே விஷயத்தை குறித்து இரு வேறு நிலைகள் இருந்தால் அது சந்தேகத்திற்குரிய வாக்கியம் ஆகும். இங்கு அருகில் மற்றும் தூரம் என்று ஈஸ்வரனை குறித்துக் கூறுவது இப்படிப்பட்ட சந்தேகத்திற்குரிய பிதற்றல் அல்ல. விஷயமாக்குபவருக்கு அவர் தூரத்தில் இருப்பவர், விஷயாமாக்காமல் இருப்பவருக்கு, ஈஸ்வரனைத் தன்னுடைய ஸ்வரூபமாக

அறிபவருக்கு நெருக்கமானவன். இதுவே கேநோபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது **यो नः तद्वेद तद्वेद वेद नो न वेदेति वेद च** ‘யோ ந: தத் வேத தத் வேத நோ ந வேதேதி வேத ச’ – எவர் இதை அறிந்தாரோ (விஷயமாக) அவர் அறியாதவர், எவர் இதை அறியாதவரோ (விஷயமாக) அவர் அறிந்தவர்.

அவனை அறிய நமது சம்ஸ்காரம் மிகவும் துணைபுரிவதாக இருக்கிறது. நமது எண்ண பதிவுகள் சாத்வீகமானதாக இருந்தால் ஈஸ்வரனை அறிவது சுலபமாக இருக்கும், ராஜஸமானதாக இருக்குமானால் தடைகள் உண்டாகும், தாமசமானதாக இருந்தால் அறிவதற்கு இயலாது போகும். மனது இந்த மூன்று குணங்கள் உடையது, சாத்வீகமானது தூய்மையான மனது ஞானத்தையும் மோக்ஷத்தையும் அடைய விரும்பும், ராஜசமானது சஞ்சலமானது காமம், கோபம் முதலியவை உடையது, தாமசமான மனது பாரமான மனது தூக்கம், மதிமயக்கம் முதலியவை உடையது.

## மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே — 45

> மாற்றம் மனம் – மாற்றமான மனம், கழிய – அழிய / நீங்க, நின்ற மறையோனே – அப்படி இருக்கும் வேதப் பொருள் ஆனவனே

> மாற்றமாகிய மனது நீங்க அங்கு இருக்கும் வேதப் பொருளே.

மாற்றம் என்பது சொல் என்றும், மனம் – மனது என்றும் பொருள் கொள்ளலாம். அல்லது மாற்றம் அடையும் மனது என்றும் பொருள் கொள்ளலாம். எண்ணங்களே மனது என்று கூறியதால், மனது உள்ள வரை எண்ணங்கள் இல்லாது போகாது. எண்ணங்கள் மனது அடையும் மாற்றமே, மாற்றம் ஆகிய மனம்.

கழிய – அழிய, நீங்க. மனது வரையறுக்கப்பட்டது என்பதால் அதன் மூலம் காண்பது வரையறுக்கப்படாததாக இருத்தல் இயலாது. ‘காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்’ என்பது போல. இதுவே சேயாய் மற்றும் நணியாய் என்று கூறப்பட்டது. அதாவது, மனதின் மூலம் காண்பவருக்கு தூரமாகவும், மனதற்ற நிலையில் நெருக்கமாகவும். தன்னைக் காட்டிலும் வேறேதும் தனக்கு நெருக்கமாக இருத்தல் இயலாது. நம்மை நம்மிலிருந்து பிரிக்க இயலாது. ‘மனம் அது செம்மையானால் மார்க்கம் அது’ என்பர். **मन एव मनुष्यानाम् कारणम् बन्धमोक्षयोः** ‘மனம் ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த-மோக்ஷயோ’ – மனதே மனிதனின் பற்றிற்கும் விடுதலைக்கும் காரணம். தாயுமான சுவாமிகளும் ‘சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயென் பராபரமே’ என்கிறார்.

நின்ற மறையோனே – அங்கு இருக்கும் வேதப் பொருளே. தடையான மனது இறந்த நிலையில், ஆத்மப் பிரகாஶத்தை மறைக்க ஏதும் இல்லாததால் அங்கு வேதங்களின் பொருளான, வேதங்களால் மட்டுமே அறியப்படும் ஈஸ்வரன் தானே ஒளிர்கிறான்.

## கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச் --- 46

கறந்த பால் – இப்பொழுது கறந்த பால், கன்னலொடு – இளஞ்சூடோடு இருக்கும் நிலையில், நெய்கலந்தாற் போலச் – அதில் நெய் பரவி இருப்பதுபோல.

இப்பொழுது கறந்த இளஞ்சூடான பாலில் நெய்யானது எங்கும் ஊடுருவி இருப்பது போல.

பாலில் அதன் சாரமான நெய்யானது எல்லா இடத்திலும் ஊடுருவி இருக்கிறது. கடைந்தெடுக்கும் போது கிடைக்கும் நெய் சிறிதளவு இருக்கும் காரணத்தால் அது ஏதோ ஒரு

இடத்தில் மட்டும் இருக்கும் என்று பொருள் இல்லை. பாலின் சாரம் நெய் (வெண்ணை). கைவல்ய நவநீதத்தில் 'கடைந்தெடுத்தேன் இந்த கைவல்ய நவநீதத்தை' என்கிறார்.

அல்லது, 1 + 2 = 3. இங்கு அந்த மூன்றில் 1 எங்குள்ளது என்று கேட்டால் என்னவாகும். அதுபோல, ஈஸ்வரன் எங்கும் ஊடுருவியிருக்கிறான். இது எவ்வாறு தெரியும் என்றால்? எனக்கு அன்னியமாக இறைவனும், இறைவனுக்கு அன்னியமாக நானும் இருத்தல் இயலாது, அநித்தியம் என்ற நிலை உண்டாகும் என்பது நினைவிருக்கவேண்டும்.

## சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று --- 47

> சிறந்தடியார் – மேன்மையான அடியார்கள், சிந்தனையுள் – மனதில், தேன்ஊறி நின்று – ஆனந்த ஸ்வரூபமாய் இருக்கும்.
>
> மேன்மையான அடியார்களின் மனதில் ஆனந்த ஸ்வரூபமாய் இருக்கும்.

சிறந்தடியார் – மேன்மையான அடியார்கள். அடியார் என்று மட்டும் கூறாமல், சிறந்த அடியார்கள் என்று கூறியுள்ளார். சாதாரண அடியார்கள் ஈஸ்வரன் இருக்கிறார் என்று அறியும் பரோக்ஷ ஞானத்தை உடையவர்கள். ஆனால் சிறந்த அடியார்கள் 'நானே சிவன்' என்று, சிவனிலிருந்து தன்னுடைய இருத்தலை வேரில்லாததாக அறியும் அபரோக்ஷ ஞானத்தை (நேரிடை அனுபவம்) உடையவர்கள். பானை என்று ஒரு பொருள் இருக்கிறது என்பது பரோக்ஷ ஞானம், இது தான் பானை என்பது அபரோக்ஷ ஞானம். அதுவல்லாது அடியாரில் சிறந்த, சிறப்பில்லாத என்று வேறுபாடு இல்லை.

தேன்ஊறி நின்று – ஆனந்த ஏக ரசம். மாற்றமல்லாத ஒரு சுவை. தேனில் ஊறிய பொருளில், ஒரு பகுதியில் மட்டும் தேன் ஊறி இருக்கும் மற்ற இடத்தில் அதுவல்லாது இருக்கும் என்பது

இல்லை. பிரம்மத்தை உணர்ந்தவர் பிறப்பு முதலியவை **न आसीत् न अस्ति न भविष्यति** ‘ந ஆஸீத், ந அஸ்தி, ந பவிஷ்யதி’ – இருந்தது இல்லை, இப்போது இல்லை, எதிர்காலத்திலும் இல்லை என்ற அனுபவத்தை அடைந்தவர்களாக இருப்பார்கள்.

## பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான் --- 48

பிறந்த பிறப்பு – எடுத்த பிறப்புகள், அறுக்கும் – நீக்கும், எங்கள் பெருமான் – எங்கள் தலைவன்.

நாம் எடுத்த பிறப்புக்களை நீக்கும் அறிவு ஸ்வரூபனான எங்கள் தலைவன்.

பிறந்த பிறப்பு – எடுத்த பிறப்பு. நாம் எடுக்கும் பிறப்புக்களை நீக்க இயலும். ஆனால் நாம் எடுத்து முடித்த பிறப்புக்களை நீக்க அவசியம் கிடையாது. அதனால் எடுத்த பிறப்புக்கள் என்ற பொருள் தவறு? எடுத்த பிறவிகள் முடிந்துவிட்டாலும், அதன் பயனாக உண்டான சம்ஸ்காரங்கள் இன்னும் தொடர்வதால், இவ்வாறு பொருள் எடுப்பது தவறில்லை.

அறுக்கும் – நீக்கும். அழிக்கும் என்ற பொருள் வராது என்று முன்னரே கூறினோம். உங்களுக்கே (மணிவாசகருக்கே) அது இன்னும் அழியவில்லை, நீங்கள் அதை (பிறப்பை) தனக்கு அன்னியமாக காண்பதால்? தவறு. ஞானிகளின் வ்யவஹாரம் **बाधासामानाधिकरण्यम्** ‘பாதாசாமானாதிகரண்யம்’ என்ற நிலையான நிராகரித்த நிலையில், உலகம் எறிந்த கயறுபோல இருக்கும்.

எங்கள் பெருமான் – எங்கள் தலைவன். ஞான ஸ்வரூபன்.

அவரைப் பற்றி இன்னும் தெரிந்துகொள்ள ஆவலாய், அந்த தேனூறி நிற்கும் ஆனந்த நிலையை அடைய, சிறந்த அடியார்

ஆக விருப்பம் உள்ளவர்கள் கேட்கும்போது. அதற்கு பதிலாக கூறுகிறார் –

**நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை**

**மறைந்திட மூடிய மாய இருளை**
**அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி**
**புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,**
**மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை**
**மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய - 49-55**

> ஐந்து கோஷங்களிலும் (மறைப்புகள்) அதற்கு ஆதாரமாக இருந்தும், உன்னுடைய அந்த ஸ்வரூபத்தை காண இயலாதவாறு இந்த ஐந்து புலன்களும் என்னை ஏமாற்ற.

வரிகள் 49 ல் இருந்து 55 ம் வரி வரை பஞ்சகோஷ விவேகத்தை கூறுகிறார்.

நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் – ஐந்து நிறங்கள் உடையவர். சாமானியமாக கனவு கருப்பு வெள்ளையில் இருக்கிறது. நாம் காணும் விஷயங்கள் சிகப்பு, நீலம் மற்றும் பச்சை என்று சிலர். வேறு சிலரோ, நான்கு நிறங்களாக (நீரம், செவ்வூதா, மஞ்சள் மற்றும் கருப்பு) இருக்கிறது என்கின்றனர். இங்கோ ஐந்து நிறங்கள் என்கின்றனர். நிறங்கள் என்பது ஒரு விஷயத்தை மற்றொன்றில் இருந்து வேறுபடுத்த உபயோகமாவது. சமஸ்கிருதத்தில் ரூபம் என்பது நிறம் அல்லது உருவம் என்பர். நாம் நிறத்தையும் உருவத்தையும் வேறுபடுத்துவது இல்லை. நாம் உருவத்தில் உள்ள நிறத்தின் மீதிருந்து வரும் வெளிச்சத்தின் பிரதிபலிப்பையே உருவம் என்கிறோம்.

நமச்சிவயத்திற்கு ஏற்ற ஐந்து உருவத்தையும் இங்கு ஏற்கலாம். அல்லது இந்த உலகம் ஐந்து வகையாகக் காணப்படுகிறது, ஈஸ்வரன், ஜீவன், ஜகத், ஜீவனும் ஈஸ்வரனும் வேறுபட்டதாகவும், ஈஸ்வரனும் ஜகத்தும் வேறுபட்டதாகவும். அல்லது காஷ்மீர சைவ சித்தாந்திகள் பரமசிவன், சதாசிவன் முதலிய ஏற்பது போலவும் ஏற்கலாம்.

விண்ணோர்கள் ஏத்த – மேலானவர்கள் போற்ற. தேவர்கள் போற்ற என்றும் ஏற்கலாம். திருவாரூர் தியாகேசர் கோவிலில் உள்ளது தேவாசிரிய மண்டபம். தேவர்கள் போன்ற விபூதி தரித்த சிவ பக்தர்கள் ஆசிரயித்து இருக்கும் மண்டபம், தேவர்களுக்கு ஆசிரயமாக இருக்கும் சிவனின் மண்டபம் என்றோ பொருள் கொள்ளலாம். அல்லது, தேவர்களுக்கு ஆசிரியர் என்ற பொருளிலும் எடுக்கலாம்.

மறைந்திருந்தாய் – வேத பொருளாக, மறைபொருளாக. கேநோபநிஷத்தில் இரண்டாவது அத்தியாத்தில் தேவர்களுக்கும் காட்சி அளிக்காத நிலையை நாம் காண்கிறோம்.

எம்பெருமான் – என் தலைவனே, வல்வினையேன் – மிகவும் மோசமான கர்மங்கள் உடையவர்களை, தன்னை மறைந்திட – தன்னுடைய மறைந்திருக்கும் ஸ்வரூபத்தை. எம்பெருமான் தன்னை மறந்திடத் தூண்டும் வல்வினையேன் என்றும் இங்கு பொருள் ஆகும். ஈவரனே ஜீவன், ஜீவனே ஈஸ்வரன் என்ற வேதாந்த நிலையை அனுசரித்து. மூடிய மாய இருளை – ஸ்வரூபத்தை மறைக்கும் அறியாமை என்னும் இருள். தன்னை மறந்ததினால் நமக்கு இது, அது என்ற பேதம் தோன்றுகிறது. மாயையின் பல பெயர்களில் தமஸ் – இருளும் ஒன்று. ஆத்மா பிரகாஶத்தை மறைப்பதனால்.

ஆனால், இங்கு நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் என்பது பஞ்சகோஷத்தை (போர்வை) குறிப்பதாகவே காண்கிறோம். இந்த கோஷ விசாரமே தைதரீய உபநிஷத்தில் பிருகு வள்ளி எனப்படும் பாகத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த விசாரமே ரமண

மகரிஷியின் ‘நான் யார்’ விசாரமும். ஐந்து நிறங்கள் என்று இங்கு கூறிய காரணம், எவ்வாறு அச்சில் வார்க்கப்பட்ட உலோகம் அந்த அச்சின் உருவத்தை அடைகிறதோ அதுபோல ஆத்மாவில் கோஷங்கள் அச்சு என்று, கற்பனையாகக் காணப்படுகிறது. அதனுள் இருக்கும் ஒவ்வொரு கோஷமும் அதே உருவத்தையே அடையும். இந்த ஆத்மா ஸ்வரூபம் தேவர்களுக்கும் அறிய இயலாததாக இருப்பது ‘விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய்’ என்று கூறப்பட்டது.

எம்பெருமான் வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை – ஆத்மாவை மறைக்கும் அறியாமை ஆனந்தமய கோஷத்தை. இது காரண ஆஞ்ஞானம். நமது புண்ணிய பாவத்தினால் அறியாமை நன்றாக உயிரடைந்து, எந்த ஆத்மாவைச் சார்ந்திருகிறதோ அந்த ஆத்மாவையே மூடும் திறனை அடைகிறது. தூக்க நிலையில் இந்த கோஷத்திலேயே நாம் நிலைபடுகிறோம். இது ஆனந்த ஸ்வரூபமாக இருப்பதால் அந்த ஆனந்தத்தை நாம் தூக்கத்தில் அனுபவிக்கிறோம். ஆத்மாவிற்கு நெருங்கியதாக இருப்பதால் ஆனந்த ஸ்வரூபமாக இருந்தாலும், அறியாமை ஸ்வரூபமாகவும் இருப்பதால் நாம் சம்சார பந்ததிலிருந்து விடுதலை அடைவதில்லை. இல்லாவிட்டால் தூக்கமே நம்மை விடுவித்துவிடும்.

அதற்கடுத்த கோஷமான ஆனந்தமயம் மற்றும் மனோமயம் கூறப்படுகிறது ‘அறம்பாவம் என்னும்’ – அறம் புண்ணியம், பாவம் – பாவம். புண்ணிய பாவத்தை நாம் செய்திருந்தால் மட்டுமே அனுபவிக்க இயலும். அப்படி அந்த பலன் நாம் அடைய கர்த்ருத்வம் – நான் செய்கிறேன் என்ற எண்ணம், மற்றும் போக்த்ருத்வம் – நான் அனுபவிக்கிறேன் என்ற எண்ணம் அவசியம்.

அரும் கயிற்றால் கட்டி – பிராணன் என்ற கயிற்றால் கட்டி. கர்த்ருத்வம் மற்றும் போக்த்ருத்வத்தை அறியாமையில் கட்ட பிராணன் வேண்டும். அதனால்தான் பிராணன் இருக்கும்வரையில் நமக்கு அந்த உடலோடு சம்பந்தமும்,

அதனில் அனுபவங்களும் உண்டாகிறது. ஸ்தூல உடலையும் ஆத்மாவையும் கட்டுவது இந்த பிராணன் என்றும் கொள்ளலாம்.

சூக்குமமான நிலைகளை காண்பித்து, இப்போது ஸ்தூல உடலை காண்பிக்க. புறம்தோல் போர்த்து – வெளியில் தோல் போர்த்திய மாமிஸ பிண்டம், எங்கும் புழு அழுக்கு மூடி – அதனுள் வைரஸ் முதலியதும் ரத்தம் முதலிய அழுக்கும். ரத்தம், எச்சில், எலும்பு முதலியவை உடலில் இருக்கும் வரைதான் மதிப்பு, வெளியில் கிடந்தால் அது தீண்டத்தகாதது ஆகும். இதனைத் தீண்டினால் குளிக்க வேண்டும் என்ற விதியும் (கட்டளை) வேதத்தில் உள்ளது.

மலம் சோரும் – மலமானது வெளியேற்றும், சோரும் - உண்டாக்கும். ஒன்பது வாயிற் குடிலை – ஒன்பது கதவுகள் உள்ள குடில். பகவான் பகவத்கீதையில் **नव द्वारे पुरे देहि नैव कुर्वन् न कारयन्** ‘நவதுவாரே புரே தேஹி நைவ குர்வன் ந காரயன்’ – ஒன்பது கதவுகள் உள்ள ஊரில் இந்த தேகமுடையவன் (ஆத்மா), ஒன்றும் செய்யாமலும் செய்விக்காமலும் இருக்கிறான், என்கிறார். ஒன்பது கதவானது – மல துவாரம் 1, மூத்திர துவாரம்1, வாய் 1, மூக்கு 2, காது 2, கண் 2 என்று ஒன்பது (அல்லது தொப்புள் 1, தொண்டைகுழி 1, பிரம்மரந்திரம் 1).

மலங்கப் புலன் – அழுக்குகள் கூடிய, மலங்கச்செய்யும் புலன்கள். ஐந்தும் - செயற்புலன் ஐந்து அல்லது அறிவுப்புலன் ஐந்து. செயற்புலங்கள் – வாய், கை, கால், குதம் மற்றும் மூத்திர இந்திரியம். அறிவுப்புலன் – கண், காது, தோல், மூக்கு மற்றும் நாக்கு. வஞ்சனையைச் செய்ய – நம்மை ஏமாற்ற. இந்திரியங்கள் வெளிமுகப்பட்டதாக பிரம்மாவினால் படைக்கப்பட்டவை என்று கண்டோம்.

ஆனால் ரகசியம் இது தான், நீதான் ‘நிறங்கள் ஓர் ஐந்து’ என்று கூறப்பட்டதாக இந்த ஐந்து புலன்கலாகவும் இருக்கிறாய், அதன் விஷயமாகவும் ‘நேயத்தே நின்ற’ என்று நீயே இருக்கிறாய். இருந்தாலும் அதன் அறியாமையால், பார்ப்பது

விஷமாக்கப்பட்டதால் நான் வஞ்சனை செய்யப்பட்டவனாக, ஏமாற்றப்பட்டவனாக ஆகிறேன். இங்கு ஏமாற்றம், நம்முடைய இயல்பே ஆனந்தமாக இருந்தாலும் இந்த வரையறுக்கப்பட்ட ஆனந்ததை அனுபவிக்க செயல்படுவதே ஆகும். கேனோபநிஷத் இதை **यच्चक्षुषा न पश्यति येन चक्षूम्षि पश्यति तदेव ब्रह्म त्वम् विद्धि नेदम् यदिदम् उपासते** 'யச்சக்ஷுஷா ந பஷ்யதி ஏன சக்ஷூம்ஷி பஷ்யதி ததேவ பிரம்ம நேதம் யதிதம் உபாசதே' – எது கண்களால் பார்க்கமுடியாதோ, கண்களை எது பார்க்கிறதோ அதுவே பிரம்மம், நீ உபாசனை செய்வது அல்ல. வஞ்சனையை செய்ய – ஆத்மா ஞானம் அடையவிடாமல் நம்மை அறியாமையில் தள்ள.

அறியாமை - ஆனந்தமய, போக்த்ருத்வம் – விஞ்ஞானமயம், கர்த்ருத்வம் - மனோமயம், பிராணன் – பிராணமயம் மற்றும் உடல் – அன்னமயம் என்று ஐந்து கோஷங்களும் இங்கு ஐந்து நிறங்கள்.

## விலங்கு மனத்தால், விமலா உனக்குக் --- 56

> விலங்கு மனத்தால் – கட்டுண்ட மனதால், விமலா – மலங்கள் அற்றவனே (எதனோடும் சம்பந்தம் இல்லாதவனே), உனக்கு.
>
> விலங்கு போன்ற மனதினால், பற்றற்ற உனக்கு.

விலங்கு மனத்தால் – கட்டுண்ட மனதால். விலங்கிடப்பட்ட மனதால். விஷயத்தோடு சம்பந்தம் உடைய மனதால். விஷய சம்பந்தமே பாசம் எனப்படுகிறது. பாசம் என்பதற்கு கட்டு, தலை என்று பொருள். அல்லது, விலங்கு போன்ற மனதால் என்று ஏற்கலாம். மனது குரங்கு, மான், புலி, மதம் பிடித்த யானை, உடும்பு ஆகிய மிருகங்களுடன் ஒப்பிடப்படுகிறது. இதனையே திருபெருந்துறை கோவில் முன்புறத்தில் உடும்பு மற்றும் குரங்கு உருவத்துடன் குறிப்பிடுகிறார். சிக்கென

இறைவனைப் பிடிக்கும் மனது உடும்பைப் போன்றது, விஷங்களில் ஈடுபடுவது குரங்கு போன்றது.

விமலா – மலங்கள் அற்றவனே (எதனோடும் சம்பந்தம் இல்லாதவனே). நிமலன் பொருள் போன்றே ஏற்கவேண்டும். இந்த பஞ்சகோஷத்திற்கு உள்ளே இருப்பது அந்த ஈஸ்வரனே என்றாலும், அவர் இதனால் பந்தப்படாதவர்.

உனக்கு – உன்னுடைய ஸ்வரூபத்திற்கு.

## கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும் --- 57

கலந்த அன்பாகிக் – அன்பு கலந்து, கசிந்து உள் உருகும் – அந்த மனது உருகுகிறது.

அன்பு கலந்து, அதன் தாக்கத்தால் என்னுடைய மனது உருகி.

கலந்த அன்பாகிக் – அன்பு கலந்து, இப்பொழுதுதான் உன்னுடைய ஸ்வரூபத்தை அறிந்துள்ளேன், என்று அறிய முயற்சிப்பவன் வேண்டுவது. அந்த அன்பால், கசிந்து உள் உருகும் - என்னுடைய மனது உருகுகிறது. யோகத்தின் வெளிப்பாடாக மயிர்க்கூச்செறிதல், ஆனந்தபாஷ்பம் முதலியவை கூறப்பட்டுள்ளன.

## நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி --- 58

நலம் தான் இலாத – நற்குணம் இல்லாத, சிறியேற்கு நல்கி – சிறியவருக்கு தந்து

சிறிய அளவுக்கும் நல்ல குணங்கள் இல்லாதவருக்குத் தந்து.

கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும் நலம் – நன்மை கலந்த அன்பானது கசிந்து, பொங்கி மனதில் உருகும்.

நலம் கலந்த அன்பு, எந்த அன்பு எந்த கேடும் விளைவிக்காததோ அப்படிப்பட்ட அன்பு.

அன்பு சில வேளைகளில் கேடாகவும் ஆகும். நன்மையை மட்டுமே விரும்புவது, நன்மையை மட்டுமே பலனாகத் தருவதுமான அன்பு, இங்கு நலம் கலந்த அன்பு என்று கூறப்படுகிறது.

தான் இலாத சிறியேற்கு நல்கி – தான் என்ற அஹங்காரம் இல்லாத ஜீவருக்கு தந்து.

தான் என்பது அஹங்காரம் என்பது அறிந்ததே. நான், எனது என்பது அதன் வெளிப்பாடே. அப்படிப்பட்ட தான் இல்லாத ஜீவர்.

நலம் தான் இலாத சிறியேற்கு என்ற வாக்கியம் பொருந்தாது போகும். நல்ல கர்மமான, சாத்வீக கர்மங்கள், புண்ணிய கர்மங்கள் அதிகமாக இல்லாத நிலையில் ஈஸ்வரனின் அறிவானது, ஈஸ்வரனே நினைத்தாலும் கொடுக்க முடியாது. அப்படி கொடுப்பதாக ஏற்றால், வைஷம்ய-நைக்ருன்ய தோஷம் (ஒரு கண்ணில் சுண்ணாம்பு, மற்றொன்றில் வெண்ணை என்பது போல) உண்டாகும் என்று கண்டோம்.

சிறியேற்கு என்பது சிற்றறிவு படைத்தவருக்கு என்று அல்லாமல், சிறிய கூடத்திற்கு என்று ஏற்கலாம்.

பகவானும் பகவத்கீதையில் **सहस्रेषु कस्चिद् माम् वेत्ति तत्त्वतः** ‘சஹஸ்ரேஷு கஸ்சித் மாம் வேத்தி தத்தவத’ – பல்லாயிரம் பேர்களில், ஒரு சிலரே என்னை அடைகிறார்கள்.

**நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி, --- 59**

நிலம் தன்மேல் வந்தருளி - இந்த யோக பூமியில் வந்து கருணை செய்து, நீள்கழல்கள் காட்டி – அழகான ஸ்வரூபத்தை காட்டி

அப்படி இந்த யோக நிலங்களில் வந்திறங்கி உன்னுடைய அழகிய ஸ்வரூபத்தைக் காட்டி.

யோகத்தில் ஐந்து பூமிகள் – க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்ரம் மற்றும் நிருத்தம். இதில் பின்னர் சொன்ன இரண்டிற்கே யோகம் உண்டு என்று கூறப்பட்டுள்ளது, அந்த நிலங்களில்.

வேதாந்தத்தில் ஏழு பூமிகள் – சுபேச்சா, விசாரணா, தநுமானசி, சத்வாபத்தி, அசம்சக்தி, பதார்தபாவனா மற்றும் துரீயம். இந்த ஏழு பூமிகளில், பின்னர் குறிப்பிடப்பட்டவர் முன்னர் குறிப்பிடப்பட்டவரைக் காட்டிலும் மேன்மை நிலை அடைந்தவர்.

இந்த நிலங்களில், ஒருவர் இருக்க முன்னால் கூறிய 'அவன் அருளாலே' மிகவும் அவசியம். குருவைக் கூறுவதாக ஏற்றால், இந்த அடியேனைக் காக்க இந்த பூமியில் தோன்றி உங்கள் ஸ்வரூபத்தை நானும் காணும்படி செய்து என்று பொருள் ஆகும்.

## நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் — 60

நாயிற் கடையாய்க் – நாயினும் கீழ்மையாக, கிடந்த அடியேற்குத் – இருந்த அடியவருக்கும்

நாயினும் கீழ்மையான அடியவருக்கும்.

சிலர் நாய் பிறவியை ஒருவரின் கடைசி பிறவியாக ஏற்கின்றனர். இது தவறு. நாயும் முன்னர் கூறிய 'புல்லாகி பூடாகி' என்ற கூடத்தில் வருகிறது. இங்கு மேன்மையான பிறவி

மனிதப்பிறவி மட்டுமே என்றும் கூறப்பட்டது. நாய் என்பது உபலக்ஷனம் மட்டுமே. ஒரு செயலும் செயாதிருந்தாலும், ஓரிடத்தில் நிற்கும் இயல்பு இல்லாத நாய் போல மனது உடையவர்.

பகவான் ரமணர் கூறுவது 'ஞமலியிர்க்கேடாய்' என்று கூறுவதில் ஞமலி – நாய்.

## தாயிற் சிறந்த தயாவான தத்துவனே --- 61

தாயிற் சிறந்த – தாயினும் மேலான, தயாவான தத்துவனே – தயை உடைய ஸ்வரூபனே.

தாயினும் சிறந்த, கலப்பிடம் இல்லாத அன்பை காட்டும், தயை ஸ்வரூபனே.

தாயினும் சிறந்த என்பது முன்னர் கூறிய நலம் கலந்த அன்பு என்று கூறியதுடன் ஒப்பிட்டுக் காணவேண்டும். தாயும் கூட, தன்னுடைய குழந்தையை அதட்டுவதும், அடிப்பதும் உண்டு. ஆனால் ஈஸ்வரன் துன்பம் கலப்பு இல்லாத அன்பைக் காட்டுபவர். பஞ்சதஷியில், தந்தை குழந்தைக்கு முத்தம் கொடுக்கும்போது அவர் தாடி குழந்தையை குத்தினாலும் அவன் முத்தம் தருவதை நிறுத்துவதில்லை, என்கிறார். அப்படியில்லாமல், நமது நலம் மட்டுமே விரும்புபவர் ஈஸ்வரன். அவர் தயை உடையவர் என்று அவரையும் தயையையும் வேறுபடுத்தாமல் தயை ஸ்வரூபனே என்பதை 'தயாவான தத்துவனே' என்று கூறுகிறார். 'அன்பே சிவம்' என்பதும் இதுவே.

இந்த ஸ்வரூபத்தை, தத்துவத்தை மீண்டும் விளக்குகிறார்.

## மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே --- 62

மாசற்ற சோதி – கலப்பு இல்லாத பிரகாஶமே, மலர்ந்த மலர்ச்சுடரே – முழுமை பெற்ற பிரகாஶமே.

கலப்பில்லாத பிரகாஶமே. முழுமை பெற்ற பிரகாஶமே.

மாசற்ற சோதி - கலப்பு இல்லாத ஜோதி. நாம் காணும் நெருப்பில் ஏழு நிறங்கள் இருக்கின்றன. அதிலும் கூட, அந்த நெருப்பின் நடு பகுதியில் கருப்பு காணப்படுகிறது. சூரியனிலும் இதுபோல கருப்புப்புள்ளி காணப்படுகிறது. ஆனால், ஈஸ்வரன் ஸ்வயம்ஜோதி ஸ்வரூபன், இப்படிப்பட்ட எந்தக் கலப்பும் இல்லாதவன். நெருப்பு எங்கிருந்தாலும் அதை தூய்மையானதாகவே ஏற்கின்றோம். இருந்தாலும், அந்த நெருப்பிலும் மாசு இருக்கிறது.

மலர்ந்த மலர்ச்சுடரே – குன்றாத பிரகாஶமே. தீப்பொறியிலும் பிரகாஶம் இருக்கிறது, கொழுந்துவிட்டு எரியும் நெருப்பிலும் பிரகாஶம் இருக்கிறது. காட்டைச் சுட்டெரிக்கும் நெருப்பிலும். அந்த காட்டைப் பிராகாசிக்கும் சூரியனுள்ளும் பிரகாஶம் இருக்கிறது. ஆனால், இப்படி வளர்ச்சி அடையும் பிரகாஶமாக இல்லாமல், முழுமை பெற்ற பிரகாஶமாக இருப்பது இதன் தனிச்சிறப்பு.

## தேசனே தேனார் அமுதே சிவபுரனே --- 63

தேசனே – ஸ்வயம்பிரகாஶமே, தேனார் அமுதே – திகட்டாத அமுதே, சிவபுரனே – சிவ ஸ்வரூபனே

தானே ஒளிரும் ஸ்வரூபனே. திகட்டாத அமுதமான சிவ ஸ்வரூபனே.

தேசனே – தேசனே போற்றி என்பதில் கண்ட அதே பொருள். ஸ்வயம்ப்ரகாஶம் என்று பொருள்.

சிந்தனையில் தேனூறி நின்ற – தேனார் அமுதே – தெவிட்டாத மரணமற்ற நிலை. ஏகரசம் – மாற்றமற்ற சுவையுடையது என்று கூறினோம். ‘அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு’ என்பது ஆன்றோர் வாக்கு, இங்கு இந்த அமுதமோ எவ்வளவு பருகினாலும் அதே அனுபவம் மாறாமல் தருவது, ஒரு துளியானாலும் கடலளவு ஆனாலும் என்பது சிறப்பு.

சிவபுரனே – சிவ ஸ்வரூபனே. சிவபுரம் என்பது பொதுவாக கைலாயத்தை குறிக்கும் சொல், அந்த கைலாய புரத்தை உடையவன் சிவபுரன். ஆனால் இங்கு சிவபுரன் என்பது சிவனும் புரமும் வேறல்லாதது என்பதை குறிப்பது. வேதத்தில் **विष्णोः परमम् पदम्** ‘விஷ்ணோ பரமம் பதம்’ – விஷ்ணுவின் பரமபதம் என்று கூறப்படுவது போல. இதை ‘ராகுவின் தலை’ அன்று கூறுவது போல ஏற்கவேண்டும். ராகு என்பது தலை பாகம், கேது என்பது வால் பாகம். இப்படி இருந்தாலும், ராகுவின் தலை என்று கூறுவது போல, சிவபுரம், விஷ்ணுவின் பரமபதம் ஆகியவை உபயோகிக்கப்படுகின்றன.

## பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே --- 64

> பாசமாம் – பந்தம், பற்றறுத்துப் – பிடிப்பை அறுத்து, பாரிக்கும் – காப்பாற்றும், ஆரியனே – மேன்மையானவனே
>
> பந்தத்தின் தலையை அறுத்து நம்மைக் காப்பாற்றும் மரியாதைக்குரியவர்.

பாசம் – பந்தம். பாஷ என்ற சொல்லிற்கு பொருள் கயறு. நம்மை பீடிக்கும் இந்த சம்சாரமே பந்தம், விஷயத்தில் உள்ள பற்று. பாசம் என்ற சொல்லிற்கு பற்று என்ற பொருளுள் இருந்தாலும், அடுத்து பற்றறுக்கும் என்று கூறுவதால் பந்தம் என்று மட்டும் ஏற்போம். **भिद्यते हृदय ग्रन्थि** ‘பித்யதே ஹ்ருதய கிரந்தி’ – நம்முடைய இதய முடிச்சுகள் அவிழ்கின்றன,

அறுக்கப்படுகிறது என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த சம்சாரதலையை அறுப்பதே மேன்மையான செயல். அப்படிப்பட்ட சம்சாரப் பிடிப்பை அறுத்துக் காப்பாற்றும் மேன்மையானவர் குருவே.

ஆரியன் என்பது முன்னுரையில் கண்டது போல மேன்மையானவர், மரியாதைக்குரியவர் என்ற பொருளில் இருக்கிறது. ஆரியர், திராவிடர் என்ற தவறான பொருளில் இல்லை.

## நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப் — 65

நேச அருள்புரிந்து - காரணமற்ற கருணை, நெஞ்சில் வஞ்சம் கெடப் – இதயத்தில் உள்ள அறியாமை நீங்க.

காரணமற்ற கருணையோடு, இதயத்தில் உள்ள அறியாமை நீங்க.

நலம் கலந்த அன்பு நேசம். காரணமற்ற கருணையே இங்கு நேச அருள். குருவினை குறித்து கூறப்படும் சொல் இது. குருவிற்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. ஈஸ்வரனும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாதவர். அம்மாவிற்கு குழந்தை நல்லாயிருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிச்சயம் உண்டு. ஆனால் ஈஸ்வரனுக்கு அதுவும் இல்லை. அவர் கடுநெஞ்சர் அல்லர். அவர் நம்முடைய கர்மத்திற்கு ஏற்றார்போலப் பலனைத் தருவதால். குருவிற்கு நிச்சயம் சிஷ்யன் ஆத்மஞானத்தை அடையவேண்டும் என்றும், தாயும் குழந்தை நன்றாக இருக்கத்தானே ஆசைப்படுகிறாள், அப்படியிருக்க குருவிற்கும் அம்மாவிற்கும் என்ன வேறுபாடு? வேறுபாடு உண்டு. ஆத்மாவை நாம் அடையவேண்டும் என்றோ அல்லது சிஷ்யன் அடையவேண்டும் என்றோ கருதுவது அம்மாவின் ஆசையைப் போல ஆசையாகாது. தாயின் ஆசை, இல்லாததை அடையவேண்டும் என்பது, ஆனால் ஆத்மாவை அடையவேண்டும் என்ற தன்னுடையதோ

குருவினுடைய ஆசையோ, உள்ளதை அடையவேண்டும் என்பது, அதனால் அது ஆசை என்று ஏற்பது இயலாது. இல்லாததை அடையவே ஆசை இருக்கமுடியும், இருப்பதை அடைய அல்ல. நம்முடைய கழுத்தில் உள்ள மாலை தொலைந்துவிட்டது என்ற பிரமையால் தோன்றும் மாலையை கண்டுபிடித்து அடையவேண்டும் என்பது ஆசை அல்ல.

மலங்கப் புலன்கள் ஐந்தும் வஞ்சனை செய்ய – அறியாமையை வஞ்சனை என்று கூறியதால். இந்த அறியாமையாகிய வஞ்சம் நீங்க. அப்படிப்பட்ட இந்த ஆத்ம-ஸ்வரூபமாகவே நாம் இருந்தாலும், இந்திரியங்கள் அதை விஷயமாக அறிவதால், நாம் வஞ்சிக்கப்படுகிறோம். இனி அந்த ஈஸ்வரன் பலவித விரோத நிலைகளை உள்ளவர் என்று கூறப்படுகிறது.

## பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே --- 66

பேராது நின்ற - பற்றற்று நின்ற, பெருங்கருணைப் பேராறே – முடிவில்லா ஓடும் கருணை.

செயலற்றவராகவும் செயலுடையவராகவும் இருப்பவர்.

பேராது என்றால் மாற்றமற்ற, நகராது, வழுவாது என்று பொருள். நாம் புலன்களின் சேட்டையால் விஷயமாக ஆத்மாவைப் பார்ப்பதால், அதன் உண்மையை அறியாமல் அறியாமையில் மூழ்கிவிடுகிறோம். ஆனால், ஈஸ்வரன் பற்றற்று இருப்பதால் அதனில் அகப்படுவதில்லை. அவர் எந்த செயலும் செய்யாதவராக இருக்கிறார்.

பெருங்கருணைப் பேராறே - தயா சிந்து, தயா அம்போதி என்பதாகக் கூறப்படுவது. ஆறு என்பது ஓடும் நீர்நிலையைக் கூறுவோம். அதாவது எப்போதும் ஓட்டம் என்ற செயல் செய்துகொண்டிருப்பது.

## ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே --- 67

ஆரா அமுதே – தெவிட்டாத அமுதம், அளவிலாப் பெம்மானே – முடிவில்லாத பெருமானே.

தீராத அமுதமே. முடிவிலாத பெருமானே.

அரா அமுதே - தேனார் அமுதே என்று கூறியது இங்கும் பொருந்தும். அதிகம் என்னவென்றால், இந்த அமுதம் பருகப் பருகத் தீராதது. தனக்கு அந்நியமானது தீரத்தான் செய்யும். ஆனால், இங்கு குடிப்பவர், குடிக்கப்படும் முறை, குடிக்கப்படுவது எல்லாம் அந்த ஆரா அமுதனான ஈஸ்வரனே. ஒரு வெல்லக்கட்டியில் மேலேயும், கீழேயும், நடுவிலேயும், என்று எல்லா பக்கத்திலேயும் மாற்றமற்றதான அதே இனிப்பு இருக்கிறது. அதுபோல இந்த பரமாத்மாவும் மாற்றமற்ற ஒருசுவையானவராக இருக்கிறார்.

அளவிலாப் பெம்மானே – முடிவிலாத பெருமானே. ‘ஆக்கம் அளவு இறுதி இல்லாய்’ என்று கூறப்பட்டது இங்கு நினைவு கொள்ளவேண்டும்.

## ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே --- 68

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே – நினைக்காதவர் உள்ளத்திலும் பிரகாஶிக்கும் ஸ்வரூபனே.

ஆத்மாவை குறித்து சிந்திக்காதவர் (தூக்க நிலையிலும்) மனத்திலும் பிரகாஶிப்பவர்.

ஓராதார் – நினைக்காதார். ஆத்மாவை அறிந்தாலும் அறியாவிட்டாலும், உணர்ந்தாலும் உணராவிட்டாலும், நினைத்தாலும் நினைக்காவிட்டலும் ஆத்மா எல்லோருடைய இதயத்திலும் பிரகாஶிக்கின்றது. கேனோபநிஷத் இதனையே

**प्रतिबोध विदितम् मतम्** 'பிரதிபோத விதிதம் மதம்' – ஒவ்வொரு எண்ணத்திலும் அறியப்படும் ஸ்வரூபம், என்கிறது. ஒவ்வொரு எண்ணமும் நான் என்றே தோன்றுகிறது. 'நான் தெரிந்தவன்', 'நான் தெரியாதவன்' முதலாக. இந்த 'நான்' ஆத்மாவின் ஸ்வரூபமே. கடோபநிஷத் **नैषा मतिः तर्केन अपनेया** 'நைஷா மதிர் தர்கென அபநேயா' – இந்த அறிவை தர்க்கத்தினால் நிராகரிக்க முடியாது, என்று கூறுகிறது. இங்கு காணப்படும் விஷயம் யாவும் 'இருத்தல்' உடையதாக இருக்கக் காரணம் ஆத்மாவே!

இராவணன் ஆகட்டும், கம்ஸன் ஆகட்டும் இவர்கள் ராமனையும் கிருஷ்ணனையும் அழிக்கவே தங்கள் வாழ்க்கை முழுதும் நினைத்தார்கள். அவர்களுக்கும் முக்தியை தந்தவர் ஈஸ்வரன். நல்லது கெட்டது, சரி தவறு என்பது நமக்கே, ஈஸ்வரனுக்கு இல்லை.

ஓராதார் உள்ளத்து – தூக்க நிலையிலும் பிரகாஶிப்பவனே. விழிப்பு மற்றும் கனவில் நாம் விஷயத்தைக் காண்பது அதன் அனுபவத்தை அடைவதும் பெரிதல்ல. ஆனால், தூக்கத்திலும் அனுபவமாக இருப்பவர் அவர். நாம் நல்ல தூக்கத்திலிருந்து விழித்த பின்னர், 'எனக்கு ஒன்றும் தெரியாது, நான் நன்றாகத் தூங்கினேன்' என்ற அனுபவத்தைக் கூறுகிறோம். அனுபவிக்க மனது இல்லாத தூக்க நிலையையும் அனுபவித்து நமக்குக் கூறுவது அந்த சாட்சியாக இருக்கும் ஆத்ம ஸ்வரூபமே.

## நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே --- 69

நீராய் உருக்கி – மனதை நீராய் உருக்கி, என் ஆருயிராய் நின்றானே – என்னுடைய உயிராக இருப்பவனே.

மனதை நீராய் உருக்கி, அதனில் பிரியாது இருப்பவனே.

நீராய் உருக்கி – என்னுடைய மனதை நீர் போல உருக்கி. கல் போன்ற என்னுடைய மனதை நீராய் உருக்கி. மனது திடமான

ஒரு பொருள் என்ற எண்ணம் நம்மில் பலருக்கும் உண்டு. மனது என்ன, எங்கே இருக்கிறது, எப்படிப்பட்டது என்று எல்லாம் கேட்டால், நம்மிடம் எந்த பதிலும் இல்லை. அப்படி மனது திடமானது என்ற நிலையிலிருந்து இப்போது மனது எண்ணங்களின் ஓட்டம் மட்டுமே என்று அறிந்தேன்.

அந்த எண்ணங்களின் ஓட்டம் பலவிதமாக இருந்த நிலையிலிருந்து, ஒரு எண்ணமாக, அகண்டாகார ஸ்வரூபமாக இப்போது மாறியது. என் ஆருயிராய் நின்றானே – என்னுடைய அதிக விருப்பத்திற்கு விஷயமாக இருப்பவனே. உபநிஷத் இதனையே **आत्मनस्तु कामाय सर्वम् प्रियम् भवति** ‘ஆத்மனஸ்து காமாய சர்வம் ப்ரியம் பவதி’ – ஆத்மாவினில் உள்ள ஆசையால் எல்லாம் விரும்பத்தக்கதாய் இருக்கிறது. நம்முடைய சொந்தங்களும், சொத்தும், சொந்த உடலில் உள்ள பாகங்களையும் இழக்கத் தயாராகவும் இருக்கிறோம், தான் அழியாதிருக்க.

## இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே — 70

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே – இன்பமும் துன்பமும் விஷயமாக இல்லாதவன், உள்ளவன்.

இன்பமும் துன்பமும் இல்லாதவனாக என்ற நிலை இருப்பவனே என்றும் ஆகலாம்.

இன்பம் துன்பம் தனக்கு அன்னியமாக இந்த ஆத்மாவுக்கு இல்லாததால் இன்பமும் துன்பமும் இல்லானே.

வரையறையாக ஆத்மாவைப் பார்க்கும் நிலையில் இன்பமும் துன்பமும் உள்ளவன். தன்னுடைய ஸ்வரூபத்தில் இல்லாதவன், வரையறை கூடிய தடஸ்தத்தில் இருப்பவன். காரண நிலையில் இல்லானே, காரிய நிலையில் உள்ளானே என்று பொருள்.

## அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய் --- 71

அன்பருக்கு அன்பனே – தாசருக்கும் தாசனாய், யாவையுமாய் அல்லையுமாய் – எல்லாமாகவும் ஒன்றும் ஆகாதவராகவும்.

அன்பருக்கு அன்பனாக. வரையறை எல்லாமாகவும், வரையறை இல்லாததாகவும்.

வைஷ்ணவத்தில் 'தாஸோ அஹம்' - அடியேன், 'தாஸ தாஸோ அஹம்' – அடியார்க்கும் அடியேன். சைவத்தில் 'அடியார்க்கும் அடியேன்' என்ற பிரயோகம் உள்ளது. ஆனால் இந்த ஆத்ம ஸ்வரூபமோ 'அன்பருக்கு அடியேன்', இதனையே அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்பதை விளக்கும்போது கூறினோம். பகவான் பகவத்கீதையில் **योगक्षेमम् वहाम्यहम्** 'யோக க்ஷேமம் வஹாம்யஹம்' – உன்னுடைய யோகத்தையும், க்ஷேமத்தையும் நான் கொண்டு வருகிறேன். இல்லாதது தருவது யோகம், இருப்பதை காப்பது க்ஷேமம். தன்னை காட்டிலும் அந்நியமானதை நாம் வெறுக்கலாம், ஆனால் தன்னை வெறுக்க இயலாது. அது மட்டுமல்லாது தான் தனக்கு 'பரமபிரேமாஸ்பதம்' – மிகவும் விருப்பத்திக்குரியது, என்று கூறினோம்.

யாவையுமாய் அல்லையுமாய் – எல்லாமாகவும் ஒன்றும் இல்லாததாகவும். வரையறை உள்ள நிலையில் எல்லாமாகவும். வரையறைக்குட்படாததால் இவை யாவும் அல்லாதவனாகவும். பார்க்கப்படுவது எல்லாமாகவும், அதன் இன்மையாகவும் அதிஷ்டான ஸ்வரூபமாய் இருப்பது ஈஸ்வரன். எல்லா வகையான ஏற்றிப்பார்த்த விஷயமாயும், அந்த ஏற்றிப்பார்த்தல் இல்லாத ஸ்வரூபமாகவும். களிமண் பானையில் இருக்கிறது, பானை களிமண்ணில் இல்லை.

வேதம் **मृत्तिका इत्येव सत्यम्** 'மிருத்திகா இத்யேவ சத்யம்' – களிமண் என்ற காரண நிலை மட்டுமே உண்மை.

## சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே --- 72

சோதியனே – பிரகாஶ ஸ்வரூபனே, துன்னிருளே – மிகவும் கனமான இருளே, தோன்றாப் பெருமையனே – விஷயமாக தோன்றாத, பெருமையுடையவன்.

அதிஷ்டானமாக இருக்கும் பிரகாஶ ஸ்வரூபனே. அதனில் ஏற்றிப்பார்க்கப்பட்ட மாயையான துன்னிருளே.

சோதியனே – பிரகாஶ ஸ்வரூபனே. தேசனே என்பதின் பொருள் இங்கும் ஏற்கப்படவேண்டும்.

துன்னிருளே – கனமான இருள். வேதம் **असत् वा इदम् अग्र आसीत्** 'அஸத் வா இதம் ஆக்ர ஆஸீத்' – இன்மையே, சிருஷ்டிக்கு முன்னர் இருந்தது, என்கிறது. இந்த தோற்றம் உண்டாகாத நிலையே இங்கு இருள் என்று கூறப்பட்டுள்ளது. மாயா ஆத்மாவை ஆச்ரயித்து இருக்கிறது, அந்த மாயா இன்மை ஸ்வரூபம் உடையது. அதனால் அந்த மாயா ஆத்மாவிற்கு அந்நியமானது இல்லை. ஏற்றிப்பார்ப்பது அதிஷ்டானத்திற்கு வேறானதாக இருத்தல் இயலாது.

தோன்றாப் பெருமையனே – பிறப்படையா மேன்மையானவனே.

பிறப்பு என்பது மாயையுடன் சேரும்போதே உண்டாகும். மாயையுடன் சம்பந்தம் இல்லாத 'மாசற்ற சோதி' என்றெல்லாம் கூறினோம். அதனால் இவருக்கு பிறப்பு இருக்க இயலாது. சிவனுக்கு – சக்தி, விஷ்ணுவிற்கு – விஷ்ணுமாயா, கண்ணனுக்கு – ராதா என்றெல்லாம் சகுண பிரம்மத்திற்கு

மாயையுடன் சம்பந்தம் இருக்கும். நிர்குண பிரம்மத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை. அதனால் ‘அஜ’ – பிறப்பற்றது, என்று வேதம் கூறுகிறது. தோற்றம் இல்லை என்பதால் அதை சார்ந்து இருக்கும் அழிவும் இல்லை.

## ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே --- 73

ஆதியனே – காரணமானவனே, அந்தம் – முடிவு, நடுவாகி – இடை, அல்லானே – இல்லாதவனே.

காரணமானவனே / துவக்கம் இல்லாதவனே, முடிவு இல்லாதவனே, இடையும் இல்லாதவனே.

ஆதியனே – துவக்கம் ஆகா இருப்பவனே. இப்படி ஏற்றால், அவர் காரண ஸ்வரூபமாக இருப்பவர் என்று பொருள். பிரம்மமே **अभिन्न निमित्त उपादान कारणम्** ‘அபின்ன நிமித்த உபாதான காரணம்’ – வேறற்றதான செயல் மற்றும் பொருள் காரணம். அதனால் ஆதியன். அல்லானே என்ற சொல்லை எல்லா வார்த்தைகளுடனும் சேர்த்தால், ஆதி இல்லானே – ‘அநாதி’ என்று பொருள். இங்கு விரோதமாக கூறப்படுவதால், நீயே காரணமாக இருந்தாலும், நீ இடை மற்றும் கடை இல்லாதவன்.

இதுவே ‘ஆக்கம் அளவு இறுதி இல்லாய்’ என்று கூறப்பட்டது.

## ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே -- 74

ஈர்த்து – கவர்ந்து, என்னை ஆட்கொண்ட – என்னை தடுத்தாட்கொண்டாய், எந்தை – காரணமானவரே, பெருமானே – என் தலைவனே.

செயலின்றி தன் இருத்தலால் என்னைக் கவர்ந்து, என் அறியாமை நீக்கி அறிவைத் தந்து ஆட்கொண்ட, எனக்குக் காரணமானவனே, என் தலைவனே.

ஈர்த்து – என்னைக் கவர்ந்து. என்னுடைய முன்வினை பக்குவமாகிப் பயனளிக்க, அதன் காரணத்தால் என்னை தன்னுடைய ஸ்வரூபத்தின்பால் ஈர்த்து. சில இடத்தில் சப்தத்தினால் ஈர்க்கப்படுகிறோம், சில இடங்களில் வாசனையினால், மற்ற இடங்களில் அழகினால். அப்படி அவர் ஈர்ப்பது என்ற செயலைச் செய்வது இல்லை, செயலற்றவர் என்பதை 'பேறாது நின்ற' என்று கூறினோம். எவ்வாறு காந்தம் தன் இடத்தில் இருந்துகொண்டு இரும்பினைத் தன்பால் கவர்கிறதோ அவ்வாறு, தன்பால் கவர்ந்து.

ஆட்கொண்ட – தடுத்து ஆட்கொண்ட. நம்மை அறியாமையிலிருந்து தடுத்து, ஞான உபதேசத்தினால், ஆட்கொண்டவர். நம்முடைய தனித்தன்மை நீங்கி, முழுவதும் ஈஸ்வரன் இருக்கும் நிலை.

எந்தை – எனக்கு காரணமானவரே. 'ஆதியனே' என்று எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பதால் என் தந்தை. **त्वमेव माता च पिता त्वमेव** 'த்வமேவ மாதா ச பிதா த்வமேவ' – தாயும் நீயே தந்தையும் நீயே, என்று குருவைக் குறித்துக் கூறப்படுகிறது.

பெருமானே – தலைவனே. எல்லாவற்றினையும் கட்டுப்படுத்தி வழிநடத்திச் செல்வதால் தலைவன்.

## கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின் — 75

கூர்த்த – தெளிந்த, மெய் ஞானத்தால் – ஆத்மாவின் அறிவினால், கொண்டு உணர்வார் – நிலைப்படுத்தி அறிபவர், தம்கருத்தின் – அவர்களுடைய மனதில் (புத்தியில்).

தெளிந்த ஆத்மஞானத்தில் நிலைப்பாடு அடைந்தவர்.

‘மெய் ஞானத்தால்’ என்று மட்டும் கூறாது அதற்கு ஒரு சிறப்பை கூறுகிறார் ‘கூர்த்த’. ஆத்மாவின் ஞானம் சந்தேகம் மற்றும் தவறானதாக, ஐயம் திரிபற, இருப்பதை கூர்த்த என்கிற சிறப்பைக் கொண்டும். ஞானத்தால் என்பதற்கு ‘மெய்’ என்ற சிறப்பு, ஞானம் ‘யதார்த்தம்’ - சரியானது மற்றும் ‘அயதார்த்தம்’ - தவறானது என்று இரண்டு வகை. இதில் தவறான அறிவை நீக்க, மெய் என்ற சிறப்பு. அதாவது, தெளிந்த சரியான அறிவு. கூர்த்த – கூர்மையான, வேதமும் **दृश्यते तु अग्रया बुद्ध्या** ‘த்ரிஷ்யதே து அக்ரயா புத்யா’ – இது கூர்மையான, ஒருமுகப்பட்ட அறிவினால் மட்டுமே அறியப்படும், பகுத்தறிவு என்று பொருள். விஞ்ஞானிகளுக்கும் இந்த பகுத்தறியும் அறிவு இருக்கிறது, ஆனால் அது வெளி விஷயங்களைப் பகுக்கும் அறிவு, இங்கு கூறப்படுவதோ பகுபடாத ஆத்மாவை, மெய் ஞானம், குறித்த அறிவு.

மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவர் என்பது ‘எண்ணுதற்கு எட்டா’ என்று கூறப்பட நிலையில் இங்கு ‘கொண்டு உணர்வார் தம்கருத்தில்’ என்று கூறுகிறார். முதலில் கேட்டல் (சிரவணம்) மூலம் மனதில் கொள்ளவேண்டும். அதன் பின்னர், சிந்தித்தல் மற்றும் தெளிதல் (மனனம், நிதித்யாசனம்) மூலம் உணரவேண்டும்.

பரமாத்மாவின், ஈஸ்வரனின் பெருமைகளை இங்கிருந்து விளக்குகிறார்.

## நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே --- 76

நோக்கரிய நோக்கே – பார்வைக்கு அரிதான பார்வையே, நுணுக்கரிய நுண்ணுணர்வே – பிரித்தறிய முடியாத அனுபவம்.

பார்வைக்கு விஷயமாகாத பார்வையே, பிரித்தறிய இயலாத அனுபவமே.

நோக்கரிய நோக்கே – பார்வைக்கு அரியதான பார்வையே. கேநோபநிஷத்தில் **यच्चक्षुषा न पश्यति येन चक्षूम्षि पश्यति तदेव ब्रह्म त्वम् विद्धि नेदम् यदिदम् उपासते** 'யச்சக்ஷுஷா ந பஷ்யதி ஏன சக்ஷூம்ஷி பஷ்யதி ததேவ பிரம்ம நேதம் யதிதம் உபாசதே' – எது கண்களால் பார்க்கமுடியாதோ, கண்களை எது பார்க்கிறதோ அதுவே பிரம்மம், நீ உபாசனை செய்வது அல்ல, என்று முன்பு கண்டோம். பார்வைக்கு விஷயமாகாது, விஷயமாவது பிரம்மமல்ல.

நுணுக்கரிய நுண்ணுணர்வே – பிரித்தறிய முடியாத அனுபவம். ஈஸ்வரன் அனுபவ ஸ்வரூபம். அதனை அனுபவிப்பவர், அனுபவிக்கும் முறை, அனுபவிக்கபடுவது என்ற வேற்றுமை இல்லாமல், இருப்பதாக அறிவதே இங்கு அனுபவ ஸ்வரூபன் என்று கூறுகிறோம்.

இங்கு உள்ளது எல்லாம் எதனால் செயல்படுகிறதோ, அந்த ஈஸ்வரன் எங்கு இருப்பார், அவருடைய ஸ்வரூபம் என்ன என்று கூறுகிறார். இங்கு கூறப்படும் பல சிறப்புகள் முன்னமே கூறப்பட்ட விஷயங்களே என்பதால் அதிகம் விளக்கம் தேவையில்லை.

## போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே ---77

போக்கும் – செல்லுதல், வரவும் – வருதல், புணர்வும் – மாற்றம், இலாப் – இல்லாத, புண்ணியனே – புண்ணிய ஸ்வரூபன்.

போவதும், வருவதும், மாறுவதும் இல்லாத, பாபம் அற்றவனே.

பகவான் ரமணர் ‘போக்கும் வரவும் இலாப் பொதுவெளி வீட்டில்’ என்றும், தாயுமானவர் ‘அங்கிங்கெனாதபடிக்கு’ என்கிறார். எங்கும் வியாபித்திருப்பதும், தன்னைத் தவிர வேறொன்றும் இல்லாததும் இந்த பிரம்மம். அதனால், பிரம்மம் மட்டும் அல்லாது, பிரம்மத்தை உணர்ந்தவரும் எங்கும் செல்வது கிடையாது. வேதம் **न तस्य प्राणा उत्क्रामन्ति** ‘ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி’ – அவருடைய பிராணன் எங்கும் செல்வதில்லை என்கிறது. இப்படி, போக்கும் வரவும் இல்லாதிருந்தால், அங்கு மாற்றம் நிச்சயம் இருக்கும் என்ற சந்தேகத்தை, புணர்வும் இலா – மாற்றம் இல்லாத, என்று நீக்குகிறார். மாற்றம் வேறொன்றால் தூண்டப்பட்டால் உண்டாவது, பிரமத்தை தவிர வேறொன்றும் இல்லாத நிலையில், தூண்ட ஒன்றும் இல்லை, மாற்றம் உண்டாகாது.

புண்ணியனே – புண்ணிய ஸ்வரூபனே. புண்ணியம் அல்லது பாவம் இரண்டும் கர்மங்களே, அதனால் தடைகள். இதனால் பிறப்பிறப்பு உண்டாகும். இந்த காரணத்தாலேயே, கிருஷ்ணன் கர்ணனிடம் அவனுடைய புண்ணியத்தை கடைசியில் தானமாக பெற்றான். இங்கு புண்ணிய ஸ்வரூபன் என்றாலும், அது பாவங்கள் அற்ற நிலையைக் குறிப்பது. விமலா, நிமலா என்பதற்கு வேறொரு பெயர்.

## காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே --- 78

> காக்கும் என் காவலனே – நம்முடைய க்ஷேமத்தை காப்பவனே, காண்பரிய பேரொளியே – கண்களால் காண இயலாத பெரிய பிரகாஶமே.

> நம்முடைய க்ஷேமத்தை காப்பவரே. ஊனக்கண்களால் காண இயலாதவர்.

காக்கும் என் காவலனே – என்னை காக்கும் என் காவலனே. ஜீவர்களை காப்பவர். ‘கோவிந்தன்’ என்ற சொல்லிற்கும்

இதுவே பொருள், **गाम् विन्दति पाति** ‘காம் விந்ததி பாதி’ – பசுக்களை, ஜீவனை, புலன்களை காப்பவன். இருப்பதை காப்பது மட்டும் அல்லாமல், இல்லாததைத் தருபவரும் இவர்.

காண்பரிய பேரொளியே – காண்பதற்கு கடினமான பேரொளி. பிரகாஶ ஸ்வரூபமான ஈஸ்வரனை, நம்முடைய ஊனக்கண்களால் காண்பது இயலாது, அது ஞானகண்ணால் மட்டும் அறியமுடியும். அதனால் பகவான் கீதையில் **दिव्यम् ददामि ते चक्षुः** ‘திவ்யாம் ததாமி தே சக்ஷு’ – உனக்கு நான் திவ்யமான கண்களை தருகிறேன். சூரிய ஒளியே நாம் காண இயலாத அளவு பிரகாஶமாக இருக்கும்போது, அதற்கு பிரகாஶத்தைத் தரும் பிரம்மம், அதனைக்காட்டிலும் பிரகாஶமாக இருப்பது என்பது தெளிவு. சூரிய ஒளியில் விளக்கு ஒளி கண்களுக்கு புலப்படுவது இல்லை, அதுபோல இதன் பிரகாஶத்தில் வேறொன்றும் அறியப்படுவதில்லை என்பதால், காண்பரிய பேரொளி எனக்கூறப்பட்டது.

## ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற --- 79

ஆற்றின்ப வெள்ளமே – வரையறையற்ற ஆனந்தம், அத்தா - தந்தையே, மிக்காய் நின்ற – மிகுதியாய் நின்ற.

வரையறையற்ற ஆனந்தமே, நிராகரிக்க இல்லாத நிலையிளிருப்பவனே.

ஆற்றின்ப வெள்ளமே – வரையறை அற்ற ஆனந்தமே. ஜீவ நதி வற்றாது துவங்கும் இடத்திலிருந்து முடியும் வரை தடை இல்லாமல் செல்லுவது. அதுபோல, இந்த ஆனந்தம் வேறெதனாலும் தடைபடாமல் அனுபவமாகிறது.

அத்தா – தந்தை. ஆத்தா என்றால் தாய், அத்தா என்றால் தந்தை. காரணமானவர் என்று பொருள்.

மிக்காய் நின்ற – மிகுதியாய் இருப்பவர். புருஷ சூக்தம் **अत्यतिष्ठत् दशाङ्गुलम्** 'அத்யதிஷ்டத் தஷாங்குலம்' – அது இந்த சிருஷ்டியை காட்டிலும் 10 அங்குலம் மிகுதியாய் உள்ளது, **पादोस्य सर्वा भूतानि त्रिपादस्य अमृतम् दिवि** 'பாதோஸ்ய சர்வா பூதானி திரிபாதாஸ்ய அம்ருதம்திவி' – ஒரு கால் பகுதியில் இந்த உலகங்களும், மற்ற மூன்று பாதங்களில் மரணமற்ற இந்த பரமாத்மா உள்ளது, என்று கூறுகிறது. உலகைக் காட்டிலும் 10 அங்குலம் அதிக அளவு பிரம்மத்தினுடையது என்று கூறுவது தவறு, இங்கு இந்த ஸ்ருஷ்டியால் வரையறுக்கப்படாதவர் என்பது பொருள்.

அல்லது,

மிக்காய் நின்ற - நிராகரிக்கப்பட இயலாத. உபநிஷத்தில் இந்த பிரம்மம் **नेति नेति** 'நேதி நேதி' – இது இல்லை, இது இல்லை, என்பது மூலம் அறியப்படும் என்கிறது. அதாவது, ஸ்தூலமான ஸ்ருஷ்டி இல்லை, சூட்சுமமான ஸ்ருஷ்டி இல்லை, என்று எல்லாவற்றையும் நீக்கிய பின்னர், நீக்கப்பட முடியாத நிலையில் இருக்கும் அந்த இருப்பே பிரம்மம்.

## தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய் — 80

தோற்றச் – தோற்றத்திற்குக் காரணமான, சுடர் ஒளியாய்ச் – பிரகாஶமாய், சொல்லாத நுண்ணுணர்வாய் - அனுபவமாய்.

தானே ஒளிர்கின்றதாய். கூறப்பட இயலாத சூக்ஷ்மமான உணர்வாய்.

தானே ஒளிர்கின்றது என்று கூறும்போது அதன் லக்ஷணமாக **अवेद्यत्वे सति अपरोक्ष व्यवहार योग्यत्वम्** 'அவேத்யத்வே சதி அபரோக்ஷ வ்யவஹார யோக்யத்வம் அனிர்வசநீயம்' –

விஷயமாக ஆகா நிலையில், நேரிடை அனுபவத்திற்கு விஷயமாவது, கூறப்பட இயலாதது. 80 வது வரி, இந்த லக்ஷணத்தை கூறுகிறது.

சொல்லமுடியாத ஒரு விஷயம் இங்கு இல்லை என்றால், அது நேரிடை அனுபவத்திற்கு விஷயம் ஆவது என்று கூறி அது அனுபவஸ்வரூபம் என்கிறது. எப்படிப்பட்டது அது என்ற கேள்விக்கு விளக்கப்பட முடியாதது என்பதே பதில்.

இந்த உலகத்தில் உள்ள எந்த பொருளும் விளக்கப்பட முடியாதது என்பது வேதாந்த முடிவு. கூறப்படும் விஷயம் வேறொன்றைச் சார்ந்ததாகவே நாம் அறிதல் இயலும். அப்படிப்பட்ட ஒரு விவகாரத்திற்கு நாம் அடிமை ஆனதால், நாம் மற்றவர் சொல்லுவதை அனுமானம் மூலம் அறிகிறோம். உதாரணத்திற்கு, பானை 'கம்பு கிரீவாதிமத்வ' - வாய், கழுத்து மற்றும் உருளையான ஒரு பாகம் உடையது, என்று குறிக்கப்படுகிறது. வாய் என்றால் என்ன என்ற கேள்விக்கு ஒரு விளக்கம், அதனை குறித்த கேள்விக்கு வேறொன்று என்று முடிவில்லாது செல்லும். நாம் இந்த இடியாப்ப (இப்படிப்பட்ட) சிக்கலைத் தவிர்க்க, மேலே கூறிய இலக்கணத்தை ஏற்கிறோம். 'நுணுக்கரிய நுண்ணறிவே' என்று கூறப்பட்டது.

## மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம் --- 81

மாற்றமாம் - மாறிக்கொண்டிருக்கும், வையகத்தின் – ஸ்ருஷ்டியின், வெவ்வேறே – பலவாறாக, வந்து அறிவாம் – வரும் எண்ணமாக

மனதின் மாற்றமான இந்த ஸ்ருஷ்டியின் பலவாறாக வரும் அறிவில்.

மாற்றமாம் வையகத்தின் – மாறிக்கொண்டிருக்கும் இந்த மனதின். உலகம் மனதின் எண்ண அலைகளை காட்டிலும் வேறல்ல, என்கிறது வேதாந்தம். தூக்கத்தில் மனது இல்லாத நிலையில், இந்த உலகம் காணப்படுவது இல்லை. அதுபோல, விழிப்பு மற்றும் கனவில் மனது உள்ளது, உலகம் உள்ளது, என்பது சான்று.

## தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள் --- 82

தேற்றனே - பகுத்தறிவு, தேற்றத் தெளிவே – அந்த பகுத்தறிவின் தெளிவே, என் சிந்தனை உள் – என்னுடைய புத்தியில் .

எனது புத்தியில் விசாரமும், அதன் பலனான தெளிவான அறிவும்.

தேற்றனே – பகுத்தறிவு. இந்த பகுத்தறிவு சாஸ்திரத்தினைக் கேட்ட பின்பு செய்யும் விசாரத்தால் மட்டுமே வருவது. அப்படி விசாரத்தின் பலனாக அறிவு உண்டானாலும், அது சரியான அறிவாகவே இருக்கும் என்று எந்த நியதியும் இல்லை. நன்றாக விசாரித்த பின்னரும், நாம் தவறான முடிவுகளை எடுத்தது அறிவோம். அதனால், தேற்றத் தெளிவே - இந்த விசாரத்தின் முடிவான தெளிவான அறிவே.

ஆற்றின்ப வெள்ளமே என்றார், அந்த ஆறு தடையில்லாமல் ஓட, அது கடலை சேர்ந்தால் மட்டும் போதாது. அங்கிருந்து நீராவியாக மீண்டும் மேகமாய் மாறி, மழையாய் பொழிந்து அது பூமியில் இறங்கவேண்டும்.

## ஊற்றான உண்ணார் அமுதே உடையானே --- 83

ஊற்றான – ஆதாரம், உண்ணார் அமுதே – தெவிட்டாத மரணமற்ற நிலை, உடையானே - உரிமையாளன்.

ஆதாரமாக இருக்கும் தெவிட்டாத மரணமற்ற ஸ்வரூபனே.

ஆற்றின்ப வெள்ளத்திற்கும், பெருங்கருணை பேராற்றிர்க்கும் ஆதாரமாக இருக்கும் ஊற்று போல. இந்த பலவகையான ஸ்ருஷ்டிக்கு ஆதாரமாக, அடிப்படையாக இருப்பது இந்த ஈஸ்வரன்.

உண்ணார் அமுதே – மரணமற்ற தன்மையே.

மாற்றமற்ற மரணமில்லா நிலை. தேனார் அமுதே, ஆரா அமுதே என்றெல்லாம் இதுவே கூறப்பட்டது.

முன்னர் ஆற்றின்ப வெள்ளமே, இப்போது அதற்கு ஊற்றான உண்ணார் அமுதே.

## வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப --- 84

வேற்று – அந்நியமான, விகார – விகாரமான, விடக் குடம்பின் – விஷமான உடம்பில், உள்கிடப்ப – உள்ளே இருக்க.

தன்னைக் காட்டிலும் அந்நியமானதின் மாற்றமான விஷ உடலில் இருக்க.

வேற்று – தனக்கு அந்நியமான. விகார – மாற்றங்களான. தனக்கு அந்நியமாக இருந்தால், அது மாற்றமே ஆகும். அப்படிப்பட்ட தனக்கு அந்நியமானது, தன்னை தன் உண்மை நிலையிலிருந்து வேறுபடுத்துவது என்பதால், அது விஷம். விவேகசூடாமணியில் **विषयम् विश तुल्यो हि** ‘விஷயம் விஷ துல்யோ ஹி’ – விஷயங்கள் விஷத்திற்கு ஸமமானதே ஆகும், என்று கூறியுள்ளது. அப்படிப்பட்ட விடக் குடம்பின் – விஷமான உடம்பில். உடம்பு என்பது பலவகையான

வரையறைகள். இந்த உடல்கள் பலவகை என்பது 'புல்லாகிப் பூடாகி' என்ற இடத்தில் பலவாறு கூறினார்.

## ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று — 85

ஆற்றேன் – முடியாமல் ஆற்றாமையால் உளறுகிறேன், எம் ஐயா - என் தலைவனே, அரனே – பிறப்பை அறுப்பவனே, ஓ என்றென்று – ஓ என்று பலவாறு.

தனக்கு சம்சாரத்தினால் உண்டாகும் கஷ்டம் தாங்காமல், பலவாறு ஒருவர் உளறுகிறார்.

சம்சாரத்தின் தாபத்தைத் தாங்க முடியாமல், ஆற்றாமையால் பலவகையாக இந்த ஜீவர்கள் புலம்புகின்றனர். எவ்வாறெல்லாம் என்று அபிநயம் செய்து காண்பிக்கிறார்.

அரன் என்பது ஹரன் என்பதின் மருஉ. இந்த சொல், हृञ् हरणे 'ஹ்ருஞ் ஹரனே' – அழிப்பவன், என்பதிலிருந்து உண்டாவது. அதாவது, சம்சார துன்பத்தை அழிப்பவன் என்று பொருள்.

மிகவும் துன்பத்தில் இருக்கும் ஒருவனின் பிதற்றல் இங்கு காணமுடிகிறது. சம்சாரத்தினால் பீடிக்கப்பட்டவன் இப்படி அதனைத் துன்பமயமாகக் கண்டால் மட்டுமே அவனுக்கு அதனிலிருந்து விடிவு உண்டாகும். நாம் மூச்சுவிடுவதும் கூட சிரமமானதாக உணரவேண்டும். அப்படிப்பட்ட வைராக்கியத்தை உணர்த்தவே பலவாறு புலம்புகிறார்.

என்றென்று என்பது இரட்டைக் கிளவி. இப்படிப் பலவாறு என்று பொருள்.

## போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார் --- 86

போற்றிப் – சரணடைதல், புகழ்ந்திருந்து – மேன்மை உணர்ந்து, பொய்கெட்டு – அறியாமை நீங்கி, மெய் ஆனார் – பிரம்ம ஸ்வரூபமானார்.

ஆத்மாவை சரணடைந்து, அறியாமை நீங்கி பிரம்ம ஸ்வரூபமானார்.

இந்த சம்சார துன்பத்தை அனுபவித்து, அதன் துன்பம் தாங்காமல் இதிலிருந்து தப்ப வழி தேடி, முடிவில் ஆத்மஸ்வரூபமான குருவை அடைந்து அவரைச் சரணடைந்து அவர் மேன்மையை உணர்ந்து. பொய்கெட்டு – அறியாமை. இந்த சம்சார சக்கிரத்திற்கு காரணமான அவித்தை - அறியாமை, ஆத்மஞானத்தால் நீங்கி. மெய் ஆனார் – பிரம்ம ஸ்வரூபமானார். வேதம் **ब्रह्मविद् ब्रह्मैव भवति** ‘பிரம்மவித் பிரம்மைவ பவதி’, **ब्रह्म वेद ब्रह्मैव भवति** ‘பிரம்மவேத பிரம்மைவ பவதி’, **ब्रह्मविद् आप्नोति परम्** ‘பிரம்மவித் ஆப்நோதி பரம்’ முதலியதாக பிரம்மத்தை உணர்ந்தவர் அந்த பிரம்மமே அல்லாது வேறில்லை என்று ஓங்கி உரைக்கின்றது.

‘பொய் கெட்டு மெய் ஆனார்’ என்று பொதுவாக நாம் எல்லோரும் அடையக்கூடிய நிலை என்பதை கூறுகிறார். இதன்மூலம் இது மாணிக்கவாசகர் தனக்கு ஆத்மஞானத்திற்காகக் கூறப்பட்டது இல்லை என்பது தெளிவாகிறது.

அறியாமை அறிவினால் அல்லாமல் வேறொன்றினாலும் நீங்காது, **ज्ञानात् एव तु कैवल्यम्** ‘ஞாநாத் ஏவ து கைவல்யம்’ என்கிறது வேதமும்.

அறிவு ஸ்வரூபமான ஆத்மாவில் அறியாமை ஏறியிருந்தது. அந்த அறியாமை அறிவினால் நீங்குகிறது. அதுபோல, அந்த அறியாமை மீண்டும் அறிவை பீடிக்காது என்பது என்ன நிச்சயம்? இந்த கேள்விக்கு பதில் அளிக்கும் விதமாக

## மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே --- 87

மீட்டு இங்கு வந்து – மீண்டும் அவரை அறிவிலிருந்து மீட்டு அறியாமை புகுத்தி, வினைப்பிறவி சாராமே – கர்மத்தினால் உண்டாகும் பிறப்பிறப்பு உண்டாவது இல்லை.

ஞானத்திலிருந்து மீண்டும் அவர் அறியாமையை அடைந்து, கர்மாவினால் உண்டாகும் பிறவியை அடையமாட்டார்.

வேதம், ஞானம் அடைந்தவர் மீண்டும் அறியாமையில் விழுவதில்லை என்ற விஷயத்தை இருமுறை கூறி மிகவும் தெளிவாக்குகிறது, **न च स पुनरावर्तते न च स पुनरावर्तते** 'ந ச ஸ புனராவர்ததே ந ச ஸ புனராவர்ததே' – அவர் மீண்டும் பிறப்பதில்லை, அவர் மீண்டும் பிறப்பதில்லை, **न तस्य प्राणा उत्क्रामन्ति इह एव समवलीयन्ते** 'ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி இஹ ஏவ சமவலீயந்தே' – அவருடைய பிராணன் வேறு நிலைகளை அடைவதில்லை அது இங்கேயே லயமடைகிறது, என்று. ஞானியின் உடல் – புலன்கள் எந்தந்த தத்துவத்திலிருந்து உண்டாயிற்றோ அதிலேயே அவை லயமடைகின்றது.

நமக்கு பானை முதலிய விஷயத்தின் அறியாமை அநாதி காலமாக இருக்கலாம், ஆனால் அந்த அறிவு உண்டான பின்னர், அது எதனாலும் நீங்காது. ஞானிகளுக்கு பிறப்பிறப்பு இல்லை என்று கூறியதால், அடுத்த பிறவியில் பானை அறியாமை உண்டாவது போல ஆத்மாவை குறித்த அறியாமையும் வரும் என்ற சந்தேகம் நிவர்த்திக்கப்பட்டது. ஞானம் அறியாமையை முழுவதுமாக நிரந்தரமாக நீக்கும் என்று கூறினோம்.

மீண்டும் அவர் எப்படிபட்டவர் என்பதை கூறுகிறார், இங்கு எத்தனை முறை ஆத்மாவினை, குருவினை குறித்து கூறினாலும் முழுமை பெறாது என்பதை காட்டுகிறார்.

## கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே --- 88

கள்ளப் – நம்மை ஏமாற்றும், புலக்குரம்பைக் – புலன் என்கிற குதிரையை, கட்டழிக்க வல்லானே – நம்முடனான சம்பந்தத்தை அழிக்க தகுதியுடையவன்.

நம்மை ஏமாற்றும், கட்டுக்கடங்காத புலன்களை அழிக்க ஆற்றலுடையவன்.

கள்ளப் - நம்மை ஏமாற்றும், அறியாமையில் தள்ளும். பகவான் ரமணர் ‘ஐம்புலக்கள்வர் அகத்தினுள் புகும்போது’ என்று கூறுகிறார். குரம்பை என்பது பசு வகை. கட்டழிக்க – ‘மாயப் பிறப்பு அறுக்கும்’ எனுமிடத்தில் அழிக்க, அறுக்க என்பதின் பொருள் கண்டோம். உண்மையும் பொய்யும் கலந்த கலப்பே இந்த உலகம், இதை **सत्यानृते मिथुनी कृत्य** ‘சத்யானுருதே மிதுநீ கிருத்ய’ என்கின்றனர்.

## நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே --- 89

நள் இருளில் - அறியாமையில், நட்டம் பயின்று ஆடும் நாதனே – ஆனந்த நடனத்தை புரிகிறான்.

எது ஜீவர்களுக்கு அறியாமையாக இருக்கிறதோ, அதனில் ஈஸ்வரன் விழித்துகொண்டிருக்கிறான்.

நள் இருளில் – அறியாமையில். பகவான் பகவத்கீதையில் கூறுகிறார் **या निशा सर्व भूतानाम् तस्मिन् जाग्रति सम्यमी** ‘யா நிஷா சர்வ பூதானாம் தஸ்மின் ஜாக்ரதி சம்யமீ’ – மற்ற ஜீவர்களுக்கு எது இருளோ, அதில் யோகி விழித்திருப்பான். நமக்கு அறியாமையாக இருப்பது ஈஸ்வரனுக்கு அறிவு. எங்கு நாம் விஷயமாக பார்க்கிறோமோ அங்கு ஈஸ்வரன் பிரம்மத்தையே பார்க்கிறான். நாம் எந்த உலகத்தைப் பார்க்கிறோமோ, அந்த

விழிப்பு நிலையில், ஈஸ்வரன் அதனில் வ்யவஹார நிலையைப் பார்க்காமல், பிரம்மத்தையே காண்கிறார்.

## தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே — 90

> தில்லை உள் கூத்தனே – தில்லையில் நடனம் ஆடுபவனே, தென்பாண்டி நாட்டானே – மரணத்தை ஆட்சி புரிபவனே.

> சிதாகாஷத்தில் நடனம் ஆடுபவன். ஞானத்தில் மேன்மையான அட்சிபுரிபவன்.

தில்லை உள் கூத்தனே – தில்லை எனும் சிதம்பரத்தில் நடனம் ஆடுபவர், என்று எடுக்கலாம். தில்லையில் சிறப்பு சிதாகாஷம், ஞான ஆகாயம். அந்த சிதாகாஷம் நம்முடைய இதய குகையில் இருப்பது என்று கூறினோம். அந்த இதயகுகையில் இருப்பது பிரம்மமே, **यावान् वा अयम् आकाशः तावान् अन्तर्हृदय आकाशः** 'யாவான் வா அயம் ஆகாஷ தாவான் அந்தர் ஹ்ருதய ஆகாஷ' – இந்த வெளிப்புற ஆகாயம் எவ்வளவு உள்ளதோ அவ்வளவு இந்த உட்புற ஆகாயம், என்று வேதம் கூறுகிறது. சித் – அறிவு, ஆகாஷ – ஸ்வரூபம்.

தென் பாண்டி நாட்டானே – தென் திசை கடவுள், தக்ஷிணாமூர்த்தி. தக்ஷிண என்றால் அறிவு என்று பொருள். பாண்டி என்றால் பண்டா – ஞானம், உள்ளவர் என்று பொருள். அந்த ஞானபுரியில் ஆட்சி செய்பவன் என்று பொருள். தென்திசை மரணத்தை குறிப்பது, மரணத்தை ஆட்சி செய்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது, மரணமற்ற நிலை அருளுபவர். தனக்கு அன்னியமாக மற்றதைக் காண்பவன் மரணத்தையே அடைவான். வேதாந்தமும் **स मृत्योः मृत्युम् आप्नोति य इह नानेव पश्यति** 'ஸ ம்ருத்யோ ம்ருத்யும் ஆப்நோதி ய இஹ நானேவ பஷ்யதி' – பலது உள்ளது போல எவர் காண்கிறாரோ, அவர்

மரணத்திலிருந்து மரணத்தை அடைகிறார், **उदरम् अन्तरम् कुरुते अथ तस्य भयम् भवति** ‘உதரம் அந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி’ – சிறிதளவு கூட வேற்றுமையைக் கண்டால், அவனுக்கு அதனால் பயம் உண்டாகிறது, என்று பலவாறு கூறுகிறது.

## அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று --- 91

அல்லல் பிறவி – துன்பமயமான பிறவியை, அறுப்பானே - நீக்குபவன், ஓ என்று – அவனை பற்றிக் கூற இயலாததால், ஓ.

துன்பமயமான பிறவியை நீக்குபவன், அவனைப்பற்றி இவ்வளவு முயற்சித்தும் முழுதும் கூற இயலாததால், ஓ என்று கூவல்.

பலவகைத் துன்பங்கள் நிறைந்த பிறவியை நீக்குபவன். எவ்வளவு சொன்னாலும் அவனைப் பற்றிக் கூறுதல் இயலாது என்பதால் ஓ என்று கூவுகிறார். ஏன் கூற இயலாது? சொற்பொருளாக அவனை அறிய இயலாது, குறிப்புப் பொருளாக மட்டுமே அறிய முடியும் என்பதால். அதுவும், ‘மிக்காய் நின்ற’ என்று கூறியது போல நிராகரிக்க இயலாத நிலையாக மட்டுமே கூறுவது இயலும்.

## சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ் --- 92

சொல்லற்கு அரியானைச் – சொல்லுவதற்கு இயலாதவனை, சொல்லித் – குறித்து கூறி, திருவடிக்கீழ் – அவனுடைய ஸ்வரூபத்தில் நிலைப்பட்டு.

எவ்வளவு சொன்னாலும் வார்த்தைக்கு விஷயமாகதவனை, குறித்து சொல்லி, அவனை சரணடைவார்.

எவ்வாறு கூறினாலும், வாக்கிற்கு எட்டாதவனைக் குறித்து இங்கு கூறிய விஷயங்களின் குறிப்பை உணர்ந்து, கற்றுணர்ந்த ஆசானிடம் கற்று. திருவடிகீழ் - அவன் ஸ்வரூபத்தில் நிலைப்பட்டு.

## சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் --- 93

இங்கு கூறப்பட்ட சிவபுராணம் என்ற பாட்டின் பொருளை அறிந்து கூறுபவர்கள்.

ஓதுவது இரண்டுவகை, ஒன்று பொருள் உணராமல் ஓதுவது, மற்றொன்று பொருளை உணர்ந்து ஓதுவது. முதல் வகையான பொருள் உணராமல் படித்தால், அதனால் மனது தூய்மை அடைந்து, சாஸ்திரத்தை கேட்கத் தகுதி அடைந்து, குருவிடம் முறையாக வேதாந்தம் படிக்க சந்தர்ப்பம் உண்டாகும். இல்லையென்றால், இங்கிருந்து அந்த புண்ணியத்தால் சுவர்க்கம் முதலிய மேன்மையான உலகங்களை அடைந்து, மீண்டும் இந்த உலகத்தில் நல்ல நிலையில் பிறப்படைந்து, வேதாந்த ஞானம் அடைய தகுதி அடைவர். இது அல்லாமல், ஓதுவது இடையறாமல் இருந்தால், முழு ஷ்ரத்தையுடன் இருந்தது என்றால், அந்த சகுண பிரம்மத்தை அடையலாம்.

ஒன்றும் செயாதிருப்பதற்கு ஓதுவது மேல், ஓதுவதிலும் பொருள் உணர்ந்து ஒதுவது சாலச்சிறந்தது.

## செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப் --- 94

செல்வர் – அடைவர், சிவபுரத்தின் உள்ளார் – சிவபுரத்தில் இருப்பவர், சிவன் அடிக்கீழ்ப் – சிவன் ஸ்வரூபத்தில்

சிவபுரத்தில் இருக்கும் சிவ ஸ்வரூபத்திற்குச் செல்வர்.

சிவபுரமும் சிவனும் வேறு அல்ல என்று கூறப்பட்டது. அந்த ஸ்வரூபத்தை அடைவர். அது அல்லாமல், அங்கு சென்று சிவனிலிருந்து வேறாக இருந்து அவருக்கு சேவை செய்வார் என்று வேறுபாடு கூறப்படவில்லை.

முக்தியானது இருவகையாக வேதாந்திகள் அறிகின்றனர். ஞானத்தில் நிலைப்பாட்டால் ஜீவன்முக்தி என்று, நிலைப்பாடில்லாததால் விதேஹமுக்தி என்றும். வாழும்போதே முக்தி நிலையில் இருப்பது ஜீவன்முக்தி, உடல் வீழும்போது முக்தியை அடைவது விதேஹமுக்தி.

இங்கும் ஒரு சாரார் ஏற்பது, இந்த உடல் வீழ்ந்தபின்னர் அந்த சகுண பிரம்மத்தின் உலகத்தை அடைந்து அங்கு இந்த பிரம்ம ஞானத்தில் நிலைப்பாடு அடைந்து, அந்த சகுண பிரம்மனின் காலம் முடியும்போது அதனுடன் தானும் பரபிரம்மத்தில் ஐக்கியம் ஆகிறார்கள் என்று.

ஜீவன்முக்தியானது இந்த உடலில் வாழும்போதே தானும் பிரமமும் வேறில்லை என்ற திட ஞானத்தில் நிலைப்பட்டு, உடல் இருக்கும்போதே வேற்றுமை எண்ணங்களைக் களைந்து பிரம்மதிலேயே இருப்பது.

## பல்லோரும் ஏத்தப் பணிந்து. — 95

பல்லோரும் ஏத்தப் பணிந்து. – பலரும் பக்தியுடன் பணிந்து.

இந்த ஞான விஷயத்தைக் குறித்து அறிந்தவர் பக்தியுடன் பணிவர். அதுவல்லாமல், இங்கு வேறு பணிதல் அல்ல. அவர்களைக் குறித்துப் புகழுவது அந்த ஞானத்தையும் வைராக்யத்தையும் அடைவதற்கு. ஞானிகளைப் புகழுவதால், அவர்கள் செய்த புண்ணியம் நம்மை வந்து அடையும் என்று கூறப்பட்டுள்ளது.

ஞானிகள் பிறந்த, வாழ்ந்த மற்றும் மறைந்த இடம், நமக்கு அவர்களின் விவேக வைராக்யத்தை நினைவுறுத்தி, நாமும் அந்த நிலை அடைய முடியும் என்று உந்துதலாக இருப்பதற்கே.

வேதாந்தத்தில் பிருகதாரண்யக உபநிஷத்தில் இந்திரன் மற்றும் விரோசனனிற்கு, பிரஜாபதி அதே உபதேசத்தைக் கொடுத்தார். இந்திரன் மனது தூய்மையால் மீண்டும் மீண்டும் தன்னுடைய தவறை உணர்ந்து, குருவிடம் இருந்துகொண்டு 110 வருடங்கள் சேவை புரிந்து, முதல் முறையிலிருந்து கிடைத்த உபதேசத்தின் பொருளை கடைசியில் அடைந்தார். அதே உபதேசம் தான் மீண்டும் மீண்டும் தரப்பட்டது, வெவ்வேறு புதுப்புது உபதேசங்கள் இல்லை. தந்தை உத்தாலகரால் மகன் ஷ்வேதகேதுவிற்கும் 'தத் த்வம் அஸி' என்று 9 முறை உபதேசம் செய்யப்பட்டது. கிருஷ்ணனும் அர்ஜுனணிற்கு அதே உபதேசத்தை தான் 18 அத்தியாயங்களிலும் தந்தார்.

அதுபோல இங்கும், அதே உபதேசம் தான் மீண்டும் மீண்டும் கூறுகிறார். இங்கு மீண்டும் மீண்டும் கூறப்படும் உபதேசம் - மாயப்பிறப்பு அறுக்கும், பிறப்பருக்கும் எங்கள் பெருமான். பிறந்த பிறப்பு அழிக்கும் எங்கள் பெருமான், பிறப்பறுக்கும் பிஞ்ஞகன், பாசமாம் பற்றறுத்து, வினைப்பிறவி சாராமே, அல்லற்பிறவி அறுப்பானே என்பது முதலாக ஜீவன் பிறப்பற்ற நிலையை அடைய ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதைத் தவிர வேறு முறையில் இயலாது என்று நன்றாக உணர்த்தவே.

அதனால் இந்த சிவபுராணத்தை பொருள் உணர்ந்து படிப்பது, இந்த பிறவிப் பிணியை அறுப்பதற்கே என்பது உறுதியாகிறது.

**திருச்சிற்றம்பலம்**

